Deviyin KANMANI -Tamil Fortnightly FEBRUARY-1, 2009. Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப் பற்றி



'கண்மணி' வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

நீங்கள் எனக்களித்து வரும் பேராதரவும், வரவேற்பும்... என்னை சந்தோஷச் சாரலில் நனைய வைத்திருக்கின்றன.

''வண்ணப் பூச்சூட வா... வெண்ணிலா...!'' என்ற வித்தியாசமான நாவலின் மூலம் மீண்டும் உங்களை சந்திக்க வந்திருப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கதாநாயகி வெண்ணிலா ஒரு அழகுப் பெட்டகம்! சந்தர்ப்ப சூழ்நிலையால் விபத்தில் சிக்கி தன் காலை இழக்கிறாள். ஊனத்தைக் காரணம் காட்டி உதாசீனம் செய்தவர்கள் முன்... உத்வேகத்துடன் உழைத்து உயர்ந்து 'ஊனத்தையே ஊனமாக்கிக் காட்டுகின்றாள் வெண்ணிலா.

'மனதில் அழுக்கும், கெட்ட எண்ணங்களுமே உண்மையான ஊனம்... தன்னம்பிக்கையும், வைராக்கியமும் மன தைரியமும் இருந்தால்... எந்த ஊனமும் ஊனமல்ல' என்று கூறி வெண்ணிலாவுக்கு தூண்டு கோலாக, நண்பனாக இருக்கும் சூரியா... உங்கள் நெஞ்சத்தைத் தொடப்போவது உறுதி!

உச்சக்கட்டத்தில்... ஒரு பக்கம் சூரியா, மறுபக்கம் மனம் திருந்தி வந்த அத்தான் திவாகர்! இருவரில் யாருக்கு மாலை சூட்டப் போகிறாள் வெண்ணிலா? படித்துவிட்டு விமர்சிக்கவும்!

உங்களது கருத்துக்கள் என்னை மென்மேலும் மெருகேற்றும்!

மிக்க நன்றி!

-லட்சுமி பிரபா.



# வண்ணப் பூச்சூட வா வெண்ணிலா

அந்தப்பெருந்து பெரும் குலுக்கலுடன் 'சோத்துப்பாறை'யில் வந்து நின்று பெருமூச்சு விட்டு அடங்கியது.

''இறங்கு வானதி! இதான் சோத்துப்பாறை'' ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தபடி லயித்துக் கிடந்த தோழியின் தோளைத்தொட்டு அசைத்து விட்டு அவசரமாகப் பேருந்திலிருந்து உதிர்ந்தாள் வெண்ணிலா.

அவளைப் பின் தொடர்ந்து இறங்கிய வானதி வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்தாள்.

''வாவ்! பென்டாஸ்டிக்! பச்சைப் பசேல்னு மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அணை கட்டப்பட்டிருக்கு இல்லையா? 'சோத்துப்பாறை'ன்னு பெயரைக் கேட்டதும் நான் என்னமோன்னு நெனச்சிருந்தேன்... இவ்ளோ அழகான வனமா இருக்கும்னு நா எதிர்பார்க்கலை நிலா''.

''வராக நதி இங்கே தான் உற்பத்தியாகுது. சின்ன அணைக்கட்டு தான்...! மாந்தோப்பை ஒட்டி வராக நதி ஜதி போட்டுக்கிட்டு ஓடி வர்ற அழகை நீ பார்த்தேன்னா அசந்தே போயிடுவே தெரியுமா?'' பெருமிதத்துடன் புன்னகைத்தாள் வெண்ணிலா''.

''என் நிலா? இங்கே டீக்கடை, பொட்டிக்கடையெல்லாம் இருக்கே? பஸ்லே ஜனங்களும் நெறய வந்து இறங்கினாங்க. அந்தப்பக்கமா கிராமம் ஏதாச்சும் இருக்கா என்ன?'' சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கண்களில் ஆர்வம் மின்னக் கேட்டாள் வானதி.

''கிராமம் எதுவும் கிடையாது வானதி. வந்த ஜனங்கள்லே முக்கால்வாசி பேர் இங்க இருக்கிற தோப்புகள்லே வேலை பார்க்கிறவங்க... சமீப காலமாக 'சோத்துப்பாறை' கிட்டத்தட்ட சுற்றுலாத் தலமாகவே மாறிக்கிட்டிருக்கு''.

இந்த ரம்யமான வனத்தைச் சுத்திப்பார்க்கிறதுக்காகவும் ஜாலியா குளிக்க 'என்ஜாய்' பண்றத்துக்காகவும் வெளியூர்லே இருந்தெல்லாம் ஜனங்க வர ஆரம்பிச்சுட்டாங்க... வா இப்படி போகலாம்.''

வானதியின் கரத்தை வாஞ்சையுடன் பற்றியபடி நடந்தாள்

**லட்சுமி பிரபா**



வெண்ணிலா. வானதி தீவிரமாக யோசித்தாள். அவள் மனம் அசை போட ஆரம்பித்தது.

வெண்ணிலாவும் வானதியும் நகமும் சதையுமாக நெருங்கிப்பழகும் தோழிகள். இருவரும் 'பெரியகுளத்தில்' சிறு குன்றின் மீது இருந்த கலைக்கல்லூரியில் ஒன்றாகப் படித்தனர்.

பி.எஸ்சி. இறுதியாண்டு தேர்வுகள் இரண்டு நாட்களுக்கு முன்பே முடிந்து விட்டிருந்தன.

வெண்ணிலா 'பெரியகுளத்தைச் சேர்ந்தவள் என்பதால் கல்லூரிக்கு டவுன் பஸ்ஸில் சென்று வந்து கொண்டிருந்தாள்.

அவளது வீடு பஸ் ஸ்டாண்டிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலிருந்த புராதன சிறப்பு பெற்ற 'பாலசுப்பிரமணியர் கோவிலுக்கு' வெகு அருகில் அமைந்திருந்தது.

''நான் என்னோட சைக்கிள்லே சுதந்திரமா காலேஜுக்குப் போயிட்டு வந்துடறேனே... பஸ்சுக்கு காத்துக்கிடக்கறதுக்கு சைக்கிளிலேயே போயிடலாம் அப்பா?'' என்று வெண்ணிலா அடிக்கடி கெஞ்சிய போதெல்லாம் அப்பா சத்தியமூர்த்தி திட்டவட்டமாக மறுத்து விட்டிருந்தார்.

''நீ எங்களுக்கு ஒரே பொண்ணு ராஜாத்தி... சைக்கிள்லே வயசுப்பொண்ணு ஒத்தையில அவ்ளோ தூரம் போயிட்டு பத்திரமா திரும்பற வரைக்கும் நாங்க வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கணுமே?''

தினமும் சாயந்தரம் பஸ் அஞ்சு நிமிஷம் லேட்டாகிட்டாலே மனசெல்லாம் 'பக் பக்'குனு அடிச்சுக்குதே?

குணசேகரனைப் பாரு. பொண்ணு வானதியை ஹாஸ்டல்லே சேர்த்துட்டு அவர் பாட்டுக்கு நிம்மதியா உசிலம்பட்டியில அவரு காரியத்தை கவனிக்கிறாரு.

ஆனா நானும் உங்கம்மாவும் என்ன பாடு படறோம் தெரியுமா நிலா?''

''என்னால உங்களுக்கு என்னப்பா கஷ்டம்?''

''உலகத்துல உள்ள ஒட்டு மொத்த அழகையும் கொட்டி உன்னைப் படைச்சுட்டாரு அந்த பிரம்மா!

இந்த அழகு தேவதையை பத்திரமா உங்கத்தான் திவாகரன் கிட்டே ஒப்படைக்கிற வரைக்கும் எங்களுக்கு நிம்மதி இல்லே நிலா. அதைத்தான் உங்கப்பா அப்படி சொல்றாரு'' அம்மா சிவகாமி ஆசையுடன் மகளின் கூந்தலை வருடினாள். ''குணசேகரன் பாடு நிம்மதி. அவரோடு சின்னப்பொண்ணு வானதி ஹாஸ்டல்லே இருக்கிறதால தினப்படி பொண்ணைப் பிரிஞ்சிருக்கிற கஷ்டம் டென்ஷன்படத் தேவையில்ல. பொண்ணைப் பிரிஞ்சிருக்கிற கஷ்டம் மட்டும் தான். அது கூட என்னைக்கேட்டா ரொம்ப நல்ல டிரெயினிங்னு தான் சொல்வேன். படிப்பு முடிஞ்சு கட்டிக் கொடுத்துட்டா பொண்ணை நாங்க பிரிஞ்சு தானே ஆகணும்.

வானதிக்கும் இது நல்லது தான். தன்னம்பிக்கை, தைரியம், சுயமா சிந்திச்சு செயல்படறது இப்படி பல விஷயங்களையும் கத்துக்கிடலாமே?'' என்ற சத்தியமூர்த்திக்கு வானதியின் தந்தை

குணசேகரனின் மீது அலாதிப்பிரியம்.

குணசேகரனின் குடும்பம் உசிலம்பட்டிக்கு குடி போய் விட்டாலும் இன்னமும் அவர்களுக்கிடையே இருந்த நட்புறவு அறுந்து விடவில்லை.

குணசேகரன் இங்கு இருந்த வங்கியில் தான் பத்து வருடங்களுக்கு மேலாக பணியாற்றினார். சத்தியமூர்த்தியின் வீட்டுக்குப் பக்கத்தில் தான் அவர் குடியிருந்தார்.

ஆரம்பத்தில் அவர்களிடையே மெல்ல மலர்ந்து மணம் வீசிய சிநேகம். நாளாக ஆக நட்பு வட்டத்தைத் தாண்டி 'சொந்த பந்தத்திற்கு' உரிய உரிமையையும், நெருக்கத்தையும் வளர்த்து விட்டிருந்தது.

வெண்ணிலாவும் வானதியும் பத்தாம் வகுப்பு வரை ஒன்றாகத் தான் படித்தார்கள். அவர்கள் பத்தாம் வகுப்பு முடித்த தருணத்தில் குணசேகரனுக்கு ட்ரான்ஸ் பருடன் கூடிய பதவி உயர்வு கிடைத்தது.

இரு குடும்பங்களும் பிரிந்து விட்டாலும் அந்த ஊர்த்திருவிழாவிற்கு இவர்கள் செல்வதும், இவர்களது வீட்டு விசேஷங்களுக்கு அவர்கள் வருவதுமாக இருந்தனர்.

பற்களைக் கடித்துக் கொண்டு வானதி உசிலம்பட்டியில் ப்ளஸ் ஒன், ப்ளஸ்டூவை முடித்ததும் 'வெண்ணிலாவுடன் ஒரே கல்லூரியில் சேர்ந்து தான் படிப்பேன்' என்று ஒற்றை காலில் பிடிவாதமாக நின்று விட்டாள்.

வெண்ணிலா படிப்பில் கெட்டிக்காரி. அவளுடன் அட்டையாக ஒட்டிக்கொண்டு திரிந்ததில் பத்தாம் வகுப்பு வரை சொல்லிக் கொள்ளும்படியாக ஓரளவு நல்ல மதிப்பெண்களைத் தான் வாங்கி வந்தாள் வானதி.

அவளைப் பிரிந்து வந்ததும் சுத்தம்! 'இழுத்துக்கோ பறிச்சுக்கோ' என்று பார்டர் மார்க் வாங்கியவளுக்கு டியூஷன் வைத்துத் தேற்றிக் கொண்டு வருவதற்குள் குணசேகரனுக்கும் அவரது மனைவி குமுதத்திற்கும் விழிகள் பிதுங்கித்தான் போயின.

அதனால் மகள் வானதியின் ஆசைக்கு மறுப்பேதும் தெரிவிக்காமல் இருவரும் பச்சைக்கொடி காட்டி விட்டனர்.

''அப்பா! நிலாவோட புண்ணியத்துல ரொம்ப நல்லாப்படிச்சு எக்ஸாம்லே நல்லா எழுதியிருக்கேன். இது கடைசி வருஷம் பிளீஸ் அப்பா! நிலாவோட வீட்டுலே ரெண்டு வாரமாச்சும் தங்கிட்டு வரேன்.

இப்படியொரு சந்தர்ப்பம் திரும்பவும் அமையுமோ என்னவோ சரின்னு சொல்லுங்கப்பா'' உசிலம்பட்டியில் இருந்து மகளை அழைத்துச் செல்ல வந்திருந்த குணசேகரனின் தாடையைப் பிடித்துக் கெஞ்சியதும் அவரால் மறுக்க முடியவில்லை.

மகளை அழைத்து வந்து இங்கு விட்டு விட்டு அத்யந்த நண்பன் சத்தியமூர்த்தியுடன் ஒருநாள் தங்கி அளவளாவி விட்டு அவர் பிரியா விடை பெற்றுச் சென்றாள்.

இன்று காலையில் வானதிக்கு வழக்கத்திற்கு மாறாக வெகு சீக்கிரமாகவே விழிப்பு தட்டி விட்டது. பக்கத்து கட்டில் காலியாக இருந்தது.

கீழே பாயை விரித்து ஒருக்களித்துப் படுத்திருந்த சிவகாமி வானதியின் கொலுசு சப்தத்தைக்கேட்டு விழிகள் சுருங்க தலையைத்



தூக்கிப் பார்த்தாள்.

''என்னம்மா வானதி? நிலாவைத் தேடறியா? அவ பின் பக்கத்துத் தோட்டத்துக்குப் போயிருப்பா...'' மெல்ல முணு முணுத்து விட்டு படுத்துக் கொண்டாள்.

கூடம், முற்றம், தாழ்வாரம், ரேழியைத் தாண்டி கொல்லைப்புறத்துக்குச் சென்றாள் வானதி. கிணற்று மேடையைத் தாண்டித் தெரிந்த தோட்டத்துக்குள் தயங்கியபடி நடந்தாள். சலசலவென்ற நீரோடையின் சப்தம் செவிகளை ஸ்பரிசித்தது.

தோட்டத்தைத் தாண்டியதும் நீண்ட வாய்க்கால்.

''நிலா... நிலா'' சுற்றும் முற்றும் பார்வையால் துழாவினாள்.

ஈசான மூலையில் நின்ற பவள மல்லி மரத்தின் அடியில் குனிந்து பூக்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த வெண்ணிலா சட்டென்று நிமிர்ந்தாள்.

ஈரப்புடவை, ஈரமான கூந்தலை நுனியில் முடிச்சிட்டிருந்தவள் தெய்வீக அழகுடன் மிளிர்ந்தாள். முந்தானையை விரித்து பூக்களை அள்ளிப்போட்டபடி நடந்து வந்தாள்.

''என்ன நிலா? இந்த நேரத்துக்கு குளிச்சிட்டே? நீ தினமும் இங்க தான் குளிப்பியா?''

''இது வராக நதி. புண்ணிய நதி தெரியுமா? இதில குளிக்கக் கொடுத்து வச்சிருக்கணும். தினமும் குளிக்கிறதில்ல. அப்பா ஒரு ஜோசியரை பார்த்தாராம். அத்தானோட ஜாதகத்தைப் பார்த்துட்டு ஒரு பரிகாரம் செய்யச் சொன்னாங்களாம்.

தலைக்கு குளிச்சு சுத்தபத்தமா பக்கத்துல இருக்கிற பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குப் போய் அங்கே பிரமாண்டமான தூணில் நின்ற கோலத்துல இருக்கிற துர்கைக்கு பவள மல்லியைக் கோர்த்து மாலையா சாத்தி எலுமிச்சம்பழ விளக்கேத்தி வணங்கணுமாம்.

பிரகாரத்தை ஒன்பது சுத்து சுத்திட்டு கொடி மரத்துக்கு முன்னாடி விழுந்து கும்பிட்டுட்டு வரணுமாம். அதான்! இந்தப்பூவை பறிச்சு நூல்லே மாலையா கோர்க்கப்போறேன்'' புன்னகைத்தாள் வெண்ணிலா.

''அப்படியா? நானும் கூட வரேன். ஆமா... இந்தப்பரிகாரத்தை இன்னிக்கு ஒருநாள் பண்ணினால் போதுமா?''

''இல்ல. நாற்பத்தெட்டு நாளைக்கு பண்ணணும்''

''வேலைக்காரியை எப்படி தேர்ந்தெடுத்தே? புரியலையே!''

''அக்கம் பக்கத்து வீடுகளைப் பத்தி அக்குவேரா, ஆணிவேரா புட்டு புட்டு வைக்கிறாளே''.

-ஆர்.தங்கராஜ், திருப்பூர்.



''என்னது? இத்தன நாளா? டெய்லி விடியக்காத்தால தலைக்கு குளிச்சுட்டு பண்றியா? ஏன் நிலா? இதை உங்கத்தை செய்தா என்னவாம்?''

''அவங்களுக்கு உடம்புக்கு முடியலை வானதி. ரெண்டு நாள் தலைக்கு தண்ணி விட்டாலே அவங்களுக்கு ஆச்சு போச்சுன்னு ஆயிடும். அதான்''

''அது சரி! ஆமா உங்கத்தை பொண்ணு திலகா இருக்காளே? அவ தன்னோட அண்ணனுக்காக இதெல்லாம் செய்ய மாட்டாளாமா?''

''திலகா பாவம்! அவளுக்கு பூஞ்சை உடம்பு. வீஸிங் டிரபிள் வேற இருக்கு. அதான்! வா... உள்ளே போகலாம்''

''சரி தான்! அவங்க எல்லாரும் பத்திரமா உடம்பை அலட்டிக்காம இருக்கட்டும். பரிகாரத்தை யார் செய்தா என்ன? உண்மையான அக்கறையோட பக்தியோட பகவானை வேண்டிக்கிட்டா செவி சாய்க்காமலா போயிடுவார்னு விளக்கேத்த கிளம்பிட்டே?

இன்னியிலேர்ந்து தான் ஆரம்பிக்கப்போறியா நிலா?''

''ஊகூம்! நேத்தைக்கே ஆரம்பிச்சுட்டேன். நீ அசந்து தூங்கிட்டே. உன்னை எழுப்ப மனசில்லாம போயிட்டேன்.''

''நான் சரியான கும்பகர்ணி. கோவில் கிட்டக்க கூப்பிடு தொலைவிலே இருக்கிறதால தனியாவே போயிட்டியா?'' ஆர்வமாய் கேட்டாள் வானதி.

கூடத்தில் சாமி மாடத்தின் கீழே இருந்த மனைப்பலகையின் மீது முந்தானையில் முடிந்து வைத்திருந்த பவள மல்லிப்பூக்களை வைத்து விட்டு நிமிர்ந்தாள் வெண்ணிலா.

''இல்ல. அப்பாவும் துணைக்கு வந்தாரு. நான் புடவையை மாத்திட்டு வந்து பூவைக் கோர்க்கணும். நீ வேணும்னா போய் படுத்துக்கோ வானதி.''

''நிலா! நானும் வரேனே? நீ மாலையா கோர்த்து முடிக்கும் முன்னே நான் ரெடியாகிடறேன்'' ஓட்டமும் நடையுமாக பாத்ரூமை நோக்கி விரைந்தாள் வானதி.

சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயம் அது. ஆள் அரவமற்று இருந்ததால் நிம்மதியாக நிச்சலனமாக தரிசிக்க முடிந்தது.

எலுமிச்சம்பழத்தில் விளக்கேற்றி விட்டு மண்டியிட்டு அமர்ந்து கைகளை ஏந்தியபடி கண்ணீர் மல்க அண்ணாந்து துர்க்கையைப் பார்த்தாள் வெண்ணிலா.

பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள் வானதி.

தும்பைப்பூவாக வெளுத்த வேட்டி சட்டையை அணிந்து கொண்டு மனமுருக வேட்டி, சட்டையை அணிந்து கொண்டிருந்த சத்தியமூர்த்தியைப் பார்த்ததும் வானதியின் நெஞ்சம் நெகிழ்ந்து போனது.

மனதில் இனம் புரியாத நெருடல்.

''வானதி''

''வானதி... பலத்த யோசனையா?'' எதிரே நின்ற வெண்ணிலா, அவளது கன்னத்தில் வலிக்காமல் செல்லமாய் தட்டினாள். சட்டென்று



சிந்தனை கலைந்த வானதி அசடு வழிய தோழியை ஏறிட்டாள்.

''மாந்தோப்புக்குள்ளே புகுந்து நடந்து வராக நதியில் இறங்கப் போறோம். வா! மரங்கள் எல்லாம் தாழ்வா அடர்த்தியா இருக்கு. பாரேன்''

''அட... ஆமா நிலா! மாங்காய் கொத்துக் கொத்தா தலை மேலே இடிக்கிறாப்பல இருக்கே. ரொம்ப ரொம்ப அழகா இருக்குப்பா'' நாக்குல ஜலம் ஊறுது''

''பார்த்து வானதி! ஆர்வக்கோளாறுல காயை பறிச்சுடாதே. தோப்பைக் குத்தகைக்கு எடுத்தவங்க எங்கயாவது மறைஞ்சு நின்னு கண்காணிச்சுட்டு இருப்பாங்க வா!

சரிவுலே ஜாக்கிரதையா இறங்கு. உனக்கு வேணுங்கிற மாங்காய்களை நம்ம தோப்பிலேர்ந்து எடுத்துத் தரேன்''

சரிவில் இறங்கி மார்பளவு தண்ணீரில் அமிழ்ந்து நீராடினார்கள்.

''உங்க மாந்தோப்பு பக்கத்துல தானே இருக்கு நிலா?''

''ஆமா அப்பா மதியம் ரெண்டு மணிக்கு லாரியோட வந்துடுவாரு. தோப்புலே கூலியாளுங்க காய்களைப் பறிச்சு கூடைகள்லே அடுக்கிக்கிட்டிருப்பாங்க.

அத்தான் எம்.பி.பி.எஸ்., முடிச்சுட்டு எம்.எஸ். கடைசி வருஷம் பண்றாரு இல்லையா? பணம் தேவைப்படுதுன்னு அவர் சொன்னதால அப்பா அவசரமா காய்களைப் பறிச்சு மார்க்கெட்டுக்கு அனுப்பறாரு''

வானதிக்கு சுரீரென்றது.

அப்பா சத்தியமூர்த்தியைப் போலவே வெண்ணிலாவுக்கு தங்கமான குணம். வெள்ளை மனம்.

''வெண்ணிலா' அந்த ஆகாய வெண்ணிலாவிற்கு கை, கால்கள் முளைத்து பூமியில் இறங்கி விட்டாற் போன்ற பேரழகு.

இந்த குணத்திற்கும், பேரழகுக்கும் அந்த திவாகரன் ஏற்றவன் தானா? தகுதி வாய்ந்தவன் தானா?

வானதியின் நெஞ்சில் நெருஞ்சி முள் தைத்தது.

இல்லை. இந்த அன்பான குடும்பமே ஏமாறப்போகிறது. அவளது உள் மனம் எச்சரித்தது.

வரப்போகும் மிகப்பெரிய விபரீதத்தை உணராமல் வெண்ணிலா வாளை மீனாய் நீந்திக் கொண்டிருந்தாள்.

## 2

மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து சிலுசிலுவென்று தவழ்ந்து வந்த மந்த மாருதம் மாமரக்கிளைகளை மெல்லத் தாலாட்டியது. மாம்பிஞ்சுகளின் பால் மணம் காற்றில் கலந்தது.

சலசலவென்று இலைகள் சப்திக்க கொத்துக் கொத்தான காய்களோடு கிளைகள் அசைந்த அழகை பார்வையால் வருடிக் கொடுத்தாள் வெண்ணிலா.

''நிலா! எனக்கு கபகபன்னு பசியெடுக்க ஆரம்பிச்சிருச்சு. இந்த இடம் ரொம்ப அழகுப்பா. கோடை காலம்கிறதே

மறந்து போச்சு.

தண்ணியைப் பாரு. சின்ன குண்டூசியைப் போட்டாக்கூட பளிச்சுன்னு தெரியும் போல. கிறிஸ்டல் கிளியரா தித்திப்பா இருக்குப்பா'' சொல்லிக் கொண்டே ஒரு மடக்கு தண்ணீரைப் பருகினாள் வானதி.

''வா வானதி! காரசாரமான புளியோதரை, தக்காளி சாதம் இருக்கு. தொட்டுக்க வெங்காயச் சட்னியும், புதினாத்துவையலும் இருக்கு.

அம்மா தனித்தனியா பார்சல்களைக் கட்டிக்கொடுக்கும் போது 'எதுக்கு' அம்மா இவ்ளோ வைக்கிறீங்க? நாங்க ரெண்டு பேரும் இவ்வளோவா சாப்பிடப் போறோம்னு கேட்டியே?

இப்போ, பாரேன். சாப்பிட சாப்பிட வயிறு 'கொண்டா கொண்டா'ன்னு கேட்கப்போகுது. தண்ணியில முங்கித்திளைச்சாலே கபகபன்னு யானைப்பசி வந்துடும்.

இந்தா சாப்பிடு. இப்படி இந்தக்கல்லு மேலே உட்கார்ந்துக்கோ வானதி'' பார்சலைப் பிரித்து வாகாய் தோழியின் மடியில் வைத்தபடி உபசரித்தாள் வெண்ணிலா.

'சர்ரக்... சர்ரக்' என்று சருகுகள் மிதிபடும் சப்தத்தைக் கேட்டதுமே இருவரும் பின்னால் திரும்பிப் பார்த்தனர்.

மேல் துண்டால் இலேசாக முகத்தை ஒற்றியபடியே மெல்ல நடந்து வந்தார் சத்தியமூர்த்தி.

''என்ன பொண்ணுங்களா? இப்பத்தான் சாப்பிடவே உட்கார்ந்தீங்களாக்கும்? ஆசை தீரக்குளிச்சாச்சு இல்லையா? சாப்பிட்டதும் கௌம்பிடலாமா?''

''அப்பா... அப்பா...! பிளீஸ் இங்கியே இருந்துட்டு வெயில் தாழ்ந்ததும் சாயந்தரமா கிளம்பலாமே? இந்த இடத்தை விட்டு நகரவே மனசில்லைப்பா பிளீஸ்'' வெண்ணிலா கெஞ்சினாள்.

''ஆமா அப்பா! இத்தனை வருஷமா இந்த இடத்தைப் பார்க்காம மிஸ் பண்ணிட்டோமேன்னு வருத்தமா இருக்கு. தினமும் பஸ் பிடிச்சு இங்கே வந்துடணும்னு ரொம்ப ஆசையா இருக்குப்பா'' விழிகள் விரியப் பரவசமாய் கூறிய வானதியைப் பார்த்ததும் மெல்ல நகைத்தார் சத்தியமூர்த்தி.

''அதெப்படி? இன்னிக்கு எனக்கு இங்கே ஜோலி இருந்ததாலே முன்கூட்டியே பஸ்லே உங்களை அனுப்பிச்சுட்டு லாரிக்கு ஏற்பாடு

'' பொண்ணுக்கு நல்ல பசையுள்ள இடமா பாருங்கன்னு தரகர்கிட்ட சொன்னது தப்பாப் போச்சு''

''ஏன் என்னாச்சு''

''போஸ்டர் ஒட்டும் ஆளைக் கூட்டிட்டு வந்துட்டார்''

-ஆர்.மதுமதி, மதுரை.





பண்ணிட்டு அரக்கப்பரக்க ஓடியாந்தேன்.

வயசுப் பொண்ணுங்க தெனமும் துணைக்கு ஆள் இல்லாம இங்கெல்லாம் வர முடியாது. உங்களைத் தனியா அனுப்பவும் முடியாதே?

இந்தாம்மா! இந்தப்பையில காராசேவு, பக்கோடா ஓமப்பொடியெல்லாம் இருக்கு. நான் கிட்டக்க இருந்தாத்தான் ஆளுங்க ஒழுங்கா சீக்கிரமா வேலை செய்வாங்க.

ரொம்ப நேரம் தண்ணியில முங்கிக் கிடக்காதீங்க.

இப்பவே கண்ணெல்லாம் ஏகத்துக்கும் சிவந்து கெடக்கு. சளி பிடிச்சுடப்போகுது.

வேலை முடிஞ்சதும் ஓடியாந்துடறேன். இங்கனயே இருங்க என்ன?'' என்று கூறிவிட்டு நாலு எட்டு வைத்தவர் மீண்டும் திரும்பி வந்தார்.

''வானதி பொண்ணு ஆசைப்படறாளேன்னு ரெண்டு மூணு நாளைக்கு 'அரவை மில்லை' மூடிட்டு இப்படி உங்க கூட துணையா வந்துடலாம் தான்.

ஆனா... சுத்து வட்டாரத்துல இருந்து நிறைய வாடிக்கையாளர்கள் மிளகாய், தனியா, கோதுமை, அரிசி, கேழ்வரகு, மஞ்சள், அரைக்கிறதுக்கு நம்ம 'அரவை மில்லைத் தேடி வந்துக்கிட்டிருக்காங்க.

நிறைய லேடீசுங்க வீடு தேடி கூட வந்திடுவாங்க.

நம்பகமா நல்லா திருப்தியா அரைச்சுக்கொடுக்கறோம்னு ஜனங்க மத்தியில நல்ல பேர் இருக்கு. அவங்களுக்கு எந்தவித பாதிப்பும் வந்துடக்கூடாது.

அதே சமயம் இப்போ நம்ம பொருளாதார நிலைமையும் சரியில்லை. ஒரு நாள் லீவு போட்டாலே வருமானம் கணிசமா வராதேன்னு கவலைப்பட்டுக்கிட்டிருக்கேன். அதான்'' என்று கூறிவிட்டு மீண்டும் நடந்த சத்தியமூர்த்தியின் முகம் வருத்தத்தில் தோய்ந்திருந்தது.

சத்தியமூர்த்தி பெயருக்கு ஏற்பவே சத்தியம் தவறாத நாணயமான மனிதர். வாக்கு மாறாதவர். இரக்க சுபாவமும் இளகிய மனமும் படைத்தவர்.

அதிர்ந்து பேசத்தெரியாதவர். அதே சமயம் 'வெளுத்ததெல்லாம் பால்' என்று நம்பி ஏமாந்து விடுபவர்.

கடுமையான உழைப்பாளி. சுயநலமாய் சிந்திக்கவே தெரியாத மனிதர்.

தமது ஒரே மகள் வெண்ணிலாவின் மீது பாசமழை பொழிபவர் தான்.

ஆனால் தமது கூடப்பிறந்த தங்கை சரோஜினியின் மீது உயிரையே வைத்திருந்தார் என்று தான் சொல்ல வேண்டும்.

பெரியகுளத்தில் பத்து ஏக்கரில் தென்னந்தோப்பு, நஞ்சை, புஞ்சை நிலங்கள், இரண்டு வீடுகள் என்று வசதியாக இருந்தவர் தான்.

தங்கையின் கணவர் குடி, சூதாட்டம் என்று சகல கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையானவர் என்று தெரிந்தபோது சத்தியமூர்த்திக்கு சர்வமும் பதறியது.

சரோஜினியின் வாழ்க்கை பாழாகி விட்டதே என்று கலங்கிக் கொண்டிருந்த வேளையில் தங்கையின் கணவர் குடிபோதையில் லாரியில்

அடிபட்டு இறந்து விட்டார் என்ற செய்தி வந்தது.

அது மட்டுமல்ல ஊரைச்சுற்றி கடன் வைத்துவிட்டுப் போனதோடு சத்தியமூர்த்தி தனது தங்கைக்கு சீதனமாக கொடுத்த வீட்டையும் அடமானம் வைத்துவிட்டு அகால மரணம் அடைந்து விட்டார்.

இளம் வயதிலேயே விதவையாகி விட்ட தங்கையை ஏறிட்டுப்பார்க்கக்கூட அவருக்குத் திராணியிருக்கவில்லை.

அப்போது திவாகருக்கு நான்கு வயதிருக்கும். திலகாவுக்கோ ஒரு வயது கூட ஆகியிருக்கவில்லை.

சத்தியமூர்த்தி மானஸ்தர். தங்கையின் கணவர் வைத்து விட்டுப்போன கடன்களை அடைப்பது தமது கடமை என்று முடிவெடுத்தார்.

கடன்காரர்கள் யாரும் வீட்டுப்படியேறி வந்து சரோஜினியை ஒரு வார்த்தை பேசிவிடக்கூடாது என்பதில் மிகவும் குறியாக இருந்தார்.

கடன்காரர்களிடம் சமரசம் பேசி கடன்களை அடைப்பதற்கு சிறிது அவகாசம் அளிக்கும்படி வேண்டிக் கொண்டார்.

அரவை மில்லில் அயராது பாடுபட்டார். நிலத்தில் வந்த வருமானம் அது இது என்று பணத்தைப் புரட்டி கொஞ்சம் கொஞ்சமாக கடனை அடைத்து விட்டு நிமிர்வதற்குள் அவருக்கு போதும் போதுமென்றாகி விட்டது.

கடனில் மூழ்கிக் கொண்டிருந்த வீட்டையும் மீட்டுக் கொடுத்தார். மெல்ல மெல்ல அவர் நொடியத் தொடங்கினார்.

சிவகாமியும் சத்தியமூர்த்தியும் சரோஜினியை தங்களுடன் சேர்ந்து வசிக்கும்படி வற்புறுத்தியும் அவள் கடைசி வரை ஒப்புக் கொள்ளவே இல்லை.

''நான் என்ன ஒண்டி மனுஷியா? எனக்கு மகனும் மகளும் துணையா இருக்காங்கல்ல... நான் என்ன வெளியூர்லே நாதியத்துப்போய் கிடக்கிறேனா?

ரெண்டு தெரு தள்ளி தானே இருக்கேன்... நீ பக்கத்துல தானே இருக்கே... கொஞ்சம் எட்ட இருந்தாத்தான் உறவு என்னிக்கும் நீடிக்கும்கிறது என்னோட கருத்து...

அங்கே வந்து ஒண்ணா ஒரே வீட்டுலே இருந்து எசகு பிசகா மனஸ்தாபத்துலே ஒரு சுடுசொல் வந்திடுச்சுன்னா? என்னால தாங்க முடியாது அண்ணே.

நான் ஏற்கனவே ரொம்ப அடிபட்டுட்டேன். இதுக்கு மேல எதையும் தாங்கிக்கற சக்தி என் மனசிலேயும் கிடையாது. உடம்பிலேயும் கிடையாது அண்ணே.

என்னை வற்புறுத்தாதே அண்ணே... புரிஞ்சுக்கோ...

அருமை தங்கை சரோஜினி பிழியப்பிழிய அழுததும் சத்தியமூர்த்திக்கு சங்கடமாகி விட்டது.

''அம்மாடி சரோஜினி! உன் இஷ்டம். இதுக்கு மேல நா உன்னை வற்புறுத்த மாட்டேன். இந்த அண்ணன் குத்துக்கல்லாட்டம் இருக்கும் போது நீ என்னத்துக்கு கண் கலங்கறே?'' என்று உருகிப்போய் விட்டார்.



நீலிக்கு நெற்றியில் கண்ணீர் என்பார்கள்.

சரோஜினி நீலிக்கண்ணீர் வடித்தே காரியத்தை சாதித்துக் கொண்டாள்.

வானதிக்கு தோழியின் குடும்ப விவகாரம் முழுவதும் தெரியுமாதலால் தளர்ந்த நடையுடன் சென்ற சத்தியமூர்த்தியைப் பார்க்கவே அவளுக்கு பாவமாக இருந்தது.

அப்பா வருத்தமாகப் பேசிவிட்டுச் சென்றதால் வெண்ணிலாவுக்கு மனதைப் பிசைந்தது. வாய்க்குள் திணித்துக் கொண்ட புளியோதரை தொண்டைக்குள் இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

சத்தியமூர்த்தி நாலடி கூட நடந்திருக்க மாட்டார். அவரது சட்டைப்பையில் வைத்திருந்த செல்போன் கிணுகிணுத்தது.

நம்பரைப் பார்த்தார்.

''சொல்லும்மா சரோஜினி! ஆங்... சரி! அதெப்படிம்மா நான் மறப்பேன்? எல்லாம் ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கேன்.

எப்படியாவது பணத்தைப் புரட்டி ராத்திரிக்குள்ளே கொண்டாந்து உன் கையில கொடுத்துடறேன். நீ விசனப்படாம இரும்மா.

அண்ணன் நானிருக்கையில உனக்கென்ன கவலை சொல்லு? ஆங்... சரி! வச்சுடும்மா''

செல்போனை சட்டைப்பாக்கெட்டில் வைத்து விட்டு விடுவிடென்று நடந்தார் சத்தியமூர்த்தி.

தங்கையின் மீது உயிரையே வைத்திருந்த மனிதர் அவர். அந்த அருமைத் தங்கையின் மூலமாகவே அவரது உயிரையே உருவி எடுத்து விடுவதற்கு தக்க தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது விதி!

## 3

'கூ... குக்கூ... கூ...' எங்கிருந்தோ ஒரு குயில் இடைவிடாமல் கீதம் பாடிக் கொண்டிருந்தது.

சாப்பிட்டு கையலம்பி விட்டு மீண்டும் தண்ணீருக்குள் அமிழ்ந்து நீந்திய வெண்ணிலா அண்ணாந்து சுற்றும் முற்றும் மரக்கிளைகளை ஆராய்ந்தாள்.

''வானதி! குயில் கூவறதைக் கேட்கும் போது அப்படியே நம்ம காதுலே தேன் பாய்ந்தோடறது மாதிரி இருக்கு இல்ல?

சுதந்திரமா எந்தக் கவலையுமில்லாம ஏகாந்தமா அழகாப் பாடுது இல்லியா?''

வெண்ணிலாவுக்கு ரசனை அதிகம். சின்னச் சின்ன விஷயங்களைக் கூட கூர்ந்து பார்ப்பாள்.

இயற்கையை ரசிப்பதிலாகட்டும். சங்கீதத்தை கேட்பதிலாகட்டும், சமையல் செய்வதிலாகட்டும். எதிலுமே அவளது அலாதி ரசனை அழகாக வெளிப்படும்.

''நிலா! உன் அளவுக்கு நுணுக்கமான ரசனை எனக்கு இல்லைப்பா. அழகான வனத்துல குயில் கூவுது. அவ்வளவு தான்'' என்றபடியே தோழியை ஏற இறங்க நோட்டமிட்டாள் வானதி.

கரு நீல வண்ணக் காட்டன் புடவையுடன் நீருக்குள் அமிழ்ந்திருந்த வெண்ணிலா. அழகிய நீல மலர் போல் கண்களைக் கட்டிப் போட்டாள்.

ஈரத்தில் நனைந்திருந்த புடவை அவளது தாழம்பூ நிறத்தை எடுப்பாகக் காட்டியது.

வானதி தோற்றத்தில் சுமாரான பெண் தான். மாநிறத்திற்கும் சற்றுக் குறைச்சலான நிறம் தான்.

ஆனால் என்றுமே தோழியின் எல்லையில்லா வனப்பையும், எழிலையும் கண்டு அவள் பொறாமைப்பட்டதே இல்லை.

''கடவுள் உனக்கு அழகை மட்டும் அள்ளித் தரலை நிலா! ரசனை, அறிவு, பொறுப்பு, பொறுமை, அன்பு, பண்பு, குணம்னு... எல்லாத்தையும் ஒட்டு மொத்தமா குடுத்திருக்காருப்பா'' என்ற கூறிய வானதிக்கு உள்ளுக்குள் சின்னதாய் வேதனை வேரூன்றியது.

'இப்பேர்ப்பட்ட பெண்ணிற்கு போயும் போயும் அந்த திவாகரா கணவனாக அமைய வேண்டும்?'

மனதிற்குள் திரும்பத் திரும்ப இதே எண்ணம் தான் சுற்றிச் சுழன்றது. அலை மோதியது. அவளை அலைக்கழித்தது.

''என் நிலா? நான் ஒண்ணு கேட்டா... நீ தப்பா நெனச்சுக்க மாட்டியே?'' தயங்கியபடியே அவளை ஏறிட்டாள் வானதி.

''நீ என்னோட ஆருயிர்த் தோழி! நான் என்னிக்குமே உன்னைத் தப்பா நெனக்க மாட்டேன். கேளு! காலையிலே இருந்தே நான் கவனிச்சுட்டு தான் இருக்கேன்.

அப்பப்போ தீவிரமா சிந்திக்க ஆரம்பிச்சுடறே. கேட்டா மழுப்பலா பதில் சொல்றே? என்னாச்சு உனக்கு? என்கிட்டே எதையுமே நீ மறைக்க மாட்டியே?''

''சொல்றேன் நிலா! எதையும் என்கிட்டே நீயும் மறைச்சதில்லையே? இல்ல... நீ உங்க அத்தான் திவாகரை லவ் பண்றியாப்பா?''

சரக்கென்று நிமிர்ந்து வானதியின் விழிகளை ஊடுருவினாள் வெண்ணிலா.

''என்ன வானதி? இப்படி கேட்டுட்டே? எனக்கும் 'காதல்' என்கிற வார்த்தைக்கும் வெகு தூரம்னு உனக்குத் தெரியாதா?

ஓ! இப்போ புரியுது. என்னடா இவ... இவ்ளோ சிரத்தை எடுத்துக்கிட்டு தினமும் கோவிலுக்குப் போயி விளக்கேற்றி பிரகாரத்தைச் சுத்தி வர்றாளேன்னு பார்க்கிறே?

ஒரு வேளை அத்தான் மேல உள்ள காதலால தான் இப்படி மெனக்கெடறேன்னு நீ நினைச்சுட்டே போலிருக்கு!

அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல வானதி!

சின்ன வயசிலேர்ந்து ஒண்ணா வளர்ந்து விளையாடி இருக்கோம். அது உனக்கே தெரியுமே?

அத்தான் மேல எனக்கு நிறைய அன்பு இருக்கு. பாசம் இருக்கு. அக்கறை இருக்கு. அவ்வளவு தான்!



ஆனா பெரியவங்க எங்க ரெண்டு பேரையும் சின்ன வயசிலேர்ந்து 'நிலாவுக்கு திவாகர்' 'திவாகருக்கு நிலா'ன்னு முடிச்சுப் போட்டுத்தான் பேசிட்டிருக்காங்க. 'அதுவும் உனக்கே தெரியுமே?''

''தெரியும் நிலா. இவர் தான் வருங்காலக் கணவரா வரப்போறார்னு திவாகரைப் பார்க்கும் போதெல்லாம் உனக்கு சிலிர்ப்பு ஏற்படலையா?

இவர் தான் நமக்குன்னு ஊர்ஜிதமா தெரிஞ்சப்புறம்... வேற எந்தவிதமான பீலிங்ஸ்ும் ஏற்படலையா?''

''அத்தான் மேலிருக்கிற அன்பு கனிஞ்சு காதலா மாறிடுச்சான்னு கேட்கறியா? இல்ல. அப்படி எதுவும் இல்ல.

பெத்தவங்க கஷ்டப்பட்டு நம்மைப் படிக்க வைக்கிறாங்க. நம்ம கடமை படிக்கிறது மட்டும் தான்.

பொண்ணுங்க மனசை அலைபாய விடாம கட்டுக்குள்ளே வச்சுக்கணும். அது தான் நல்லது. இல்லையா?

காதல் கத்திரிக்காய் இதெல்லாம் எனக்கு எட்டிக் காயா கசக்கிற விஷயம். அதுலே எனக்கு நம்பிக்கையும் இல்லை.

அந்த மாதிரியான உணர்வு கல்யாணத்துக்கு அப்புறம் ஏற்படுமோ என்னவோ? யார் கண்டா?

ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் வானதி. அத்தையோட குடும்பத்தைத் தூணா நின்னு எங்கப்பா தாங்கிட்டிருக்காரு.

அத்தானோட படிப்பு முடிஞ்சு நல்ல வேலை கிடைச்சுட்டா... அந்தக் குடும்பமே நிமிர்ந்திடும்.

அது தான் அப்பாவோட லட்சியம்! பிரார்த்தனை! இத்தன வருஷமா அவர் பட்ட பாட்டுக்கு ஒரு நல்ல பலன் கிடைக்கணும்.

அப்பாவோட பாரம் இறங்கணும். அது தான் என்னோட வேண்டுதல்! அத்தானைப் பார்க்கும் போதெல்லாம் இவர் சீக்கிரமே நல்ல பதவியில உட்கார்ந்து கை நிறைய சம்பாதிக்கணுமே?' அப்படீங்கிற எண்ணம் தான் எனக்குள்ளே எழும்பும்.

இதைப் பத்தியா. அவ்ளோ தீவிரமா யோசிச்சுட்டிருக்கே போடி மக்கு!'' என்று கூறி விட்டு நீந்தியபடி கரையேறினாள் வெண்ணிலா.

''எதை எதையோ நினைச்சு மூளையைப் போட்டுக் கசக்காம நல்ல

''நீ குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. தண்டனை உறுதி. ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?''

''விலைவாசி எல்லாம் ரொம்ப ஏறிப் போச்சி எஜமான். அதனால் எனக்கு அதிகபட்ச ஜெயிலில் தண்டனை கொடுத்து உள்ளே தள்ளுங்க.

-வந்தை ஜி.கே.நிதி, வந்தவாசி.



என்ஜாய் பண்ணு. உனக்காகத் தான் 'சோத்துப்பாறை'க்கு வந்திருக்கோம்.

உனக்கு காராச்சேவுன்னா உசிராச்சே? வா! இப்படி வந்து உட்காரு. கொஞ்சம் கொறிக்கலாம்''.

''நிலா! உன் மனசு நிறைய குடும்பப் பொறுப்பு, கடமை உணர்ச்சி, பாசம் இதெல்லாம் ஆக்கிரமிச்சிருக்கிறதாலே தான். உனக்குள்ளே காதல் என்கிற உணர்வு இன்னமும் தலை தூக்கலேன்னு நான் நினைக்கிறேன்'' அருகில் வந்தாள் வானதி.

''அப்பாடா! ஒரு வழியா புரிஞ்சுக்கிட்டியா? போதும் இதுக்கு மேலே எதையும் கேட்காதே. ஆ... காட்டு!'' காராசேவை வாயில் திணித்தாள் வெண்ணிலா.

அணில்கள் மாமரக் கிளைகளில் ஏறுவதும், இறங்குவதும், தாவுவதும் ஒன்றையொன்று விரட்டுவதுமாக கும்மாளமிட்டுக் கொண்டிருந்தன.

திடீரென்று மரத்திலிருந்து எதுவோ பொத்தென்று வெண்ணிலாவின் மடியில் வந்து விழுந்தது.

என்னவோ ஏதோ என்ற பயத்தில் வீலென்று அலறி விட்டாள் வெண்ணிலா.

இவள் அலறுவதைப் பார்த்து விட்டு திகிலில் வானதியும் 'ஐயோ அம்மா நிலா' என்று குழறினாள்.

மறுகணமே 'கிக்கீ... கிக் கிக்கீ' என்று பதற்றமாகக் கத்தியபடி அவர்களது தலைக்கு நேரே இரு பஞ்சவர்ணக் கிளிகள் வட்டமிட்டுப் பறக்க ஆரம்பித்தன.

பீதியுடன் குனிந்து பார்த்த போது பஞ்சவர்ணக் கிளிக்குஞ்சு ஒன்று பறக்கத் திராணியின்றி தன் அலகைப் பெரிதாக திறந்து திறந்து மூடியது.

''பாவம்! கிளிக்குஞ்சு எப்படியோ கூட்டிலிருந்து தவறிக் கீழே விழுந்துடுச்சு போலிருக்கு.

பெரிய கிளிங்க தவிப்போடு சுத்திப் பறந்து வர்றதைப் பாரேன்.''

இதுவே வேறொரு சமயமாக இருந்தால் பஞ்சவர்ணக் கிளிகள் பறக்கும் அழகை அணு அணுவாய் பார்த்து ரசித்திருப்பாள் வெண்ணிலா.

''இதை எப்படியாவது அதோட கூட்டிலே விட்டிறணுமே! மெல்ல முணுமுணுத்தவளின் பார்வை மேலே சுற்றும் முற்றும் அலசி விட்டு கடைசியாக சற்று உயரே இருந்த கிளையின் மீது பாவின.

''அதோ அந்தக்கூடு தான். கிளை உயரத்துல இருக்கே. எனக்கு எட்டலையே? என்ன செய்ய?'' உள்ளங்கைகளில் கிளிக் குஞ்சை பத்திரமாக ஏந்தியபடி குதி கால்களை உயர்த்திப் பார்த்தாள். எம்பிக் குதித்தும் பார்த்தாள்.

'ஊகூம்! எட்டவே இல்லை'

நிமிடங்கள் நகர நகர பெரிய கிளிகளின் பரிதவிப்பும், பதற்றமும் வெண்ணிலாவுக்கும் தொற்றிக் கொண்டன.

''வானதி! அ... அதோ அந்தக்கல்லை மெதுவாக இந்தப் பக்கமா புரட்டிப் போடேன்.

அது மேல ஏறி நின்னா எட்டும்னு நினைக்கிறேன்.''

வானதி பற்களைக் கடித்துக் கொண்டு சிரமப்பட்டு அந்தக் கல்லை



வாகாகப் புரட்டிப் போட்டாள்.

வெண்ணிலா அந்தக் கல்லின் மீது ஏறி நின்றாள். கிளை எட்டவில்லை. குதிகால்களை உயர்த்தி மிக மிருதுவாக அந்தக் கிளிக்குஞ்சை அதன் கூட்டில் விட்டாள்.

அதுவரை அலறி ஓலமிட்டு வட்டமிட்டுப் பறந்த கிளிகள் சட்டென்று மௌனமாயின. கிளையில் வந்து அமர்ந்து அலகைத் திருப்பித் திருப்பி அவளை நன்றியுடன் நோட்டமிட்டன.

'கீ...கீ...' என்று குரலெழுப்பி விட்டு படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டன.

மீண்டும் சந்தேகம் தீராமல் கிளிக்குஞ்சை குனிந்து பார்த்துக் கொண்டன.

கிளிகளின் அழகில் சொக்கிப் போனாள் வெண்ணிலா. ''கிளிக்குஞ்சு பத்திரமாக கூடு வந்து சேர்ந்து விட்டதில் அவைகளுக்கு திருப்தியும் நிம்மதியும் பாரேன். வானதி.''

அவள் குதிகால்களை உயர்த்திக் கொண்டு நின்றதாலோ அல்லது அந்த இடம் சற்று சரிவாக இருந்ததாலோ அந்த கல் சட்டென்று பெயர்ந்து உருண்டது.

நிலை தடுமாறி குப்புற விழுந்தாள் வெண்ணிலா.

''நிலா! அடி எதுவும் பட்டுருச்சா?'' பதறியபடி அருகில் ஓடி வந்தாள் வானதி.

சருகுகள் பலமாய் மிதிபடும் சப்தம் கேட்டது. அழுத்தமான காலடியோசையைக் கேட்டு ஏறிட்டவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் வெண்ணிலா.

முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்ட வேதனையைக் காட்டிலும் அவமான உணர்வில் அவளது அடி வயிறு சுருண்டது.

## 4

**வெ**கு நேரம் நடந்து நடந்து கால்கள் சளைத்து விட்டன. 'சோத்துப்பாறை' அணைப் பகுதியை நோட்டமிட்டு விட்டு கையிலிருந்த காமிராவை லெதர் பேக்கில் வைத்து, தோளில் மாட்டிக் கொண்டு தோப்புக்குள் புகுந்து கொத்து கொத்தாய் தொங்கிய மாங்காய்களில் தலை இடிக்காத வண்ணம் குனிந்து நடந்தான் சூரியா.

சந்தன தேகத்துடன் ஆறடி உயரத்திலிருந்த சூரியாவின் முகத்தில் அமைதியும், சாந்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

தேனியிலிருந்த பிரபலமான சாப்ட்வேர் கம்பெனியில் கடந்த வருடம் தான் வேலைக்குச் சேர்ந்திருந்தான்.

நடுத்தர வகுப்பைச் சார்ந்தவன் தான் சூரியா. அப்பா பரந்தாமனும், அம்மா பத்மாவதியும் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி அவனை என்ஜினியராக்கிப் பார்க்க ஆசைப்பட்டு கஷ்டப்பட்டு படிக்க வைத்தனர்.

பெற்றோர்களின் கஷ்ட நஷ்டத்தை உணர்ந்து கண்ணும் கருத்துமாகப்

படித்து உபகாரச்சம்பளமும் பெற்று முதல் வகுப்பில் தேறினான் சூரியா.

பி.ஈ. படித்துக் கொண்டிருக்கும் போதே கூடுதல் தகுதிக்காக சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களையும் முடித்து வைத்திருந்தான்.

'வேலை கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருக்கும் இந்தக் காலத்தில் நேரத்தை வீணாக்காமல் எம்.ஈ. படித்துத் தகுதியை உயர்த்திக் கொண்டால் சுலபமாக நல்ல வேலையில் அமர்ந்து விடலாமே' என்ற யோசனை அவனுக்குள் உதித்தது.

இன்னும் இரண்டு வருட காலத்தை படிப்புக்காக செலவிட வேண்டுமே என்ற வேதனையில் அவன் மருகிய போது

'இன்னும் ரெண்டு வருஷத்துல நல்ல வேலையில் நீ உட்கார்ந்துட்டா... நம்ம குடும்பம் தலையெடுத்துடும். உன் தம்பி சந்துருவை நீயே படிக்க வைச்சிடுவே.

எங்க சிரமத்தை நினைச்சு நீ ஏன் விசனப்படறே சூரியா? கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ளே ரெண்டு வருஷம் மாயமா ஓடிடும் பாரேன்.''

அப்பா பரந்தாமன் ஆதுரமாய் பேசி அவனது புஜத்தில் மிருதுவாய் தட்டியதும் சூரியா தயக்கத்தை உதறி விட்டு எம்.ஈ. படிப்பைத் தொடர்ந்தான்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் 'போட்டோ கிராபி'யில் அவனுக்கு இருந்த ஆர்வம் பல்கிப் பெருகி விட்டிருந்தது. சிறு வயதிலிருந்தே அவனுக்கு அதில் ஈடுபாடு இருந்தது தான். குடும்பச் சூழ்நிலையை மனதில வைத்து அந்த ஆசைக்கும் ஆர்வத்திற்கும் அணை போட்டிருந்தான் சூரியா.

ஆனால் கல்லூரியில் நண்பர்கள் ''நீ ரொம்ப வித்தியாசமா கோணம் பார்க்கிற. போனவாட்டி நாம பிக்னிக் போனப்போ நீ எடுத்த ஸ்நாப்ஸ் எல்லாம் கவிதை நயத்தோட ரொம்ப அழகா இருக்கு.

காமிரா கவிஞன்னு உனக்கு பட்டமே கொடுத்துடலாம். சூரி! இந்தா... இந்த வானவில் பின்னணியில கேமிராவை எடு! பார்க்கலாம்'' என்று கூறி தங்களது கேமிராவை சூரியாவின் கையில் திணித்து விடுவார்கள்.

'விலை உயர்ந்த வெளிநாட்டுக் கேமிராவை வாங்க வேண்டும். இயற்கை அழகை வித்தியாசமான கோணங்களில் படம் பிடிக்க வேண்டும். கண்ணையும், கருத்தையும் கவருகின்ற விஷயங்களை மனதைத் தொடும் காட்சிகளை அழகுணர்ச்சியோடு கேமிராவில் சிறைப்பிடிக்க வேண்டும்.

போட்டோ கிராபியில் உள்ள நுணுக்கங்களையும், நுட்பங்களையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். சர்வதேசப் புகைப்படக் கண்காட்சியில் அவனது படங்கள் இடம் பெற வேண்டும்' என்பது சூரியாவின் இலட்சியக் கனவாகவே இருந்து வந்தது.

தனக்கென்று சொந்தமாக அவன் கேமிராவை விலைக்கு வாங்குவதற்கு முன்னதாகவே அவ்வப்போது நண்பர்களின் கேமிராவை சிரத்தையோடு கையாண்டதில் அவனது படங்களில் நேர்த்தியும், நயமும், தனித்தன்மையும் பளிச்சென்று வெளிப்பட்டதோடு அவனது ரசனையை



வெளி உலகத்திற்கு அழகாகப் பறை சாற்றியது என்பது நிஜம்!

அதே சமயம் படிப்பிலிருந்த அவனது அக்கறை. இம்மியளவும் குறையவில்லை.

அதீத பொறுப்போடும், அக்கறையோடும் கடமை உணர்வோடும் எம்.ஈ. படித்து முதல் வகுப்பில் தேறி வந்ததும் உடனடியாக 'தேனி'யிலிருந்த பிரபல சாப்ட் வேர் கம்பெனியில் வேலை கிடைத்து விட்டது.

சூரியாவின் தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற நல்ல பதவி! கை நிறைய சம்பளம். அவனது உபயோகத்திற்கு அலுவலகம் அளித்த கார்.

நான்கைந்து மாதங்களுக்கு ஒரு முறை பிராஜெக்ட் சம்பந்தமாக வெளிநாடுகளுக்கு அவனை அலுவலகம் அனுப்பி வைத்தது.

தாய் பத்மாவதிக்கு பெருமை பிடிபடவில்லை. இது நாள் வரை அவர்கள் பட்ட கஷ்டத்திற்கு கடவுள் கண் திறந்து பார்த்து விட்டார்' என்று உள்ளூர புளகாங்கிதம் அடைந்தாள்.

உற்றார், உறவினர்களிடம் எல்லாம் சொல்லி சொல்லி பெருமிதப்பட்டாள்.

அப்பாடா என்று நிம்மதி பெருமூச்சு விடட் தருணத்தில் யார் கண் பட்டதோ தெரியவில்லை. சூரியாவுக்கு வேலை கிடைத்த மறு மாதமே பிராஜெக்ட் சம்மந்தமாக அவன் சிங்கப்பூருக்குச் செல்ல வேண்டியிருந்தது.

சிங்கப்பூரில் மூன்று மாதங்கள் தங்கி தனக்கு அளிக்கபட்ட பணியை செவ்வனே முடித்து மேலதிகாரிகளின் பாராட்டு மழையில் நனைந்து தாயகம் திரும்பினான் சூரியா.

அம்மா பத்மாவதிக்கு ஒரு ஜோடி வளையலும், தாலிச் செயினையும் பார்த்து பார்த்து ஆசையாக வாங்கி வந்திருந்தான்.

சூரியாவின் படிப்புச் செலவிற்காக அம்மா தனது செயினை விற்று விட்டு வெறும் மஞ்சள் கயிறைத் தான் அணிந்து கொண்டிருந்தாள்.

அம்மாவின் கழுத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவள் செய்த தியாகத்தை எண்ணி மனம் கரைந்து போனான் சூரியா.

நகைப்பெட்டியைத் திறந்து பார்த்தும் நெகிழ்ந்து போய் விட்டாள் பத்மாவதி.

''எனக்கு எதுக்குப்பா இதெல்லாம்?'' என்று கூறினாலும் மகனின்

''நான் காதலிக்கறவர் மகா மகா சோம்பேறி டி''

''எப்படி?''

''முத்தம் கேட்டா அவர் உதட்டுக்குக் கிட்ட வரச் சொல்றாரு டி''

-கே.ராஜேஸ்வரி,
வந்தவாசி.



பாசத்தை எண்ணி நெக்குருகிப் போனாள்.

அருகிலுள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று நகைகளை அம்மன் பாதத்தில் வைத்து வணங்கி அதை அணிந்து கொண்டாள்.

மனம் கொள்ளாப் பூரிப்புடன் மன நிறைவுடன் அன்றிரவு படுத்தவள் தான்! மறு நாள் எழுந்து கொள்ளவே இல்லை.

நிம்மதியாக நிரந்தமாகக் கண்ணை மூடி விட்டாள் பத்மாவதி.

குடும்பச் சக்கரம் சுழல்வதற்கு அச்சாணியாக இருந்தவள் அம்மா!

இடிந்து போய் விட்டார் பரந்தாமன்.

அம்மாவின் மேல் உயிரையே வைத்திருந்தான் சூரியா.

அவள் காய்ச்சல், தலைவலி என்று ஒரு நாளும் சுருண்டு படுத்ததை அவன் பாரத்த்தேயில்லை.

ஒரு நோய் நொடி வந்ததில்லை. படுக்கையில் விழுந்து கிடக்கவில்லை.

இரவு படுக்கப் போவதற்கு முன்பு கூட சூரியாவுக்கும், சந்துருவுக்கும் இரு டம்ளர்களில் பாலை நிறைத்துக் கொண்டு வந்து அருந்த வைத்தாள்.

சூரியா கட்டிலில் படுத்ததும் அவனுக்குப் போர்த்தி புன்னகையை சிந்தியபடி நடந்து சென்றாளே?

மறு நாள் அம்மா உயிருடன் இருக்கப் போவதில்லை என்று சூரியா கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டான். உள்ளுக்குள் நொறுங்கித் தான் போய் விட்டான் சூரியா.

குடும்பமே ஆடிப்போய் களை இழந்து விட்டது.

அதுவரை அவர்களை அடுக்களைக்குள் எட்டிப் பார்க்கக் கூட அனுமதித்ததில்லை அம்மா பத்மாவதி! சமையலுக்கு ஆளை நியமித்து விட்டான் சூரியா.

சரிப்பட்டு வராத சமயங்களில் ஹோட்டல் மற்றும் மெஸ்ஸிலிருந்து எடுப்பு சாப்பாடு வாங்கி வந்து காலத்தை ஓட்டினார்கள்.

''சூரி! நீயும் வேலைக்குப் போயிடறே! தம்பி சந்துருவும் ஸ்கூலுக்குப் போயிடறான். எந்தப்பக்கம் திரும்பினாலும் உங்கம்மா நிக்கிற மாதிரியே இருக்குப்பா. நெஞ்சைப் பிசையுதுப்பா.

என்னால வீட்டுல தனியா இருக்கவே முடியலைடா.'' என்று மேல் துண்டால் கண்ணீரை ஒற்றியபடி அப்பா பரந்தாமன் பேசிய போது சூரியாவுக்கு திக்கென்றிருந்தது.

''அப்பா! மனசை பத்திரமா வச்சுக்கோங்க. கவலைப்பட்டால் எல்லா வியாதிகளும் வந்து அண்டிக்கும். நாம கொடுத்து வச்சது அவ்ளோ தான்! சந்துருவை கவனிச்சுக்க வேண்டியது என் பொறுப்பு.

கோவில், குளத்துக்கு டூர் போயிட்டு வாங்க. மனசுக்கு இதமா இருக்கும்.'' என்று சொன்ன கையோடு அதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இறங்கி விட்டான் சூரியா.

மாதத்தில் பாதி நாட்களுக்கு மேல் மைசூர், பெங்களூர், உடுப்பி, குருவாயூர், திருப்பதி, காசி, இராமேஸ்வரம், பத்ரிநாத் என்று சுற்றுலா செல்வதிலேயே பொழுதைக் கழிக்க ஆரம்பித்தார் பரந்தாமன்.

இன்று ஞாயிற்றுக்கிழமை! சந்துருவுக்கு தேர்வுகள் முடிந்து விடுமுறை தொடங்கி விட்டதால் நண்பர்களுடன் சேர்ந்து 'தேக்கடி'க்கு



பிக்னிக் சென்று விட்டிருந்தான்.

சூரியா கட்டிலில் அமர்ந்து மேகஸினைப் புரட்டினான். மனம் எதிலும் லயிக்க மறுத்து முரண்டியது.

கேமிராவைத் தூக்கி லெதர் பேக்கில் போட்டுக் கொண்டு 'சோத்துப்பாறை'க்கு வந்திறங்கினான் சூரியா.

அணைக்கட்டை பார்வையிட்டு விட்டு தோப்புக்குள் புகுந்து நடந்த போது அப்படியொரு சம்பவம் நடக்கும் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கிளிக்குஞ்சை எப்படியாவது அதன் கூட்டில் சேர்க்க வேண்டும் என்று அந்த அழகு தேவதை துடித்த துடிப்பையும், பரிதவிப்பையும் கண்டு ஸ்தம்பித்து நின்றான்.

கண்ணையும், கருத்தையும் கட்டிப்போட்ட அந்தக் காட்சியை சட்டென்று தன் கேமிராவுக்குள் 'கிளிக்' செய்து சிறைப்படுத்தினான்.

தன் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்து விட்ட அழகு தேவதையை மீண்டும் சந்திக்க மாட்டோமா? என்று ஏங்கிக் கொண்டிருந்தவனுக்கு... யாரோ சுவர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு கையில் கொடுத்தது போலிருந்தது.

பாறை பெயர்ந்து அவள் தவறிக் கீழே விழுந்ததைப் பார்த்ததும்... கதி கலங்கிப் போய் அவனையும் அறியாமல் அவளை நெருங்கிச் சென்றான்.

காலடியோசை கேட்டு சுதாரித்து நிமிர்ந்த அழகுப்பதுமை அதிர்ச்சியுடன் அவனை ஏறிட்டது.

நான்கு விழிகளும் மோதிக் கொண்டன.

அதுவரை.

இருண்டு கிடந்த சூரியாவின் முகத்தில் பளீரென்று மின்னல் வெட்டியது.

## 5

வெண்ணிலாவும், வானதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

அதிர்ச்சியும், ஆச்சரியமும் போட்டி போட்டுக் கொண்டு அந்த இளம் பெண்களை ஆட்டிப்படைத்தன.

''நிலா! இ...இவரை உனக்கு ஞாபகமிருக்கா?'' வானதி அவளது காதருகே வந்து நின்று கிசுகிசுத்தாள்.

''அவ்வளவு சீக்கிரத்தில் நீ மறந்திருக்க மாட்டேன்னு நா நினைக்கிறேன்'' ஆர்வம் தாளாமல் வானதி மீண்டும் அவளது காதுகளில் முணுமுணுத்தாள்.

அதற்குள் சூரியா, இவர்களுக்கு வெகு அருகாமையில் வந்து அடி எதுவும் பலமா பட்டிருச்சா?'' அவனது விழிகளில் நிஜமான அக்கறை பளிச்சிட்டது.

''உங்க அக்கறைக்கு ரொம்ப நன்றி! அப்படி ஒண்ணும் பெரிசா அடி

படலை! வானதி. சீக்கிரம் வா! அப்பா நமக்காக காத்திருப்பாரு'' என்று கூறிக் கொண்டே பேக்கை எடுத்துக் கொண்டு விடு விடென்று நடக்க ஆரம்பித்தாள் வெண்ணிலா.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கப் பேசி விட்டு வெண்ணிலா ஓட்டமும் நடையுமாக விரைந்ததும் வானதிக்கு என்னவோ போலாகி விட்டது.

தர்ம சங்கடத்துடன் சூரியாவை ஏறிட்டு விட்டு தோழியைப் பின் தொடர்ந்து நடந்தாள்.

''நிலா! நில்லுப்பா. ஏன் இப்படி ஓடறே? 'சாயந்தரம் வரைக்கும் ஜாலியா இங்கேயே இருக்கிறோம்'னு அப்பாகிட்டே சொன்னியே? மறந்துட்டியா?

ஆமா. அவரு உன்னை என்னடி கேட்டாரு? தப்பா எதுவும் பேசலையே?

டீஸண்டா வந்து அடி எதுவும் பட்டிருச்சான்னு அனுசரணையா கேட்டாரு! அவ்வளவு தானே?

படார் படாருன்னு முகத்துல அடிச்ச மாதிரி பதில் சொல்லிட்டு வேகமாப் போறீயே?

உனக்கே இது நல்லாயிருக்கா நிலா? அவரு தப்பா எடுத்துக் கிட்டாருன்னா? மட்டு மரியாதை தெரியாத பொண்ணுன்னு மட்டமா எடை போடப் போறாரு. தெரியுமா?''

''எடை போட்டா போட்டுக்கிடட்டும்! எனக்கு என்ன? ரொம்ப நேரம் தண்ணியில ஊறிக்கிட்டிருந்தா உடம்புக்கு ஒத்துக்காம பேயிடும். அதான்! சட்டுன்னு வந்துட்டேன்.''

நின்று நிதானிக்காமல், திரும்பிப் பாராமல் வெண்ணிலா வெடுக்கென்று பதிலளித்தாள்.

''நிலா! கொஞ்சம் நில்லேன்.'' நான்கே எட்டில் அவளது கையைப் பிடித்து நிறுத்தி அவளது முகத்தைத் தன் புறமாகத் திருப்பினாள் வானதி.

''அவர் யாருன்னு உனக்கு ஞாபகமிருக்கு இல்லையா? அன்னிக்கு அவரு எவ்ளோ பெருந்தன்மையா நடந்துகிட்டாரு? எல்லாத்தையும் மறந்துட்டியா?

அவருகிட்ட காரணமில்லாம எரிஞ்சு விழாத குறையா பேசிட்டு வந்துட்டியே?

என்னத்துக்கு அப்படி செஞ்சே நிலா? சொல்லு என்கிட்டே எனக்கு எவ்ளோ தர்ம சங்கடமா இருக்கு தெரியுமாடி?''

கேள்விக்கணைகளைத் தொடுத்தாள் வானதி.

'கோபத்தினாலா? அவமானத்தினாலா? வெட்கத்தினாலா? என்று 'இனம் பிரித்தறியா கலவை உணர்வில் வெண்ணிலாவின் முகம் கன்றி சிவந்திருந்தது.

அவளால் வானதியின் கேள்விகளுக்கு சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை.

உள்ளுக்குள் ஊண்மையிலேயே அவளுக்கும் குழப்பமாகத் தான் இருந்தது.

''நான் எதையுமே மறக்கலை வானதி'' என்று கூறிவிட்டு சட்டென்று



பார்வையைத் தாழ்த்துக் கொண்ட வெண்ணிலாவின் நினைவலைகள் பின்னோக்கி சுழல ஆரம்பித்தன.

## 6

கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு...

வானதியின் அக்கா மாலதியின் திருமணம் தேனியில் விமரிசையாக நடந்தேறியது.

மாலதிக்கு வாய்த்த மாப்பிள்ளையின் சொந்த ஊர் தேனி என்பதால்.... தேனியில் பத்திரகாளி அம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் தான் திருமணம் நடந்தது.

சத்தியமூர்த்தி தமது குடும்பத்துடன் நேராக தேனிக்கு வந்து விட்டிருந்தார்.

வெண்ணிலாவுக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லையாதலால்.. சிறு வயதிலிருந்தே மாலதியின் மேல் அலாதிப் பிரியம்!

கூடப் பிறந்த சகோதரியைப் போலவே.. மாலதியின் மேல் பாசமும் மரியாதையும் வைத்திருந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

''பொண்ணுங்களா! சும்மா கேலி பண்ணி வாயடிச்சுக்கிட்டு இருக்காம... உருப்படியா காரியத்தை கவனிங்க சொல்லிட்டேன்.

இந்த தாம்பாளத்துல இருக்கிற வெள்ளி பன்னீர் சொம்பு, சந்தன பேளா, குங்குமச்சிமிழ் எல்லாம் அழுது வடியறாப்பல இருக்கு. பாருங்க.

கொஞ்சம் விபூதியைத் தொட்டு தேய்ச்சு வச்சீங்கன்னா... பளபளன்னு கண்ணைப் பறிக்கும்.

மண்டப வாசல்லே வரவேற்புலே வச்சா.. பார்க்க ஒரு தோரணையா இருக்க வேணாமா?''

கல்யாண வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து கொண்டிருந்த சத்தியமூர்த்தி... அவ்வப்போது மணமகள் அறைக்குள் புகுந்து ஏவிக் கொண்டிருந்தார்.

பளபளவென்று வெள்ளிப் பாத்திரங்களை விபூதியால் தேய்த்து நன்கு துடைத்து... அழகுப் பதுமைகளாய் அலங்கரித்துக் கொண்டு வந்து நின்ற

''உடம்பு எப்படி இருக்குன்னு கேட்டா, சூப்பரா இருக்குன்னு சொல்றீங்க பிறகு ஏன் என்கிட்ட வந்தீங்க?''

''சாரி டாக்டர்... நான் நர்சைப் பார்த்துக் கிட்டே சூப்பரா இருக்குன்னு சொல்லிட்டேன்''

-வந்தை ஜி.கே.நிதி. வந்தவாசி.



சிறுமிகளிடம் தாம்பாளத்தை ஒப்படைத்தாள் வெண்ணிலா.

''குட்கேர்ஸ்! விளையாட்டுத் தனமா இருந்துடாதீங்க. பொருளுங்க காணாம போயிடும். வர்ற எல்லா ஜனங்களுக்கும் வணக்கம் தெரிவிச்சு உபசரிக்கணும். சரியா?'' அறிவுறுத்தி விட்டு மணமகள் அறைக்குச் சென்றாள்.

மணப் பெண்ணுக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்ததில்... நேரம் நழுவியதே தெரியவில்லை,

வாணவேடிக்கை, பட்டாசு வெடி சப்தத்துடன் மாப்பிள்ளை அழைப்பு நடந்து முடிந்த தருணத்தில்... ஒரு பட்டுப்பாவாடை சிறுமி வியர்க்க விறுவிறுக்க அறைக்குள் புகுந்தாள்.

''அக்கா! நிலாக்கா.. தாம்பாளத்துல கல்கண்டு, முந்திரி எல்லாம் தீர்ந்து போச்சு, இந்தாங்க தாம்பாளங்களைப் பிடிங்க!

ரோஸ் உதிரிப் பூவுங்க கூட தீர்ந்து போச்சு. ஜனங்க நிறைய வந்துட்டே இருக்காங்க. தாத்தா உங்க கிட்டே சொல்லச் சொன்னாங்க. நீங்க பூவையும் கல்கண்டையும் எடுத்துட்டு வருவீங்களாம்.''

தகவலைத் தந்து விட்டு சிட்டாகப் பறந்து விட்டாள் சிறுமி.

''பிளாஸ்டிக் கவர்ஸ்லே போட்டு முன்கூட்டியே தாராளமா எல்லாத்தையும் அவங்க கிட்டே கொடுத்த வைக்காம போயிட்டோம். வானதி!

அந்தத் தாம்பாளத்துல கல்கண்டு முந்திரியைக் கொட்டறேன். நீ தூக்கி விட்டு வா! இதோ இதுலே ரோஸ், உதிரிப் பூக்களை வச்சு நான் எடுத்துட்டு வரேன்.

சீக்கிரம்.. நேரமாகுது பாரேன்!''

அரக்கப் பரக்க தாம்பாளத்தில் ரோஜா மற்றும் உதிரிப் பூக்களைக் குவித்து பரத்திக் கொண்டு மணமகள் அறையை விட்டு வெளிப்பட்டாள்.

அந்தத் திருமண மண்டபத்தில்... முதல் மாடியில் மணமகன் அறையும் மணமகள் அறையும் எதிரும் புதிருமாக அமைந்திருந்தன.

வெங்காய சரிகை கலரில் மைசூர் சில்க் புடவையை அணிந்து கூந்தலைத் தளரப் பின்னி.. முல்லைப்பூவை சூடிக் கொண்டிருந்த வெண்ணிலா... அன்றலர்ந்த மலராய் பொலிவுடன் மிளிர்ந்தாள்.

பரபரப்புடன் படிகளில் தாவி இறங்கிய வெண்ணிலாவுக்கு.. தழையக் கட்டியிருந்த சேலையின் அடி முனை தடுக்கியதும்.... தடுமாறி விழப் பார்த்தாள்.

கைப்பிடிச் சுவரை சட்டென்று பிடித்துக் கொண்டு.. கீழே விழுந்து விடா வண்ணம் சமாளித்து நின்று விட்டாள். ஆனால் அந்தத் தடுமாற்றத்தில் கையிலிருந்த தாம்பாளம் எகிறிக் குதித்தது.

டிப்டாபாக சபாரி சூட் அணிந்து மாடியேறி வந்து கொண்டிருந்த சூரியாவின் நெற்றியில் தாம்பாளம் பதம் பார்த்து விட்டு... பூக்களை அவனது தலையில் அர்ச்சனை செய்து விட்டு ... 'டங்.. டணார்' என்று ஓசையுடன் கீழே விழுந்து வட்டமிட்டு அதிர்வை எழுப்பி மெதுவாய் அடங்கியது.

சப்த நாடியும் ஒடுங்கிப் போய்... வெல வெலத்து விட்டாள் வெண்ணிலா.



'முன் பின் அறிமுகமில்லாத இளைஞன்... அந்த சிவந்த நெற்றியில் தாம்பளத்தின் விளிம்பு பட்டு... விரல்கடை அளவுக்கு வீங்கி சிவந்து விட்டதே?

எல்லாப் பூக்களையும் அவனது தலைமேல் கொட்டிக் கவிழ்த்து விட்டானே?

நெற்றியில் காயம் ஏற்பட்டு விட்டதே? 'சுரீர்' என்று வலி பின்னியெடுக்கிறது போலும்!

நெற்றியை நீவி விட்டுக் கொள்கிறானே?

யாரிவன்? ஒரு வேளை... மாப்பிள்ளைக்கு நண்பனோ? எவ்வளவு பெரிய பிசகு செய்து விட்டேன் நான்?

பயத்திலும் சங்கோஜத்திலும் கைவிரல்கள் பனிக்கட்டியாய் சில்லிட்டு விட்டன.

சூரியாவுக்கு தான் காண்பது கனவா அல்லது நனவா என்று சந்தேகம் தாளாமல்... மீண்டும் அவளை அண்ணார்ந்து பார்த்தான்.

'இது நிஜம் தான்! இது கனவல்ல... நெற்றி வலிக்கிறதே' உள்ளூர முணுமுணுத்தான்.

அப்படியொரு அழகு தேவதையை... எல்லையில்லா சௌந்தரியத்தை ஒட்டு மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்தவளை... அவன் அதற்கு முன்பு சந்தித்ததே இல்லை.

சூரியாவுக்கு முல்லை மலரென்றால் மிகவும் பிடிக்கும்.

அவனுக்குப் பிடித்தமான முல்லைச் சரத்தை சூடிக் கொண்டு எளிய அலங்காரத்தில் தந்தச் சிற்பமாய் நின்றவளை... இமை கொட்டாமல் பார்த்தான்.

பார்த்த மாத்திரத்திலேயே அவனது இதயம் தடம் புரண்டு இடம் மாறியது.

கணநேரத்திலேயே அவனது கண்ணையும் கருத்தையும் அபகரித்துக் விட்டிருந்தாள் வெண்ணிலா.

''ஸா... ஸாரி... ஸாரி சார்'' அவன் என்ன சொல்லப் போகின்றானோ என்ற பயத்தில் குழறினாள்.

'அவன் மட்டுமா அழகு? என்ன ஒரு அழகான குரல்? காற்றில் தேனைக் கலக்குகின்றதே?'

சூரியா பிரமித்துப் போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ப.... பரவாயில்லைங்க. எதுக்கு ஸாரி கேட்கறீங்க? ஏதோ தவறிப் போய் நடந்திருச்சு. பரவாயில்லை'' என்றபடி குனிந்து தாம்பாளத்தை எடுத்து... கீழே தன்னைச் சுற்றிலும் விழுந்திருந்த ரோஜாப் பூக்களைப் பொறுக்கி எடுக்கலானான்.

''என்னடி வெண்ணிலா? பார்த்து நிதானமா இறங்கி இருக்கக் கூடாதா?

தாம்பளம் தவறி விழுந்து அவர் நெத்தியில எப்படி வீங்கிப் போயிடுச்சு. பாரேன்'' வானதி, வெண்ணிலாவின் பின்னால் கல்கண்டு தாம்பளத்தை ஏந்தியவாறு... அவளைக் கடிந்து கொண்டாள்.

வெண்ணிலாவும் குனிந்து பூக்களை அள்ளியெடுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு குப்பென்று வியர்த்து விட்டிருந்தது.

''அவங்களைக் குத்தம் சொல்லாதீங்க பாவம்! அவங்களே தடுக்கி தடுமாறி விழப் பார்த்தாங்க.

நல்ல காலம்! எப்படியோ விழாம சமாளிச்சு நின்னுட்டாங்க. அவங்க வேணும்னா... என் மேல தாம்பாளத்தைத் தூக்கிப் போட்டாங்க? இந்தாங்க''

அவன் கையிலிருந்த தாம்பாளத்தை வாங்கிக் கொண்டாள் வெண்ணிலா.

''ந.. நன்றி'' மெல்ல வார்த்தையை உதிர்த்தாள். நான்கு விழிகளும் கலந்தன.

அவளது நாடி நரம்புகளில் ஜில்லென்று குளிர் பரவியதைப் போலிருந்தது.

அவனது நெற்றியிலிருந்த வீக்கத்தில் அவளது பார்வை படிந்து மீண்டது. சட்டென்று தலை குனிந்து கொண்டாள் வெண்ணிலா. குற்ற உணர்வு அவளது இதயத்தைக் குடைந்தது.

சொல்லாலும் செயலாலும் யாரையும் நோகடிக்கவே கூடாது என்ற கொள்கை உடையவள் அவள்.

தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவி செய்ய வேண்டும். முடியவில்லை எனில் சரீரத்தாலாவது உழைத்து ஒத்தாசை செய்து விட வேண்டும் என்று அடிக்கடி கூறுவார் சத்தியமூர்த்தி.

குணத்திலும் ஜாடையிலும் அவரை உரித்துக் கொண்டு வந்திருந்தாள் வெண்ணிலா.

சூரியா பெருந்தன்மையாக மிக மிக கண்ணியமாகப் பேசியதும்... அவளுக்கு சங்கடமாக இருந்தது.

''சூரியா! உன்னை எங்கெல்லாம் தேடிட்டு வர்றோம் தெரியுமா?'' குரல் வந்த திசையில் மூவரும் கீழே பார்த்தனர்.

இளைஞர் பட்டாளம் கலகலத்து சிரித்தபடி மாடியை நோக்கிப் படையெடுத்தது.

''வானதி வா! நேரமாகுது! போகலாம்'' தோழியைத் துரிதப்படுத்தி விட்டு.. மறுகணமே மளமளவென்று படிகளைக் கடந்து இறங்கினாள் வெண்ணிலா.

மான் போன்று துள்ளிக்குதித்து அவள் ஓடியதை.. ரசித்துப் பார்த்த சூரியா லயித்துப் போய் நின்றான்.


மாடியேறி வந்த இளைஞர்களில் ஒருவன், ''என்ன சூரி? கலர் பார்த்துட்டு அசந்துட்டியா? சூப்பர் பிகருதான். ஏதா பேசிட்டிருந்தாப்பல தெரிஞ்சது. என்ன மச்சி பேசிக்கிட்டீங்க?'' என்று சுவாரஸியமாகப் பேசிய படி.. சூரியாவின் தோளில் கை வைத்தான்.

''ஸ்டாப் இட் வாசு! வாலைக் கொஞ்சம் சுருட்டி வச்சுக்கோ! கலரு... பிகருன்னு மட்டமாப் பேசறதை நிறுத்திக்கோ.

நான் பெண்மையை மதிச்சு நடக்கிறவன். என் கிட்டே இந்த மாதிரி பேச்செல்லாம் வேணாம்.

சிரிச்சு என் ஜாய் பண்றதுக்கு ஆயிரம் விஷயங்கள் இருக்கு! இந்த மாதிரி கொச்சையா பேசி சிரிக்கிறதிலே.. எனக்கு என்னிக்குமே உடன்பாடு இல்லைன்னு.. உனக்கு நல்லாவே தெரியுமே? அப்புறம் ஏன்





வீணா என்கிட்ட வம்புக்கு வர்றே? . ஒருத்தருக்கு ஒண்ணு பிடிக்கலைன்னா... அதை நாம புரிஞ்சுகிட்டு நாசூக்கா நாகரீகமா நடந்துக்கணும்.

படிச்ச படிப்புக்கு அது தான் அழகு!'' உறுமினான் சூரியா.

''லாசு! சும்மா இருக்க மாட்டியா? சூரி! விடுப்பா.. நீங்க எல்லாரும் என் அண்ணனோட கல்யாணத்துக்கு வந்ததிலே.. எனக்கு ரொம்ப சந்தோஷம்.

இந்த நல்ல நாள்லே என்னத்துக்கு நமக்குள்ளே மனஸ்தாபம்? வாங்க.. அந்த ரூமுக்குப் போயிடலாம்.'' இருவரையும் சமாதானப் படுத்தினான் நண்பன் நரேந்திரன்.

கல்கண்டு தாம்பாளத்தை ஏந்தியபடி.. இவர்களது சம்பாஷணையைக் கேட்டபடி மிக நிதானமாகப் படிகளில் இறங்கிய வானதிக்கு.. சூரியாவின் மேல் ஒரு நல்ல அபிப்பிராயம் வந்தது நிஜம்!

அதை அப்படியே வெண்ணிலாவிடம் அவள் கொட்டித் தீர்த்த போது... வெண்ணிலாவின் முகத்தில் விளக்கு போட்டாற்போல் வெளிச்சம் தோன்றியதை... வானதி கவனிக்கத் தவறவில்லை.

மறுகணமே ஏதோ ஒரு குற்ற உணர்வு உள்ளூர தலை தூக்கியது போலும்.

வெண்ணிலா சட்டென்று பேச்சை மாற்றினாள். காரணமே இல்லாமல் எரிந்து விழுந்தாள்.

அன்றும் அப்படித்தான்!

இன்றும் சூரியா கரிசனத்துடன் அவளிடம் பேசிய போதும்... அதே கோபம்! காரணமற்ற எரிச்சல்!

வெண்ணிலாவின் முகத்தை ஊன்றி கவனித்தாள் வானதி.

இதயத்தைத் துளைத்து உள்ளிருப்பதை அறிந்து கொள்ளும் படியான பார்வை அது!

சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்ட வெண்ணிலா ''வானதி! அதோ பாரு.. அப்பா வந்துட்டிருக்காரு. மாங்காய் கூடைகளை லாரியில லோடு ஏத்தி அனுப்பிட்டாரு போலிருக்கு.

பஸ்ஸைப் பிடிச்சு நாம்ப கிளம்ப வேண்டியது தான்! என்றாள்.

வானதிக்கு எங்கோ பொறி தட்டியது போலிருந்தது. மாசு மருவற்ற

''புது டிசைன் சேலைன்னு சொல்றீங்க, அங்கங்கே ஒரே அளவுல பெரிசா ஏன் பொத்தல் போட்டிருக்கு?''

''சேலை கொஞ்சம் எக்ஸ்ட்ரா கவர்ச்சியா இருக்கனும்னு நீங்கதானே கேட்டீங்க''

-கே.ராஜேஸ்வரி, வந்தவாசி.





தோழியின் அழகு முகத்தை மீண்டும் உற்றுப் பார்த்தாள். உள்ளூர ஏதோ ஒன்று நெருடியது.

அவளது மனம் மெழுகாய் உருகியது. அவள் பயந்தது போலவே ....விரைவில் வெண்ணிலாவின் வாழ்க்கை கேள்விக்குறியானது.

## 7

சூரியாவின் முகத்தில் சோக மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன.

அப்பா பரந்தாமனுக்கு காய்ச்சல் அனலாக கொதித்துக் கொண்டிருந்தது.

காலையில பக்கத்து ஹோட்டலிலிருந்து அவன் வாங்கிக் கொண்டு வந்திருந்த இட்லிப் பொட்டலம் பிரிக்கப்படாமல் அப்படியே கிடந்தது.

காலையில் குடித்து விட்டு வைத்த காபி டம்ளர்கள் கழுவப்படாமல் ஈக்கள் மொய்த்தபடி கிடந்தன.

வேலைக்காரி நான்கு நாட்களாக 'மட்டம்' போட்டு விட்டிருந்தாள்.

பாத்திரங்களை ஸிங்கில் போட்டு தேய்த்துக் கழுவினான் சூரியா.

குளியலறைக்குச் சென்றால்... துவைக்கப்படாத அழுக்குத் துணிகள் கொடியில் தொங்கி எரிச்சலைக் கிளப்பின.

தூசு தும்பு படிந்த கூடத்துத் தரையும் ஆங்காங்கே இறைந்து கிடந்த பொருட்களும்... 'அது ஒரு பெண் இல்லாத வீடு' என்பதை நன்கு பறைசாற்றிக் கொண்டிருந்தன.

தம்பி சந்துரு கம்ப்யூட்டர் கிளாசுக்குச் சென்று விட்டிருந்தான்.

இறைந்து கிடந்த பேப்பர்களையும், புத்தகங்களையும் அடுக்கி ஒழுங்குபடுத்தி விட்டு.. துடைப்பத்தை எடுத்து வீட்டைப் பெருக்கினான் சூரியா.

சுக்கையும், மிளகையும், துளசியையும் தட்டிப் போட்டு கஷாயம் தயாரித்து கை பொறுக்கும் சூட்டில் ஆற்றினான்.

''அப்பா! கொஞ்சம் எந்திரிச்சு இந்த கஷாயத்தைக் குடிச்சுட்டு படுத்துக்கோங்கப்பா'' பரந்தாமனின் கால்மாட்டில் அமர்ந்து கொண்டு... அவரது உடம்பில் போர்த்தியிருந்த துப்பட்டியை விலக்கினான்.

ராமேஸ்வரத்திற்குச் சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து திருப்தியுடன் தரிசனம் செய்து விட்டு வந்திருந்தார் பரந்தாமன்.

திரும்பி வந்து இரண்டு நாட்கள் தான் ஆகின்றன.

முதல் நாள் கலகலவென்று பேசி நன்றாகத் தான் வளைய வந்தார். மறுநாளே காய்ச்சல், ஜலதோஷம் மூச்சிரைப்பு வந்து அவரை முடக்கிப் போட்டு விட்டது.

இரண்டு நாட்கள் விடுமுறை போட்டு விட்டு அருகிலேயே இருந்து அவரை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டான் சூரியா.

இன்று காலை காய்ச்சல் சற்று மட்டுப் பட்டிருப்பதைப் போல் தோன்றியதும்... பரந்தாமனே சூரியாவை வற்புறுத்தி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விட்டார்.

சாயந்தரம் வீடு திரும்பியதும் பார்த்தால்... காய்ச்சல் சற்றும் குறையாமலிருந்ததும்.. சூரியாவுக்கு கவலையுடன் திகிலும் சேர்ந்து கொண்டது.

''வேலைக்காரி இன்னிக்கும் மட்டம் போட்டுட்டாளே? கஷாயத்தை நீயே காய்ச்சினியா? உனக்கு ரொம்ப சிரமத்தைக் குடுக்கிறேன் சூரியா!'' என்றபடி கஷாயத்தை ஒரு மடக்கு பருகினார் பரந்தாமன்.

''எனக்கு ஒரு சிரமமும் இல்லப்பா... நீங்க இப்படி உடம்புக்கு முடியாம படுத்துக்கிடக்கிறதைப் பார்த்தா தான்... மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்கு.''

''பரவாயில்லையே! நல்லா பக்குவமா கஷாயம் போட்டிருக்கியே சூரியா?''

''பக்கத்து வீட்டு பாட்டி கிட்டே செய்முறை கேட்டுக்கிட்டு வந்து காய்ச்சினேன்.

அப்பா! நேத்து எல்லா டெஸ்ட்களும் எடுத்தோம் இல்லியா? ரிசல்ட் பார்த்ததிலே.. எல்லாம் நார்மலாகத் தானிருக்கு.

நான் டாக்டர் கிட்டே பேசிட்டு தான் வர்றேன். உங்க உடம்புக்கு ஒண்ணுமே இல்லைப்பா... மன உளைச்சல் தான் இதுக்கெல்லாம் காரணம்னு.. டாக்டர் சொல்லிட்டாரு!

டூர் போயிட்டு வந்ததும் எவளோ கலகலப்பா இருந்திங்க தெரியுமாப்பா?

வீட்டுக்கு வந்தவுடனே... அம்மாவோட திடீர் மறைவைப் பத்தி அதிகமா கவலைப் படறீங்கன்னு நினைக்கிறேன்.

கவலைதான் எல்லா நோய்களுக்கும் காரணம். அது மனுசனை உருக்குலைச்சுப் போட்டுடும்.

மனசை ரிலாக்ஸா வச்சுக்கோங்க அப்பா! நீங்க தானேப்பா எங்களுக்கு புத்திமதி சொல்லி வழி நடத்தணும்?''

நெகிழ்ந்து போய் பேசியதால்... சூரியாவின் குரல் பிசிறடித்தது.

மகனின் பாசத்தைக் கண்டு... பாகாய் உருகிப் போனார் பரந்தாமன்.

''வாஸ்தவம் தான் சூரியா! வீட்டுலே எந்தப் பக்கம் திரும்பினாலும்.... பத்மாவதி இல்லாத வெறுமை... கண்ணுலே அறையறாப்பல இருக்கு.

மனமொத்த ஆதர்ஷ தம்பதிகளா வாழ்ந்துட்டோம்.

கிட்டத்தட்ட முப்பது வருஷ காலமா என்னோட சுகதுக்கங்களைப் பங்கெடுத்து வாழ்ந்துட்ட புண்ணியவதி அவ!..

பத்மாவதி என்னை விட்டுப் போயிட்டாங்கிற நிஜத்தை இன்னமும் என்னால ஜீரணிக்கவே முடியலைப்பா..

பூவும் பொட்டுமா ஒரு வெள்ளிக்கிழமையில கண்ணை மூடிட்டா மகராசி!

வீடே வெறுமையா வெறுச்சோடிப் போயிடுச்சு பாரு! வீட்டுலே ஒரு ஜீவகளையே இல்லையே?

எனக்கு இங்க இருக்கவே பிடிக்கலை சூரியா!'' இடுங்கிய கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

ஜுரத்திலும் பலகீனத்திலும் துயரத்திலும் நடுங்கித் துடித்த



பரந்தாமனது கைகளை... இறுகப் பற்றிக் கொண்டான் சூரியா. கட்டிலின் தலைமாட்டிலிருந்த துவாலையால் அவரது கண்ணீரைத் துடைத்தான்.

''எங்களுக்கு நீங்க வேணும் அப்பா! கவலையை கொஞ்சம் கொஞ்சமா மறந்துட்டு சகஜநிலைக்கு நீங்க திரும்பணும்.

எங்களை வழி நடத்தணும். உங்களை இழக்க நான் தயாரா இல்லைப்பா.. இது நீங்க பார்த்து கட்டின வீடாச்சே? இதை விட்டுட்டு வர்றதுக்கு.. நீங்க தயங்குவீங்கன்னு நான் நெனச்சுட்டிருந்தேன்.

அம்மா இறந்ததிலிருந்தே.. 'இந்த வீட்டுலே இருக்கப் பிடிக்கலை'ன்னு நீங்க சொன்னீங்க தான்!

ஆனா காலம்... உங்க காயத்தை மெல்ல மெல்ல ஆற்றிடும்னு நான் நம்பினேன்.

உங்க வேதனையும் சோகமும் கொஞ்சம் கூட தணியவே இல்லைன்னு... இப்போ நான் புரிஞ்சுகிட்டேன்.

இந்த வீட்டை விற்க ஏற்பாடு பண்ணிடறேன் அப்பா! தேனியை விட்டே போயிடலாம்.

பக்கத்து ஊர்லே... பச்சைப் பசேல்னு மனசுக்கும் கண்ணுக்கும் இதமளிக்கிற இடத்துல... வீட்டை வாங்கிட்டு அங்கே குடி போயிடலாம். என்ன சொல்றீங்கப்பா?''

''ச.. சரிப்பா! உன் இஷ்டப்படி செய்... தூரமா போயிட்டா.. உனக்கு ஆபீசுக்கு வர்றதுக்கு சிரமமா இருக்காதா சூரியா?''

''கம்பெனி எனக்கு கார் குடுத்திருக்கே! மறந்துட்டீங்களா அப்பா! என்னையும் சந்துருவையும் பத்தி நீங்க விசனப்படாதீங்க...

சூழ்நிலைக்குத் தகுந்தபடி நாங்க 'அட்ஜஸ்ட்' பண்ணிக்குவோம்.

எங்களுக்கு உங்க நிம்மதி தான் முக்கியம். நீங்க தெம்பா ஆரோக்கியமா நடமாடினா.. எங்களுக்கு ஆயிரம் யானை பலம் கிடைச்ச மாதிரி தான்!

இப்போ சமர்த்தா.. எங்களுக்காக இந்த கஷாயத்தை கண்ணை மூடிட்டு குடிச்சுடுங்கப்பா'' புன்னகைத்தான் சூரியா.

''என் பையன் எனக்காக சிரத்தையா காய்ச்சின கஷாயமாக்கும்! தேவ அமிர்தமா நினைச்சு குடிப்பேனாக்கும்'' என்றபடி கடகடவென்று கஷாயத்தைப் பருகினார் பரந்தாமன்.

நீண்ட பெருமூச்செறிந்து விட்டு சூரியாவை ஏறிட்டார்.

''மனசிலேர்ந்து பாதி பாரம் இறங்கினாப்பல இருக்கு சூரியா!

நல்ல பதவி, கை நிறைய சம்பாதிக்கிறே? உனக்கொரு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணத்தை முடிச்சுட்டா... எனக்கு பரிபூரண நிம்மதி கிடைச்சிடும்.

இந்த வீட்டையும் எங்களையும் அவ பார்த்துப்பா... வீட்டைப் பத்தின கவலையை உதறிட்டு... நீயும் உன் முழு கவனத்தை வேலையில காட்டலாம் இல்லையா?''

சட்டென்று சூரியாவின் மனக் கண்முன் வெண்ணிலா ஒரு கணம் தோன்றி மறைந்தாள்.

'அந்த அழகு தேவதையை கல்யாணமண்டபத்திலும், சென்ற வாரம் 'சோத்துப்பாறை' வனப்பகுதியிலும் பார்த்தது தான்!

பெயர் வெண்ணிலா! அவளுக்கேற்ற அழகான பெயர் தான்! அவள் யார்? அவளது குடும்பப் பின்னணி எப்படிப்பட்டது? என்று எதுவுமே தெரியாது.

என் மனதை அபகரித்துக் கொண்ட அந்த அழகு தேவதையைத் தவிர... வேறு யாரையும் என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதே?

எனக்கு அதிர்ஷ்டம் இருந்தால்... அவளே எனக்கு மனைவியாக வேண்டும். இல்லாவிட்டால் காலம் முழுவதும் இப்படியே இருந்து விட வேண்டியது தான்.

அவளும் என்னை விரும்புகிறாளா? என்னைக் கண்டதும் ஏன் அப்படி பதறினாள்?

ஓட்டமும் நடையுமாக விரைந்தாளே? அந்த நடை கூட மிக மிக அழகாக இருந்ததே?

''கல்யாணத்தை இப்போ நெனச்சுப் பார்க்கிற மன நிலையில... நான் இல்லைப்பா.. கொஞ்ச காலம் ஆகட்டும். அது வரைக்கும் அந்தப் பேச்சை தயவு செய்து எடுக்காதீங்கப்பா'' என்று முணு முணுத்து விட்டு எழுந்து கொண்டான் சூரியா.

மீண்டும் அந்த தேவதையைப் பற்றி இனிய நினைவில் மூழ்கினான்.

அந்த அழகான நடைக்கு சொந்தக் காரியான வெண்ணிலா... விரைவில் தனது காலை இழந்து ஊனமாகி முடங்கி விடப் போகிறாள் என்பதை... சூரியா எவ்விதம் அறிவான்?

## 8

பேரிரைச்சலுடன் வானம் பொத்துக் கொண்டு விட்டதைப் போல்... கோடை மழையை ஊற்றிக் கொண்டிருந்தது.

கம்பி போட்ட முற்றத்தில்... வெள்ளிச் சரங்களாய் தரை தொட்டு பல்லாங்குழிகளாய்.. மழைத்துளிகள் துள்ளித் துள்ளித் தெறித்ததைப் பார்த்த வண்ணம் இருந்தாள் வெண்ணிலா.

அடுக்களைக்கு எதிரே இருந்த தாழ்வாரத்தில்... சத்யமூர்த்தியும் வெண்ணிலாவும் பலகைகளில் அமர்ந்திருந்தனர்.

அம்மா சிவகாமி காலையில் வைத்த வத்தக்குழம்பை... அடுப்பில் வைத்து சூடாக்கிக் கொண்டு வந்து பரிமாறினாள்.

''நீயும் உட்கார்ந்து சேர்ந்து சாப்பிடு சிவகாமி! உன் கிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைக் கலந்து பேசணும்'' சாதத்தை வத்தக்குழம்புடன் சேர்த்துப் பிசைந்து கொண்டே... தயக்கமாய் மனைவியை ஏறிட்டார் சத்யமூர்த்தி.

இரவு நேரத்தில் மூவரும் ஒன்றாக அமர்ந்து தான்



உணவருந்துவார்கள்.

ரசித்து ருசித்து சாப்பிட்ட படியே... அன்றைய தினத்தில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி அசை போடுவார்கள்.

சத்யமூர்த்தி எதையும் மனதில் வைத்துக் கொள்ள மாட்டார். மனைவியிடம் எதையும் அவர் மறைத்ததில்லை.

கணவனின் குறிப்பறிந்து நடக்கும் குணமுடையவள் சிவகாமி.

''இந்தாங்க! உங்களுக்குப் பிடிச்ச பருப்புத் துவையல், மிளகு அப்பளம் பொரிச்சிருக்கேன். பசி களைப்புலே சோர்வா தெரியறீங்க.

முதல்லே நாலுவாய் சாப்பிடுங்க. நிதானமா பேசுவோம் பீடிகை பலமாக இருக்கவே.. கவலையுடன் அப்பாவின் முகத்தை ஏறிட்டாள் வெண்ணிலா.

கன்னங்கள் குழி விழுந்து.. கழுத்தெலும்புகள் புடைக்க... அப்பா சமீபகாலமாக மிகவும் இளைத்து எலும்பும் தோலுமாக ஆகிக் கொண்டு வருகின்றாரே? என்ற கவலை நெஞ்சைக் கவ்வியது.

முற்றத்தில் பெய்த மழையைப் பார்த்தபடி... சோற்றை அளைந்து கொண்டிருந்தாள்.

''என்னம்மா யோசனை பண்ணிட்டிருக்கே? சாப்பிடும்மா... வானதி, ஊருக்கு போனதும் போன் ஏதும் பண்ணினாளா?'' என்ற அப்பாவை திரும்பி பார்த்தாள்.

வானதி இரண்டு வாரங்கள் இவளுடன் தங்கியிருந்து விட்டு.. நேற்று தான் ஊருக்கு சென்றிருந்தாள்.

குணசேகரன் வந்து மகளை அழைத்துச் சென்றிருந்தார்.

''இன்னிக்கு காத்தால போன் பண்ணிப் பேசினா அப்பா! மாலதி அக்காவும், அத்தானும் வீட்டுக்கு வந்திருக்காங்க போல... போன்ல மாலதி அக்காவும் என்கிட்ட பேசினாங்க''

''உம்! குணசேகரன் குடுத்து வச்சவரு தான்! மாலதிக்கு தங்கமான மாப்பிள்ளை வாய்ச்சுட்டானே? வானதியை கரை சேர்த்துட்டா.. அவர் பாடு நிம்மதி தான்''

வெண்ணிலாவுக்கு சட்டென்று சூரியாவின் புன்னகை பூத்த முகம் தான்.. ஞாபகத்திற்கு வந்தது.

''என்னது இது? தேவையில்லாத எண்ணம் தலை காட்டுகிறதே?

டூர் போன இடத்துல போட்டிங் போன போது படகு தண்ணியில கவிழ்ந்திடுச்சு. நல்ல வேளை! தப்பிச்சு வந்துட்டேங்க.

அதான் தப்பிச்சு வந்துட்டீல. பிறகு எதுக்கு நல்ல வேளைன்னு சொல்ற? எனக்கு கெட்ட வேளைன்னு மாத்தி சொல்லு.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.



அடிக்கடி அந்த சாந்தமான முகம் ஞாபகத்திற்கு வந்து தொலைக்கிறதே?

இது எனக்கு நல்லதில்லையே?''

மனதைத் தட்டி அடக்கினான்.

''சிவகாமி! நம்ம திவாகர் மாப்பிள்ளை எம்.எஸ்.முடிச்சிட்டாரு இல்லையா? கூடிய சீக்கிரம் பெரிய மருத்துவமனையில ஜாயின் பண்ணிடுவாரு.

இனி அவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கு. அவங்க வீட்டிலேயே வராண்டாவுக்கு பக்கத்துல இருக்கற அறையை அப்படியே சின்ன கிளினிக்கா மாத்திட்டோம்னா சாயந்தரமோ காலையிலேயோ திவாகர் மாப்பிள்ளை பத்து பத்து பேஷண்ட்டை கவனிச்சாப் போறும்.

ஆத்திர அவசரத்துக்கு ஒரு டாக்டரைப் பார்க்கணும்னா... ரொம்ப தூரம் நாம போக வேண்டியிருக்கு.

சீக்கிரம் அவரு மார்க்கெட்டைப் பிடிச்சுடலாம். எதிர் காலத்துல அவரோட திறமை, கைராசியைப் பொறுத்து அவர் பெரிய நர்ஸிங்ஹோமா கட்டிக்கிடட்டும்.

திலகா பொண்ணை ஒருத்தன் கையில பிடிச்சுக் குடுத்துட்டோம்னா.. சரோஜினிக்கு பாரம் குறைஞ்சிடும்.

அப்புறம் என்ன? வெண்ணிலாவையும் திவாகரையும் மாலையும் கழுத்துமா ஜோடியா பார்த்துட்டா.. நாமளும் நிம்மதியா பெருமூச்சு விடலாம் இல்லையா?

அதுக்கு முன்னாடி நாம ஒரு முக்கியமான முடிவெடுத்தாகணும் சிவகாமி!''

''பீடிகை போடாம விஷயத்துக்கு வாங்க. என்ன முடிவு? என்ன சங்கதி? நீங்க ஒண்ணு சொன்னா.. அது சரியாகத் தானிருக்கும். சொல்லுங்க''

''இல்ல.. இ.. இந்த திவாகர் மாப்பிள்ளையை ஆரம்பத்துல மெடிக்கல் காலேஜில சேர்த்தோம் இல்லியா?

சில லட்சங்களை செலவு பண்ணித்தானே நாம்ப சீட் வாங்கிக் கொடுத்தோம்?

அதுக்கு அப்புறம் எம்.பி.பி.எஸ். படிப்புக்கும் எம்.எஸ்.முடிக்கிறதுக்கும் ஏகப்பட்ட செலவாச்சு இல்லியா?''

சத்தியமூர்த்தியின் தங்கை சரோஜினிக்கு தனது மகனை டாக்டராக்கிப் பார்க்க வேண்டும் என்று கழுத்து மட்டும் ஆசை இருந்தது நிஜம்!

மகன் திவாகர் மெரிட்டில் தேறி வந்து விடுவான் என்று நூறு சதவீதம் நம்பினாள். அந்த நம்பிக்கையில் மண் விழுந்ததும். அண்ணன் சத்தியமூர்த்தியிடம் அழுதழுதே காரியத்தை சாதித்து விட்டாள் சரோஜினி.

''அண்ணே! என் துரதிர்ஷ்டத்தைப் பார்த்தியா? சின்ன வயசிலேயே பூவையும் பொட்டையும் இழந்தேன்.

இந்த ரெண்டு குழந்தைங்க மட்டும் இல்லேன்னா.. நான் என்னிக்கோ செத்திருப்பேன். என் ஆசை, கனவு, லட்சியம் எல்லாமே...



என் மகனை டாக்டராக்கிப் பார்க்கிறதுலே தான் இருக்கு!

எனக்குன்னு யார் இருக்காங்க அண்ணே! உன்னை விட்டா எனக்கு யாரு கதி? காசு பணத்தை நீ கணக்கு பார்க்கவே மாட்டே! எனக்கு நல்லாத் தெரியும். மார்க் கொஞ்சம் கம்மியாயிடுச்சு.

பணம் கட்டி எப்படியாவது சீட்டை வாங்கிக் குடுத்துருண்ணே திவாகர் யாரு? உன் மருமகன்! நாளைக்கே நம்ம நிலாவோட கழுத்துல தாலியைக் கட்டி உன் வீட்டு மருமகனாகப் போறவன் தானே?

எப்படியாவது அவனை டாக்டருக்கு படிக்க வச்சிடணும் அண்ணே!'' சட்டென்று கதறிக்கொண்டே சத்தியமூர்த்தியின் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் சரோஜினி.

அவ்வளவு தான்! பாசத்தில் அவரது மனம பாகாய் கரைந்து போனது.

''அட என்னம்மா நீ? திவாகரை டாக்டருக்கு படிக்க வைங்கன்னு உத்தரவு போடும்மா. உனக்கு சகல உரிமையும் இருக்கு. என்னத்துக்கு இப்படி அழுது கெஞ்சிட்டிருக்கே? பைத்தியக்காரி!

சத்தியமூர்த்தி தான் சத்தியம் தவறாதவர் ஆயிற்றே? கொடுத்த வாக்கை காப்பாற்ற அவர் கடனை வாங்கினார்.

வட்டி கட்ட முடியாமல் திணறினார். தமது குடும்ப பாரத்தையும் தங்கையின் குடும்ப பாரத்தையும் சேர்த்து சுமந்ததில்... ஏற்கனவே அவருக்கு விழி பிதுங்கிக் கொண்டிருந்தது.

சத்திக்கு மீறிய செலவு தான்! ஆனால் சளைக்காமல் உழைத்தார். தென்னந்தோப்பை அடமானம் வைத்தார். நஞ்சை, புஞ்சை நிலங்களை கொஞ்சம், கொஞ்சமாக விற்றார். கடன் ஓயவில்லை.

வட்டி குட்டி போட்டு அசலுக்கு நிகராக வளர்ந்து நின்றது.

''என்னங்க? என்னங்க?.. சொல்ல வந்ததை முழுசா சொல்லி முடிக்காம அப்படி என்ன பலமா யோசிச்சுட்டிருக்கீங்க? எதுவா இருந்தாலும் தயங்காம சொல்லுங்க'' மனைவி சிவகாமி அழுத்தம் திருத்தமாக கூறியதும் டம்ளரை எடுத்து தண்ணீரைப் பருகி விட்டு நிமிர்ந்தார் சத்தியமூர்த்தி.

''கடன் சுமை கழுத்தை நெரிக்குது சிவகாமி! எதிர்த்த வீடு நல்ல விலைக்கு வருது. பேசாம அதை வித்துட்டு கடனை அடைச்சுட்டோம்னா ராத்தரியில நிம்மதியா கண்ணை மூடித் தூங்கலாம்.

ஆனா அந்த வீடு உனக்கு சொந்தமானது ஆச்சே? உன் பிறந்த வீட்டுலேர்ந்து உனக்கு வந்த பங்கு பணத்தை வச்சு.. அந்த வீட்டை உன் பேருக்கு வாங்கி விட்டோம். அதான் எனக்கு கேட்கவே ரொம்ப தயக்கமா இருக்கு.

பேசாம இந்த வீட்டை விற்க ஏற்பாடு செய்துடட்டுமா? கடனை அடைக்க.'' அவர் பேசி முடிப்பதற்குள் இடை மறித்தாள் சிவகாமி.

''சும்மா இருங்க. இது நாலஞ்சு தலை முறையா புழங்கின பரம்பரை வீடுங்க. இதை விக்கணும்னு கனவுலே கூட நினைக்க வேணாம். அந்த வீடு எனக்கு

எதிர்த்த வீட்டை நல்ல விலைக்கு குடுத்துடுங்க. நான் என்ன வேத்து சொந்தமானதுன்னு ஏன் பிரிச்சுப் பேசறீங்க? மனுஷியா? தூங்கறதே இல்லை.

கடன் சுமையில நீங்க சரியா சாப்பிடறதில்லை.

இப்படியே போனா.. உங்க உடம்பு என்னத்துக்கு ஆகும்னு நான் புழுங்கிக்கிட்டிருக்கேன்.

அதுக்கு ஒரு விடிவு காலம் பொறந்திடுச்சின்னு நான் சந்தோஷப் படறேன். இதுல என்ன வருத்தம்னா பொருளாதார ரீதியா இந்தக் கஷ்டம் மட்டும் நமக்கு வராம இருந்திருந்தா அந்த வீட்டை நம்ம நிலாவுக்கு சீராக கொடுத்திருக்கலாம்.

அதான் கொஞ்சம் வேதனையா இருக்கு சரி விடுங்க!

இந்தக் கடன் எப்படி வந்தது? நம்ம மாப்பிளையைப் படிக்க வச்சதால தானே? எப்படியோ அவரு டாக்டராகி வெளியே வந்துட்டாரே?

இன்னும் கொஞ்ச காலத்துல இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாகப் போகிறவருக்கு தானே இத்தனை பாடு பட்டோம்? உங்க கஷ்டத்துல நானும் பங்கெடுத்துக்கிடறதிலே ரொம்ப சந்தோஷப் படறேன்.

வீட்டை நல்ல விலைக்கு கேட்கிறாங்கன்னு சொன்னீங்க. சீக்கிரமா முடிச்சுட்டு கடனை அடைக்கப்ப பாருங்க.''

வெண்ணிலாவுக்கு கண்களில் நீர் துளிர்த்தது.. நீர் திரையிட்ட விழிகளால் அப்பாவை ஏறிட்டாள்.

அவருக்கும் கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது. ''உன்னை மனைவியாக அடைய நான் ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும் சிவகாமி!

கணவனோட சம்பாத்தியத்தைப் பிடுங்கி பீரோவில வச்சுப் பூட்டிட்டு மாமியார் மாமனாரை வயிறு காய வச்சு முதியோர் இல்லங்களுக்கு தள்ளறாங்க.

அப்படிப் பட்டவங்களுக்கு மத்தியில உன் குணத்தை நெனைச்சா பெருமையா இருக்கு சிவகாமி! தங்கச்சி குடும்பத்தை தூணா நின்னு தாங்கிட்டிருக்கேன். முகம் சுளிச்சு ஒரு வார்த்தை பேசினதே இல்ல நீ!

இப்போ எல்லாத்துக்கும் சிகரம் வச்சாப்பல உன் பிறந்த வீட்டுப் பணத்துல வாங்கின வீட்டை கூட விட்டுத் தர்றியே? உன் மனசு யாருக்கு வரும?'' தழுதழுத்தார்.

''அட என்னங்க நீங்க? பெரிய பேச்செல்லாம் பேசிக்கிட்டு? நீங்க உத்தமர், நாணயமானவர், நேர்மையானவர் ரொம்ப நல்ல மனிதர்.

உங்களை கணவரை அடைஞ்சதுக்கு நான் தான் ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்கேன்.'' சிவகாமி நெகிழ்ந்து போய் கிசுகிசுப்பாகப் பேசி முடித்தாள்.

வெண்ணிலாவின் விழிகளில் பொங்கிய கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு.. கன்னங்களில் வாய்க்கால் போட்டு இறங்கியது.

'இப்பேர்ப்பட்ட ஆதர்ஷ் தம்பதிகளுக்கு மகளாகப் பிறக்க பொருத்தமான ஜோடியை... வேறு எங்காவது பார்க்க முடியுமா? அவளது மனம் பெருமிதத்தில் பொங்கிப் பூரித்தது.

திவாகருக்காக வரிந்து கட்டிக் கொண்டு.. அந்தக் குடும்பமே அளவில்லாத தியாகங்களை செய்தது என்பது நிஜம்!

''ஆனால் திவாகர்? இவர்களது அன்புக்கு பாத்திரமானவன் தானா?' என்ற அய்யப்பாடு ஒருவர் மனதிலும் எழவே இல்லை என்பது தான் துரதிர்ஷ்டம்!

அந்த நன்றி மறந்த நயவஞ்சக நரி இவர்களது தியாகத்தையும், அன்பையும், பட்ட பாட்டையும் துச்சமாக எண்ணித் தூக்கி எறிந்து விட்டு இவர்களைத் துயரக்கடலில் தள்ளி விட தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

## 9

அவல் கேசரியில் தாராளமாக நெய்யை வார்த்துக் கிளறி கொண்டிருந்தாள் சரோஜினி.

ஊதிப் பருத்து வெடித்த விடுவது போன்று ரோடு ரோலர் சைஸில் இருந்தாலும் சரோஜினிக்கு சமையலில் நெய்யைச் சேர்த்துக் கொள்ளாவிட்டால் தொண்டைக்குள் எதுவும் இறங்கவே இறங்காது.

தினமும் அவல் கேசரி, ரவாகேசரி, ரவா லட்டு, பயித்தம் பருப்பு லட்டு என்று ஏதாவது இனிப்பை நெய்யில் கிளறி சுவைத்து சாப்பிடாவிட்டால் அவளுக்குத் தலையே வெடித்து விடும்.

நான்கு படிகளில் ஏறி இறங்குவதற்குள் அல்லது ஒரு தெருவில் இருபதடி தூரம் நடப்பதற்குள் அவளுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கி விடும்.

எண்ணெய் பலகாரங்களை கண்ணிலேயே பார்க்கக்கூடாது என்று அவளை குடும்ப மருத்துவர் எச்சரிந்தார்.

அவளால் தொடர்ந்து நாக்கை கட்டுப்படுத்தவே முடியாது. மகன் திவாகருக்கு அம்மாவைப் போலவே புஷ்டியான உடல்வாகு தான்.

திலகாவோ நேர் எதிர்ப்பதமாக ஒல்லிக்குச்சியாக இருந்தாள்

சரோஜினிக்கு மகன் டாக்டருக்குப் படித்து முடித்ததும் சந்தோஷம் பிய்த்துக் கொண்டு விட்டது.

மட்டற்ற மகிழ்ச்சியில் மனம் இறக்கை கட்டிப் பறந்தது. உணவுக் கட்டுப்பாட்டில் இருந்த கொஞ்ச நஞ்ச கவனமும் காற்றில் பறந்தது.

வீட்டிலேயே டாக்டர் இருக்கும் போது 'நம் உடம்புக்கு என்ன கேடு வந்து விடப் போகிறது.?' என்ற அசட்டையான எண்ணமும் 'என் மகன்

உங்களை முதல் முதலா நான் பார்த்த நாள்ல இருந்து என் மனசுக்குள்ளே நாம கணவன் மனைவியாவே வாழ்ந்துக்கிட்டிருக் கோம்ங்க.

பிறகு எதுக்கு காயத்ரி என்னை இன்னொரு முறை தாலி கட்டச் சொல்லி கட்டாயப்படுத்துற?

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.



பெரிய டாக்டராக்கும்' என்ற அகம்பாகவமும் அவளிடம் ஒரு சேரத் தலை தூக்கின.

''அம்மா! புடவை சீட்டுக்காரரு வந்திருக்காரு. பட்டு ரோஸ் கலர்லே பிரிண்டட் சில்க் புடவை ரொம்ப, ரொம்ப அழகா இருக்கும்மா வந்து பாரேன்!

இந்த வாட்டி நிறைய தினுசா கொண்டு வந்திருக்காரு.'' பரபரப்பாகக் கூறியபடி தாயின் தோளைத் தொட்டாள் திலகா.

அடுப்பை அணைத்த சரோஜினி ''கேசரியைக் கிளறிட்டேன். அதோ அந்த தட்டுலே நெய்யிலே வறுத்த முந்திரியும், உலர் திராட்சையும் இருக்கு பாரு அதை அப்படியே இதுல கொட்டி கரண்டியால் கிண்டி விட்டுரு.'' உத்தரவிட்டபடியே கூடத்திற்கு விரைந்தாள். ஈரக்கைகளைப் புடவை முந்தானையில் துடைத்துக் கொண்டே கூடத்திற்கு வந்தாள் சரோஜினி.

தீபாவளி, பொங்கல், வீரபாண்டித் திருவிழா போன்ற சமயங்களில் தவறாமல் கணிசமான தொகையில் தங்கையின் குடும்பத்திற்கே துணிமணிகள் எடுத்துக் கொடுத்து விடுவார் சத்தியமூர்த்தி.

சரோஜினிக்கும், திலாகவுக்கும் 'போதும் என்ற மனமே' கிடையாது. திலகாவுக்கு படிப்பு அவ்வளவாக மண்டையில் ஏறவில்லை. பத்தாம் வகுப்போடு படிப்புக்கு முழுக்கு போட்டு விட்டாள்.

திலகாவுக்கு புடவைகள் மேல் அப்படியொரு மோகம்! சத்தியமூர்த்திக்கு தெரியாமல் புடவை சீட்டுக்காரரிடமும் புடவைகள் வாங்கிக் கொடுத்து விடுவாள் சரோஜினி.

வீட்டு செலவுக்கென்று சத்தியமூர்த்தி தாராளமாக பணத்தை கொடுத்து விடுவார்.

மாதத்தில் முக்கால் வாசி நாட்கள் சமைக்காமலேயே காலத்தை ஓட்டி விடுவாள் சரோஜினி.

''அண்ணே! ரொம்பவும் உடம்புக்கு முடியலை. நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கு. நேத்து ராத்திரியில இருந்து மண்டை வலிக்குது. என்னால சமைக்க முடியலை அண்ணே.'' போனில் தழுதழுத்து பேசிவிட்டால் போதும்.!

அடுத்த அரை மணி நேரத்தில் சாதம், குழம்பு, பதார்த்தங்களை கேரியரில் வைத்து நிரப்பிக் கொண்டு வந்து விடுவாள் வெண்ணிலா.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதில் சரோஜினியை யாரும் அடித்துக் கொள்ளவே முடியாது.

''டாக்டரைப் பார்த்தியா சரோஜினி? உன் உடம்புக்கு என்னவாம்? ஊசி ஏதாச்சும் போட்டாரா?'' என்று கரிசனமாக வந்து விசாரிக்கும் சத்தியமூர்த்தியிடம்.. அழகாய் கதை கட்டி விடுவாள் சரோஜினி.

''அண்ணே! நான் உனக்கு ரொம்ப சிரமத்தைத் தர்றேன். கடவுள் எனக்கு நோய்களையும் வாரிக் கொடுத்துட்டாருண்ணே. எக்ஸ்ரே, இ.ஸி.ஜி., ஸ்கேன்.. இன்னும் பிளட் டெஸ்ட்டுன்னு நிறைய எடுக்க சொல்லியிருக்காங்க.

நடக்கிறது நடக்கட்டும். நான் இப்படியே இருந்துட்டுப் போறேன். எல்லாம் என் விதி!'' என்று பிழியப் பிழிய அழுது விடுவாள் சரோஜினி.



''சுவரை வைத்து தான் சித்திரம் வரைய முடியும்'னு பெரியவங்க சொல்லுவாங்க. உனக்கு ரெண்டு பிள்ளைங்க இருக்காங்க அவங்களுக்கு கல்யாணம் காட்சி செய்து வச்சு நீ கண்குளிரப் பார்க்க வேணாமா? உனக்கு பெரிய கடமைகள் காத்திருக்கே? மறந்துட்டியா?

நீ இப்படியெல்லாம் விரக்தியா பேசறதை விட்டுட்டு... முதல்ல என்னென்ன டெஸ்ட்டுகள் எடுக்கணுமோ எடுத்துட்டு டாக்டரைப் பாரும்மா

இன்னும் ஒரு மணி நேரத்துல பணத்துக்கு ஏற்பாடு பண்ணி... எடுத்துட்டு வந்துடறேன்.'' என்று பதற்றமாக விரைவார் சத்தியமூர்த்தி.

அண்ணனின் ரத்தத்தை அட்டையாக உறிஞ்சுகிறோமே? என்று அவளதுமனசாட்சி சிறிதும் உறுத்தியபடியே இல்லை. ஒவ்வொரு மாதமும் பணத்தைக் கறப்பதற்கு வித வித யுக்திகள் அவளுக்குள் உதித்து விடும்.

''திலகாவுக்கு இரத்த சோகையாம். தொடர்ந்து ட்ரீட்மெண்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லிட்டாங்க'' என்பாள்.

''திவாகருக்கு ஏதோ பெரிய புஸ்தகம் வாங்கணுமாம். கொஞ்சம் விலை ஜாஸ்தியான புஸ்தகமாம்.. மாமா கிட்டே கேட்க எனக்கு கூச்சமாயிருக்குன்னு தயங்கித் தயங்கி என்கிட்ட விஷயத்தை சொன்னாள் அண்ணே!'' என்று கதை திரித்து விடுவாள்.

''பாத்ரூமிலே வழுக்கி விழுந்திட்டேன் அண்ணே! இடுப்பெலும்பே தனியா கழண்டு கிட்டாப்ல உயிரு போகிறாப்ல வலி பின்னியெடுக்குது. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துட்டா தேவலாம் அண்ணே'' என்பாள்.

அண்ணனிடம் பொய்யைச் சொல்லி பணத்தைக் கறப்பதில் அவளக்கு அலாதி சுகம் தான்! அந்த பணத்தை சேமித்து வைத்த மகள் திலகாவுக்கு ஏதாவது பொருளை வாங்கிக் கொடுத்து விடுவாள்.

புடவை சீட்டுக்காரரிடம் மாதா மாதம் பணத்தைக் கட்டி திலகா ஆசைப்பட்ட புடவைகளை வாங்கிக் கொடுத்து விடுவாள்.

''புடவையைப் பாருங்கம்மா! இந்தப் பட்டு ரோஸ் கலரு நம்ம வீட்டு பாப்பாவோட நிறத்துக்கு எடுப்பா இருக்கும்மா

பாப்பாவுக்கும் இதை பார்த்ததுமே ரொம்ப பிடிச்சு போச்சு''

புடவை சீட்டுக்காரர் பட்டு ரோஜா வண்ண பிரிண்டட் சிலக் புடவையை நன்கு விரித்துக் காண்பித்தார்.

''சரி! அதை சட்டுன்னு மடிச்சுக் குடுங்க.. இந்தாங்க இந்த மாசத் தவணைப் பணம். சீக்கிரமா இடத்தை காலி பண்ணுங்க.. எங்கண்ணன் வர்ற நேரம் இது!

அவருக்கு இந்த மாதிரி தவணை முறையில புடவைங்கிற எடுக்கற விஷயமெல்லாம்.. கொஞ்சம் கூட பிடிக்காது.

கோவிச்சுக்குவாருன்னு பயமா இருக்கு. அதான்!'' பரபரத்தாள்.

மறு நிமிடமே புடவை சீட்டுக்காரர் மாயமாய் மறைந்தான்.

''இந்தாங்கம்மா கேசரி'' சிறு தட்டில் கேசரியையும், ஒரு ஸ்பூனையும் வைத்து நீட்டினாள் திலகா.

''ரொம்ப தேங்க்ஸ் அம்மா! பட்டு ரோஸ் கலரு கண்ணைப் பறிக்குதுல்ல?''

பிளாஸ்டிக் உறையிலிருந்த புடவையை ஆசையுடன் வருடினாள் திலகா.

''சந்தோஷப் பட்டது போதும்! முதல்லே எடுத்த பீரோவில வச்சு பூட்டு.. உங்க மாமா வந்துடப் போறாரு. அடுத்த மாசத்துல இருந்து திவாகர் கை நிறைய சம்பாதிக்க ஆரம்பிச்சதும் நாம யாருக்கும் எதுக்கும் பயப்படத் தேவையில்லை...

நம்ம வாழ்க்கைத்தரமே 'கிர்ருனு' பன் மடங்கா உசந்துடும். மசமசன்னு நிக்காதே! உங்க மாமா வர்ற நேரம் இது. தெரியுமில்ல?'' துரிதப் படுத்தினாள் சரோஜினி.

''ஆமா! பெரிய்ய மாமா தான்.. அரவை மில்லுலே வேலை முடிஞ்சதும் அப்படியே கிளம்பி வந்துடுவாரு மனுஷன்.

மிளகாய்த்துள், மல்லித்தூள் வாசனையெல்லாம் அவர் போட்ட டிரஸ்லே ஆரம்பிக்கும் போல?

மனுஷன் வீட்டுக்குள்ளே நுழையும் போதே காரம், மசாலா நெடிதான் மூக்கைத் துளைக்குது. அப்பப்பா என்ன ஒரு காட்டமான நெடி?

நம்ம வாழ்க்கைத் தரம் கிர்ருனு உசந்ததும் இதே மாமா இப்படி அதே கோலத்துல தினமும் வீட்டுக்குள்ளே நுழைவாரே அதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே அம்மா?'' கேட்டு விட்டு புதுப் புடவையை பீரோவில் மறைத்து வைக்க உள்ளே விரைந்தாள் திலகா.

கூடத்த சோபாவில் பலத்த யோசனையுடன் புதைந்து போய் அமர்ந்திருந்தாள் சரோஜினி.

அதே சமயம்.. பருப்பு உருண்டைக் குழம்பும், காலிபிளவர் கூட்டும் சமைத்துக் கொண்டு அத்தையின் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள் வெண்ணிலா.

சத்தியமூர்த்தியும் வேலையை முடித்துக் கொண்டு சைக்கிளில் வந்து விட.. தெரு முனையில் இருவரும் சந்திக் கொண்டு பேசிய படி சரோஜினியின் வீட்டிற்குள் நுழைய எத்தனித்த போது தான் திலகா துச்சமாக சத்யமூத்ர்த்தியை பற்றி பேசியது அவர்களது காதில் நாராசமாய் விழுந்தது.

''மிளகாய்த்தூள் காரத்திலும், மிஷின்கள் உமிழும் வெப்பத்திலும் நாள் முழுவதும் அயாரது உழைத்த அப்பாவைப் போய் மரியாதைக் குறைவாக நினைக்கிறாளே திலகா?

ஸ்தம்பித்து நின்று விட்டாள் வெண்ணிலா. சத்தியமூர்த்தி சட்டென்று குனிந்து தன் உடையை ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

மவுனமாக சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்த வழியே சென்றார்.

கீழுதட்டை அழுந்தக் கடித்து பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு.. டிபன் கேரியரை கூடத்து மேஜைமேல் வைத்து விட்டு ''உங்களுக்குப் பிடிச்ச கூட்டும், பருப்பு உருண்டைக் குழம்பும் வச்சிருக்கேன் அத்தே'' என்று சொல்லி விட்டு வெளியேறினாள்.

சத்தியமூர்த்தி சரோஜினியின் மேல் அளவு கடந்த பாசம் வைத்து இருந்தார்.

அந்தப் பாசமே விரைவில் பாசக்கயிறாக மாறி அவரது உயிரை வாங்கப் போகிறது என்பதை வெண்ணிலா எதிர்பார்க்கவேயில்லை.



## 10

சூரியாவுக்கு இரட்டிப்பு சந்தோஷமாக இருந்தது. வீடு நல்ல விலைக்குத் தான் போனது. அந்தப் பணத்தை வைத்து அப்படியே ஒரு நல்ல வீட்டை வாங்கிப் போட வேண்டும் என்று தரகர்களை முடுக்கிவிட்டிருந்தான்.

அப்பா பரந்தாமன் நிம்மதியாக நிச்சலனமாக தமது காலத்தை கழிக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் நல்ல சூழலில் வீடு அமைந்திருக்க வேண்டுமே என்று உள்ளூர தவித்துக் கொண்டிருந்தான் சூரியா.

பெரிய குளத்தில் புராதன சிறப்பு பெற்ற பாலசுப்பிரமணியர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்திருந்த வீட்டைப் பார்த்ததுமே அவனுக்கு சட்டென்று பிடித்து விட்டது.

அமைதியும், நிம்மதியும் நிலவும் இடம் மட்டுமல்ல பழைய வீடு தான் என்றாலும் வீட்டின் முன்புறம் மகிழ மரம், இருவாட்சி, பவள மல்லி, நித்ய மல்லிகை என்று பச்சைப் பசேலென்று தோட்டம் கண்களுக்கு விருந்தளித்தது.

வீட்டின் ஜன்னலுக்கு முன்புறமாக கிளைகளை அசைத்தபடி வேப்பமரம் சுத்தமான காற்றை வேப்பம் பூக்களின் மணத்தோடு வினியோகம் செய்து கொண்டிருந்தது.

''வீட்டுக்கு சொந்தக்காரங்க அதோ எதிர் வீட்டுல தான் இருக்காங்க. உங்களுக்கு பிடிச்சிருந்தா வாங்க.. கையோடு பேசி முடிவு பண்ணிடலாம். என்ன சொல்றீங்க சார்?'' என்று தரகர் கேட்ட போது.. ஏதேச்சையாக எதிர் வீட்டை ஏறிட்டான் சூரியா.

அன்று வெள்ளிக்கிழமை! மாலை ஐந்து மணி வாக்கில் வாசல் தெளித்து கோலமிட்டு விட்டு நிமிர்ந்தாள் வெண்ணிலா. தற்செயலாய் எதிர்புறம் பார்த்தவளின் கண்களில் சூரியா பட்டு விட்டான்.

அவளது விழிகளில் ஆச்சரிய மின்னல்கள் ஒருகணம் தோன்றி மறைந்தது. மறுகணம் கோலமாவு கிண்ணத்தை நிலைப்படி அருகே ஓரமாக வைத்து விட்டு உள்ளே ஓடி விட்டாள் வெண்ணிலா.

சூரியாவுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது. அப்பாவுக்கு ஏற்ற வீடு! அருகே பிரசித்தி பெற்ற கோவில்! சிறு

''வாங்க... வாங்க... முதலில் யூரின் டெஸ்ட், பிளட் டெஸ்ட், எக்ஸ்ரே எடுத்துக்கிட்டு வாங்க''

''டாக்டர். நான் வைத்தியம் பார்க்க வரலை. வாடகை பாக்கி எப்போ தர்ற போறீங்க?''

-செல்வராஜா, சேலம்.



ஜிலுவென்று காற்று வசதி, அருகாமையில் சலசலத்து ஓடும் வராக நதி மனதிற்கும், உடம்பிற்கும் இதமளிக்கும் சூழல்!

அது மட்டுமா? அவன் மனதை ஆக்கிரமித்த அழகு தேவதை எதிர் வீட்டில் அல்லவா குடியிருக்கிறாள்?

புதுப்புனலாய் மனதிற்குள் புதுத்தெம்பும் உற்சாகமும் குபுகுபுவென்று ஊற்றெடுத்தன.

தரகர் சத்தியமூர்த்தியின் செல்போனுக்கு முயற்சித்தார். இணைப்பு கிடைத்ததும் தகவலைத் தந்து விட்டார். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்து விட்டார் சத்தியமூர்த்தி.

''ரெண்டு பேரும் வெளியே நிக்கிறீகளே? வாங்க உள்ளே வந்து உட்காருங்க'' உபசரித்தார்.

அவரது கனிவையும், கண்ணியமான தோற்றத்தையும் பார்த்த மாத்திரத்திலேயே... சூரியாவுக்கு அவரை மிகவும் பிடித்து விட்டது. விலையைப் பேசி முடிவு செய்ததும் இருவருக்குமே திருப்தி!

மனம் விட்டுப் பேசினான் சூரியா.

சத்தியமூர்த்திக்கும் சூரியாவின் மேல் ஒரு ஈடுபாடு வந்து விட்டது.

''பரவாயில்ல! இந்தக்காலத்துல இப்படியொரு இளைஞரை பார்க்கிறது ரொம்ப கஷ்டம்.

அப்பாவோட மனசும், உடம்பும் ஆரோக்கியமா இருக்கணும். அவருக்கு நிம்மதி கிடைக்கணும்னு இவ்வளோ சிரத்தை எடுத்துக்கறீங்க? நல்ல விஷயம் தம்பி!

இந்த வீடு ரொம்ப ராசியான வீடுப்பா இங்க குடி வந்த பின்னாடி பாருங்க உங்காப்பாவுக்கு நல்ல தேக ஆரோக்கிமும், மனநிம்மதியும் கிடைக்கும்.

உங்க குணத்துக்கு ஏத்த மாதிரி ஒரு மகாலெட்சுமி மாதிரியான பொண்ணு வீட்டுக்கு விளக்கேத்த வருவா பாருங்களேன்''' பாராட்டினாள் சிவகாமி.

''உங்க வாக்கு பலிக்கட்டும் அம்மா'' சங்கோஜத்துடன் முறுவலித்தான்.

''வெண்ணிலா! சீக்கிரமா காபி கொண்டு வாம்மா'' உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள் சிவகாமி.

காபி டிரேயை வெண்ணிலா அவன் முன் நீட்டியதும் அவளது முகத்தை ஆர்வத்துடன் பார்த்தான் சூரியா.


நான்கு விழிகளும் கலந்தன. சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டாள் வெண்ணிலா.

''தேங்க்ஸ்'' என்று கூறி விட்டு காபி டம்ளரை எடுத்துக் கொண்டான். பாலில் பனை வெல்லத்தைத் தட்டிப் போட்டு தயாரிக்கப்பட்ட காபி.. கம கம வென்று அமிர்தமாய் இனித்தது.

''காபி ரொம்பப் பிரமாதமா இருக்கு சார்! நல்ல வீடு அமையறது முக்கியமில்லை நல்ல சூழல்! சுத்தி நல்ல மனுஷாள் தான் அமையணும். அதான் ரொம்ப, ரொம்ப முக்கியம்.

எனக்கு ரொம்பவே திருப்தியா இருக்கு. சின்ன சின்ன ஆல்ட்ரேஷன் பண்றதுக்கு ஏற்பாடு பண்ணிட்டு.. கூடிய சீக்கிரமே நாங்க குடி





வந்துடறோம் சார்!''

எழுந்து நின்று கை கூப்பினான் சூரியா.

அவனது கண்ணியமான பேச்சும், பணிவும் சத்யமூர்த்தியின் உள்ளத்தை தொட்டன.

சொன்னது போலவே இருவாரங்களில் குடி வந்து விட்டான் சூரியா.

பரந்தாமனும் சத்தியமூர்த்தியும் தோழமை உணர்வில் நட்பு கொள்ள ஆரம்பித்தவர்கள் தான்! நாளாக ஆக நெருங்கிய நண்பர்களாகி விட்டிருந்தனர்.

காலையில் ஒன்றாகச் சேர்ந்து வாக்கிங் சென்றனர். இரவு சாப்பிட்டு முடிந்ததும் வெகு நேரம் வேப்பமரத்தடியில் கயிற்றுக்கட்டிலைப் போட்டு அமர்ந்து அளவளாவினர்.

அந்த வீட்டில் சமையல் செய்வதற்கு ஒரு சமையல் காரரை ஏற்பாடு செய்து கொடுத்து உதவினார் சத்தியமூர்த்தி.

அங்கு குடிவந்து மூன்றே மாதங்களில் ஒரு சுற்று பருத்து விட்டிருந்தார் பரந்தாமன்.

கழுத்தை நெரித்த கடன் தொல்லை தீர்ந்து விட்டதில் சத்தியமூர்த்திக்கு பெருத்த நிம்மதி ஏற்பட்டிருந்தது.

தேனியிலிருந்த பிரபல 'மதி மருத்துவமனையில்' பணியாற்றிக் கொண்டிருந்தான் திவாகரன்.

சூரியா, பிராஜெக்ட் சம்பந்தமாக வெளிநாட்டுக்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை!

ஈஸி சேரில் ஓய்வாக சாய்ந்து அமர்ந்திருந்தார் சத்தியமூர்த்தி. ''நான் உள்ளே வரலாமா?'' கேட்டபடி என்று தயங்கி நின்ற சூரியாவை ஆர்வத்துடன் பார்த்து வரவேற்றார்.

''வாப்பா! இது நம்ம வீடு! வரதுக்கு என்ன தயக்கம்?''

''பிராஜெக்ட் விஷயமா கம்பெனி சார்பா நான் சிங்கப்பூருக்கு கிளம்பறேன். சென்னைக்குப் பேய் பிளைட் பிடிக்கணும்.

விடியற்காலையிலேயே மதுரைக்குப் போயிடுவேன். திரும்பி வர்றதுக்கு ரெண்டு மூணு மாசமாயிடும். அதான் உங்க கிட்ட சொல்லிக்கலாம்னு வந்தேன்.

நீங்க இருக்கிறதால அப்பாவையும் சந்துருவையும் பத்தி கவலைப்

''நீங்க நிறைய குடிப்பீங்களா?''

''எப்படி டாக்டர் கண்டுபிடிச்சீங்க?''

''உங்க இதயம் 'பெக், பெக்' னு துடிக்குது''

-வந்தை ஜி.கே.நிதி.





S.V.

படாம நான் நிம்மதியா இருக்கலாம்.

அம்மாவையும் கூப்பிடுங்க. உங்க ரெண்டு பேத்தையும் நான் நமஸ்காரம் பண்ணிக்கிறேன்.'' என்றான் சூரியா.

''சிவகாமி! சீக்கிரமா வா! சூரியா தம்பி வந்திருக்கு பாரு'' என்று குரல் கொடுத்துவிட்டு திரும்பினார் சத்யமூர்த்தி.

''அப்பா நாளைக்கு மதுரைக்குப் போய்... சென்னைக்கு விமானத்துல பயணப்படறீங்களா சூரியா?''

''ஆமா''

சிவகாமி வந்துவிட.... இருவரையும் சேர்த்து வைத்து நமஸ்கரித்ததான் சூரியா.

''மகராசனா இருக்கணும். தீர்க்காயுசா இருந்து பல வெற்றிச் சிகரங்களை நீங்க தொடணும். நிறைய சாதிக்கணும்'' மனமார வாழ்த்தினார் சத்தியமூர்த்தி.

'வெண்ணிலா கண்ணிலேயே படவில்லையே?' என்று உள்ளூர தவிப்பாக இருந்தது சூரியாவுக்கு.

ஏமாற்றம் இதயத்தை முற்றுகையிட விடை பெற எத்தனித்தான்.

''அம்மாடி வெண்ணிலா! அத்திக் காய்களைப் பறிச்சு வச்சுக்கிட்டு வடை பண்ணப் போறேன்னு... அடுக்களைக்குள்ளே நுழைஞ்சியே? என்னாச்சு?.

உன்னோட ஸ்பெஷல் 'அத்திக்காய் வடை' தயாராயிருந்தா தட்டில வச்சு கொண்டா!. தம்பி ரெண்டு வடையை டேஸ்ட் பண்ணிப் பார்க்கட்டும்.

அவரு வெளிநாட்டுக்கு கிளம்பிப் போறி... மூணு மாசம் பொறுத்துத் தான் வருவாராம். சீக்கிரம் வாம்மா!'' சிவகாமி குரல் கொடுத்தது தான் தாமதம்.

''இ....இதோ வந்துட்டேன் அம்மா'' என்றபடி சூடான அத்திக்காய் வடைகளையும் தேங்காய் சட்னியையும் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள் வெண்ணிலா.

பார்வையைத் தழைத்த படியே தட்டை நீட்டினாள். அவனும் பார்வையாலேயே அவளை ஒரு கணம் அளவெடுத்துவிட்டு வடையைப் பிட்டு மென்றான்.

வித்தியாசமான சுவையுடனும் கம்மென்ற நறுமணத்துடனும் அருமையாக இருந்தது.

''வாவ்! அத்திக்காய் வடை ரொம்பப் பிரமாதம் மிஸ். வெண்ணிலா! அத்திக்காய்னு சொன்னதும் தயங்கிட்டே சாப்பிட்டேன். ஆனா... இப்படியொரு டேஸ்ட்டுலே நான் எங்கேயும் சாப்பிட்டதில்லை.

ரியலி இட் இஸ் எக்ஸலண்ட்!''

''நி... நிஜமாவா? தேங்க் யூ ஸோ மச்!'' விழிகளில் சந்தோஷம் பொங்க அவனை ஏறிட்டாள் வெண்ணிலா.

அவளது முகத்தில் புன்னகை பூத்த போது அவளது அழகு பன்மடங்காகிப் பிரகாசித்ததை ரசித்தான் சூரியா.

குற்றாலச் சாரலில் ஆனந்தமாய் நனைந்தது போலிருந்தது. அந்த அழகு தேவதைக்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது என்பதை

அறிந்தால் மென்மையான மனம் படைத்த சூரியா தாங்கிக் கொள்வானா?

## 11

இரண்டு மாதங்கள் உருண்டோடின.

ஒரு நாளும் இல்லாத திருநாளாய்.. பீப்பாய் சைஸில் இருந்த சரோஜினி, அண்ணன் சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு வந்திருந்தாள்.

''அட! வாம்மா சரோஜினி வாம்மா என்ன நீயே கிளம்பி வந்துட்டே? ஒரு போன் போட்டிருந்தா நான் ஓடிவந்திருப்பேனே?'' முகம் மலர்ந்தார் சத்தியமூர்த்தி.

''அ... அண்ணே'' சேலைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு முதுகு குலுங்க விசும்பினாள் சரோஜினி.

''என்னாச்சு சரோஜினி? எ.... என்ன விஷயம்?'' பதறிப்போனார்.

''நம்ம திலகா என் தலையில குண்டைக் தூக்கிப் போட்டுட்டா அண்ணே! பாவி மக அந்த மணியக்காரரு மகன் மதியரசனை விரும்புறளாம்.

சித்த நேரத்துக்கு முன்னாடி தான் மணியக்காரரு நம்ம வீட்டிற்கு வந்தாரு. 'சின்னஞ்சிறுசுக ஆசைப்பட்டிருச்சுங்க கல்யாணத்தைப் பண்ணி வச்சுடுவோம். நான் பணம் காசுக்கு ஆசைப்படாதவன். மூத்த மருமகளும் இரண்டாவது மருமகளும் அக்கா தங்கச்சிங்க தலா முப்பது சவரன் நகை, ஒரு லட்சம் ரொக்கப் பணம், சீர் செனத்தியோட வந்தாங்க.

நாங்க எதையும் கேட்டு வாங்கலை. அவங்களா விருப்பப் பட்டு செய்தாங்க. இப்பத்தான் உங்க பிள்ளை டாக்டராகிட்டாரே? உங்க பொண்ணுக்கு வேண்டியதை நீங்க செய்யுங்க.

சீக்கிரமா கல்யாணத்தை நடத்திடலாம். சீக்கிரமா நல்ல தகவலை சொல்லி அனுப்புங்க'ன்னு சொல்லிட்டுப் போனாரு அண்ணே''

ஸ்தம்பித்துப் போய் விட்டார் சத்தியமூர்த்தி.

''திவாகர் வேலைக்குச் சேர்ந்து ரெண்டு மாசந்தான் ஆகுது. இப்படி ஒரு இக்கட்டை இழுத்து விட்டுட்டியே? பாவி மகளே''ன்னு அவளோட கன்னத்துல நாலு அறை விட்டேன்.

இந்தளவுக்கு மணியக்காரரு இறங்கி வந்தது. பெரிய விஷயம் என் குடும்பத்தோட மானத்தைக் காப்பாத்துண்ணே! நான் உன்னைத் தான் மலையா நம்பி வந்திருக்கேன்'' அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே திவாகரும் வந்துவிட்டேன்.

''வா.... வாங்க மாப்பிள்ளை! உட்காருங்க''

''இருக்கட்டும் மாமா! எங்க குடும்பத்தையே தூணா நின்னு தாங்கினீங்க. என்னை டாக்ராக்கிட்டீங்க கடைசியா திலகாவையும் நீங்க தான் கரையேத்தணும்.

இன்னும் ஒரு வருஷம் அவகாசம் கிடைச்சா நானே எடுத்து செய்துடுவேன். திலகா, மதியரசனை விரும்பிட்டதாலே சீக்கிரமா கல்யாணத்தை நடத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுப் போச்சு மாமா!''



சத்தியமூர்த்தியின் கரங்களை இறுகப் பற்றினான் திவாகர்.

சத்தியமூர்த்தி புருவங்கள் முடிச்சுப்போட யோசித்தார். சிவகாமியும் வெண்ணிலாவும் கவலையாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''சோத்துப்பாறையில இருக்கற மாந்தோப்பை வித்தாக்க ரெண்டு அல்லது ரெண்டே கால் லட்சத்துக்குத் தான் போகும். வரதட்சணைப் பணத்துக்கும் கல்யாணச் செலவு சீர் செனத்தி செய்றதுக்கும் தான் அது பயன்படும்.

நகைக்கு என்ன பண்றது?''

''திலகா வயசுக்கு வந்தப்போ நீ செயினும் வளையலும் செய்து போட்டியே? மொத்தம் ஆறு பவுனுக்கு தேறும்''

''எப்படியும் நாம மாப்பிள்ளைக்கு மோதிரம் செயின் எல்லாம் போடணும் இல்லையா? எப்படிப் பார்த்தாலும் இன்னும் முப்பது சவரன் தேவைப்படுமே?'' கவலையாய் நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டார்.

சரோஜினி சட்டென்று திரும்பி அண்ணி சிவகாமியை... பரிதாபமாகப் பார்த்தாள்.

மனதை இளக்கி விடும் படியான பார்வை அது!

''எ... என்னங்க! எதிர்த்த வீட்டை சமீபத்துல தானே வித்தோம்? அதுக்கு முன்னாடி வாடகைக்கு விட்டிருந்தோம். என்னோட பிறந்த வீட்டு சீராகக் கொடுத்த பணத்துல, வாங்கின வீடுங்கிறதால அந்த வாடகைப் பணத்தை நீயே வாங்கி வச்சுக்கோ'ன்னு என் கிட்ட நீங்க சொல்லிட்டீங்க.

இத்தன வருஷமா வந்த வாடகையை அப்படியே சேமிச்சு வச்சு... கொஞ்ச கொஞ்சமா வெண்ணிலாவுக்கு நகைங்க வாங்கி வச்சேன்னு உங்களுக்கே தெரியும்.

கிட்டத்தட்ட நாற்பது பவுன் கிட்டே தேறும். அவசரத் தேவைக்கு அதை எடுத்து பயன்படுத்திக்கலாமே? 'வெண்ணிலா நாளைக்கு அந்த வீட்டுக்குத் தானே மருமகளா. போகப் போறா?''

சிவகாமியின் பெருந்தன்மையைப் பார்த்துவிட்டு வாயடைத்துப் போய் விட்டார் சத்தியமூர்த்தி.

''அண்ணே! நல்ல யோசனை அண்ணே! நிலா என் வீட்டு மருமக... அவ உடம்புலே ஒரு கிராம் நகை இல்லாம வந்தாக்கூட நான் சந்தோஷமா ஏத்துப்பேன். முதல்லே திலகாவை எப்படியாவது கரையேத்தி விட்டுடலாம்''

''ஆமாம் மாமா! நிலா என்னோட வருங்கால மனைவி அத்தையே நம்ம இக்கட்டான நிலைமையே பார்த்து மனசு இரங்கி இந்த யோசனையை சொல்லியிருக்காங்க.

அடுத்த வருஷமெல்லாம் நான் நல்ல நிலைமைக்கு வந்துடுவேன். அது உங்களுக்கே தெரியுமில்ல மாமா!

நிலாவுக்கு கிலோ கணக்குல நகை வாங்கிப்போட்டு அழகு பார்ப்பேன் மாமா! இது சத்தியம் சீக்கிரமா மாந்தோப்பை விக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க மாமா '' கையைப் பிடித்துக் கொண்டு... அவரை

யோசிக்கவே விடாமல் காலில் விழாத குறையாக கெஞ்சி மன்றாடினான் திவாகர்.

''நீ... நிலா! இதுலே உனக்கு உடன்பாடு தானேம்மா?'' தயக்கமாய் வினவினார் சத்தியமூர்த்தி.

''என்னப்பா இப்படி கேட்டுட்டீக? நான் உங்க பொண்ணுப்பா நீங்க இப்படி என் கிட்டே கேட்கிறது தான் ரொம்ப கஷ்டமா இருக்குப்பா''

''என் ராஜாத்தி! என் மருமகளுக்கு தங்கமான குணம். என் வயித்துல பாலை வார்த்துட்டியே'' வெண்ணிலாவின் கன்னங்களைத் தொட்டு வருடி விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள் சரோஜினி.

வெண்ணிலா பேசியதைக் கேட்டதும் தயக்கத்தைத் தள்ளி விட்டு மாந்தோப்பை விற்பதற்கு மும்முரமாக அலைந்தார். சத்தியமூர்த்தி கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிந்தது தான் மிச்சம்!

''வலியப்போனால் கிழவி தானே?'' என்ற முதுமொழிக்கு ஏற்ப தோப்பை அடி மாட்டு விலைக்குக் கேட்க ஆரம்பித்தார்கள்.

இவரது கவலை படிந்த முகத்தைப் பார்த்துவிட்டு எதிர் வீட்டு பரந்தாமன் என்ன ஏது?' என்று துருவி விசாரித்தார்.

வேப்ப மரத்தடியில் இருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்த படியே விவரத்தைத் தெரிவித்தார் சத்தியமூர்த்தி.

இரு தினங்களுக்கு முன்பு தான்.. வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்திருந்தான் சூரியா.

ஜன்னல் வழியே இவர்கள் பேசுவதைக் கேட்டுவிட்டு சட்டென்று வெளியில் வந்தான்.


மாந்தோப்பில் வெண்ணிலா, பாறையின் மேல் ஏறி நின்று சின்னஞ்சிறு கிளியைக் கூட்டில் சேர்த்து விட பரிதவித்து எம்பி முயன்று தவறிக் கீழே விழுந்த காட்சி ஒரு கணம் அவனது மனக் கண் முன் தோன்றி மறைந்தது.

''இப் யூ டோண்ட் மைண்ட்! நீங்க பேசறதைக் கேட்டுட்டு தான் வர்றேன். என்னோட பிராஜெக்ட் 'கிளிக்' ஆகி பெருமளவு லாபத்தை அள்ளிக் குவிச்சதால எனக்கு பதவி உயர்வும், வருமானமும் எதிர்பார்த்ததை விட ரொம்ப உசந்திருக்கு.

'என்ன இது உன் தலை இப்படி வீங்கியிருக்கு?

நான் எழுதின ஜோக்கை யெல்லாம் என் மனைவியிடம் படிக்கக் கொடுத்தேன். கோபத்தில் பூரிக்கட்டையால் அடிச்சிட்டாள்!

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.





அன்னிக்கு நீங்க மனமார வாழ்த்தினீங்க. உங்க வாக்கு பலிச்சிருச்சுன்னு தான் சொல்லணும். அந்த மாந்தோப்பை வெளி மார்க்கெட் ரேட்டுக்கு நாங்களே வாங்கிக்கிறோம்.

என்னப்பா? உங்களுக்கு திருப்தி தானே?'' என்று அவன் கேட்டதும் பூரித்துப் போய்விட்டார் பரந்தாமன்.

''ரொம்ப சந்தோஷம் சூரியா'' பெருமிதத்துடன் மகனை ஏறிட்டார் பரந்தாமன். சத்தியமூர்த்திக்கு ஒன்றும் பேச வரவில்லை. ஸ்தம்பித்தது எழுந்து நின்று கைகளைக் கூப்பினார்.

''உங்க வீட்டை வாங்கின ராசி எங்கப்பா ரொம்பவும் தெம்பா நடமாட ஆரம்பிச்சுட்டாரு நெறஞ்ச மனசோட அந்த மாந்தோப்பை எங்களுக்கு கொடுப்பீங்க அது மென்மேலும் எங்களை உயர்த்தும். இதுக்கு நாங்க தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்'' அவரது கைகளைப் பற்றி அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டான் சூரியா.

நெகிழ்ந்து போய் நெஞ்சோடு அவனை அணைத்துக் கொண்டார் சத்தியமூர்த்தி.

அடுத்த இரண்டே வாரங்களில் திலகாவின் நிச்சயதார்த்தம் வெகு விமரிசையாக நடந்தது. விழாவில் குதூகலமாய் கலந்து கொண்டான் சூரியா.

தன் தேவதை நடமாடியதைக் கண் குளிர நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். உசிலம்பட்டியிலிருந்து குணசேகரன் தம்பதியினரும் வானதியும் வந்திருந்தனர்.

நிச்சயதார்த்தம் நடந்து முடிந்ததும் சரோஜினி எழுந்து நின்று பேச ஆரம்பித்தாள்.

''என் அண்ணனோட புண்ணியத்தால என் பாரமே இறங்கிடுச்சு. நெருங்கின சொந்த பந்தங்க பழகினவங்க எல்லாரும் சபையில நிறைஞ்சிருக்கீங்க.

உங்க எல்லாருக்குமே நல்லாத் தெரிஞ்சிருக்கும். திவாகருக்கு வெண்ணிலா வெண்ணிலாவுக்கு திவாகர்னு நாங்க பேசியிருக்கிறோம்.

உங்க ஆசீர்வாதத்தோட இன்னிக்கு தாம்பூலத்தட்டை மாத்திக்கிறோம். எங்க அண்ணனுக்கு சம்மந்தியாக நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும். திலகா கல்யாணத்தை முடிச்சுட்டு நிதானமா திவாகர் வெண்ணிலா கல்யாணத்தை நடத்திக்கலாம். வாங்கண்ணே தட்டை மாத்திக்கலாம்.

என்ன அண்ணே சொல்றீங்க? வெண்ணிலாவை. என் வீட்டு மகாலட்சுமியை வந்து சபையில நமஸ்காரம் பண்ணிக்கச் சொல்லுங்க! சரிதானே அண்ணே?''

தங்கை சரோஜினி கொடுத்த இன்ப அதிர்ச்சியில் சத்தியமூர்த்தி இளகிப் போய்விட்டார்.

''சரி சரோஜினி! தட்டை மாத்திக்கலாம்''

சூரியாவுக்கு இதயத்தில் இடி இறங்கியதைப் போலிருந்தது. உள் மனம் ஊமையாய் அழுது புலம்பியது. அவனது முகம் சட்டென்று இருண்டு போனதையும் உள்ளுக்குள் துடித்துடிப்பையும் தோழி வானதி கவனிக்கத் தவறவில்லை.

## 12

கடைத்தெருவில் கூட்டம் ஏகத்திற்கும் கசகசத்துக் கொண்டிருந்தது.

ஒரு பேன்ஸி ஸ்டோரில் புகுந்து கொண்ட திலகாவும் சரோஜினியும் இப்போதைக்குள் வெளியே வர மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்ட வெண்ணிலா சாலையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பதினொரு வயது மதிக்கத்தகக்க சிறுவனைப் பார்த்ததும் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

நகத்தைக் கடித்தக் கொண்டு தலையைச் சாய்த்து சிரித்தபடி சாலையைக் கடந்து கொண்டிருந்தான் சிறுவன்.

'இவன் சித்தார்த் தானே? மூளை வளர்ச்சியில்லாத சிறுவன் அல்லவா? தனியா பஜாருக்கு வந்து விட்டானா? அலை பாய்ந்த அவளது விழிகள் சாலையின் எதிர்ப்புறத்தில் நிலைத்தன.

வண்டிக் காரனுடன் பேரம் பேசி பழங்களை வாங்கிக் கொண்டிருந்தாள் அந்த சிறுவனின் தாயார் தெய்வானை.

பக்கத்துத் தெருவில் குடியிருப்பவள். கணவனைப்பறி கொடுத்தவள். சித்தார்த்தையே உலகம் என்று நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவள்.

மகனுக்காக அவள் வேண்டாத தெய்வம் இல்லை. பண்ணாத சிகிச்சை இல்லை என்பதை வெண்ணிலா நன்கு அறிவாள்.

சித்த சுவாதீனம் இல்லாத சிறுவனை அஜாக்கிரதையாக இப்படி விட்டு விட்டார்களே?

எதிரே லாரி வேறு வருகிறதே? ஐயோ அவளது மூளை அபாயச் சங்கு ஊதியது.

மான் போன்று விரைந்து ஓடினாள். சித்தார்த்தின் கையைப் பற்றி இழுத்தாள். சூழ்நிலையை சற்றும் உணராத சிறுவன் முரண்டினான்.

பலங்கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தும் முடியவில்லை. கண்மண் தெரியாமல் லாரி விரைந்து வந்து கொண்டிருந்தது.

கண நேரந்தான்! பற்களைக் கடித்துக் கொண்டு அந்த சிறுவனின் புஜத்தைப் பிடித்து மறுபுறம் வேகமாகத் தள்ளி விட்டு ஓட எத்தனித்தாள்.

பயத்திலும் பதற்றத்திலும் அவளது உடல் வெடவெடவென்று நடுங்கியது. கால்கள் பின்னின. எசகு பிசகாக வெண்ணிலா மாட்டிக் கொண்டாள்.

''ஐயோ அம்மா...!'' அவள் அலறிய அலறல்... அந்த சாலையையே கிடுகிடுக்க வைத்தது.

வெண்ணிலாவின் இடது காலில் லாரியின் சக்கரம் ஏறி நசுக்கி விட்டிருந்தது.

குபுகுபுவென்று குருதி பெருக்கெடுக்க மயக்கத்தில் மூழ்கினாள் வெண்ணிலா.

லாரியை சுற்றி வளைத்து நின்ற கூட்டம் வெண்ணிலாவுக்காக



கண்ணீர் வடித்தது.

''ஏம்மா! புத்தி இல்லாத புள்ளையை பத்திரமா பாத்துக்க வேண்டியதுதானே? இந்தப் புள்ளையைக் காப்பாத்தப் போயி... மகராசிக்கு இந்த கதி ஏற்பட்டு போச்சே?'' தெய்வானையை ஒரு சிலர் கடிந்து கொண்டனர்.

சத்தியமூர்த்தியும் சிவகாமியும் இடிந்து போய் அமர்ந்திருந்தனர்.

உடம்பிலிருந்து உயிரை உருவி எடுத்து விட்டாற் போன்று கண்களில் ஜீவன் வற்றிப் போய் அமர்ந்திருந்தவரை ஏறிட்டுப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''அப்பா'' என்றழைத்தபடி மான் போன்று துள்ளிக் குதித்து ஓடி வருவாளே வெண்ணிலா?

அன்னத்தைப் பழிக்கும் மென்மையான நடை கொண்டவள் அவளது நடையழகை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாமே?

எத்தனை வாட்டி பிடி உப்பும் மிளகாயும் ஆழாக்கில் போட்டு மகளுக்கு திருஷ்டி சுத்தியிருக்கிறாள் சிவகாமி?

யார் கண் பட்டதோ தெரியவில்லையே? வெண்ணிலா இடது காலையே இழந்து விட்டாளே?'

அழுதழுது இருவருக்கும் கண்ணீர் வற்றிப்போய் விட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களுக்குப் பின் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டாள் வெண்ணிலா.

தாங்குகட்டைகளை ஊன்றிக் கொண்டு அவள் ஒற்றைக் காலில் நடந்து வரும் காட்சியைக் காணும் போதெல்லாம் அவர்களுக்கு இதயமே வெடித்துவிடும் போல் கனத்து வலித்தது.

அன்று சரோஜினி தனது குடும்பத்துடன் புறப்பட்டு வந்திருந்தாள்.

''அண்ணே! உன் கிட்ட முக்கியமான விஷயத்தைப் பேசணும் அண்ணே'' என்றதும் நிமிர்ந்து பார்த்தார் சத்தியமூர்த்தி.

''இப்படி நடக்கணும்னு விதியிருந்தா அதை யாரால மாத்த முடியும்? சரிம்மா அடுத்த மாசமே கல்யாணத்தை வச்சுக்குவோம். ரணப்பட்டு கிடக்கிற நம் மனசுக்கு அப்பத்தான் ஆறுதல் கிடைக்கும். அய்யர் கிட்டப்போயி முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சிடுவோமா?'' ஆர்வம் ததும்ப தங்கையைப் பார்த்தார் சத்தியமூர்த்தி.

''நாள் குறிச்சுட்டோம் அண்ணே! அடுத்த மாசம் ரெண்டாம் தேதி கல்யாணம் ஆனா திவாகர் உன் பொண்ணு கழுத்துல தாலி கட்டப் போறதில்லை.

நீயே சொல்லு... திவாகர் ஒரு பெரிய டாக்டர்! உன் பொண்ணு வெண்ணிலா ஒரு நொண்டி! காலம் முழுக்க அவளைக் கட்டிக்கிட்டு அவன் அழ முடியுமா? இது உனக்கே நியாயமா படுதா அண்ணே?''

கூடத்துக் தூணோரம் சாய்ந்து, தாங்கு கட்டைகளை ஊன்றியபடி நின்றிருந்த வெண்ணிலாவின் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போன்ற வேதனை ஏற்பட்டது நிஜம்!

அதிர்ச்சியில் சத்தியமூர்த்தியும் சிவகாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

தலையில் இடி விழுந்ததைப் போலிருந்தது. உலகமே

தட்டாமாலையாகச் சுழன்றது.

# 13

வெண்ணிலாவின் மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது. பொங்கி வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கினாள்.

கீழுதட்டை அழுந்தக்கடித்துக் கொண்டாள். அவளையும் மீறி விழிகளிலிருந்து கரகரவென்று கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது.

அவமானத்தில் எண்சாண் உடம்பும் குறுகி சிறுத்துவிட்டது போலிருந்தது.

உடம்பெல்லாம் தீக்கங்கு பட்டு விட்டாற்போல் திகுதிகுவென்று எரிந்தது.

தாங்கு கட்டைகளை 'டக் டக்' என்று ஊன்றிக் கொண்டு கூடத்தில் வலது புறத்திலிருந்து அறைக்குள் புகுந்து கொண்டாள் வெண்ணிலா.

சத்தியமூர்த்திக்கு தான் காண்பதெல்லாம் கனவாக இருந்து விடக் கூடாதா' என்று உள்ளூர ஏக்கமாக இருந்தது.

திலகாவின் திருமணத்தில் எந்தக் குறையும் வைக்காமல்... வெகு விமரிசையாக நடத்தி விட்டிருந்தார்.

''இப்படியொரு சோகம் வரணும்கிறது நம்ம தலையெழுத்து! நடந்ததை நினைச்சு கவலைப்பட்டுக்கிட்டு நம்ம கடமையை தவற விடலாமா?

இந்தாங்க மாப்பிள்ளை பணம்! திலகாவோட கல்யாணம் எந்தத் தடங்கலும் இல்லாம குறிச்ச நேரத்துல நடக்கணும். அது ரொம்ப முக்கியமாச்சே?

நிலாவை நாங்க பார்த்துக்கிறோம். நீங்க கல்யாண வேலைகளை கவனிங்க மாப்பிள்ளை!'' என்று கூறிய படி சிறு மஞ்சள் பையில் பணத்தை வைத்து திவாகரின் கையில் சத்தியமூர்த்தி அன்று திணித்த போது திவாகரின் கையில் அன்பையும் கடமை உணர்ச்சியையும் கண்டு வாயடை த்துப் போய் விட்டான் திவாகர்.

அந்த நன்றியை நினைத்துப் பார்க்காமல் சுத்தமாகத் துணி கொண்டு அடைத்து விட்ட திலுசில். அம்மா சரோஜினியின் அருகே மரம் போல் நின்று கொண்டிருந்தான் திவாகர்.

''என்ன அண்ணே பேசாம நிக்கிறே? வெண்ணிலா மட்டும் நொண்டி ஆகாம இருந்திருந்தா முடிவு செய்த படியே இந்தக் கல்யாணத்தை கண்டிப்பா நடத்தியிருப்பேன்.

அண்ணன் பொண்ணு நிச்சயம் வேற செஞ்சிட்டோமேன்னு ஒரு நொண்டியை இவன் தலையில கட்டினா. என் மகனோட வாழ்க்கையே இருண்டு போயிடுமே?

தேனியில இருக்கிற பிரபல ம்தி மருத்துவமனையில இவன்



வேலைக்குச் சேர்ந்தவன் இல்லியா? இவனோட திறமையைப் பார்த்துட்டு ஓனரோட பொண்ணை இவனுக்கு கட்டி வைக்கத் தயாராயிட்டாங்க.

வலிய வர்ற ஸ்ரீதேவியை வேணாம்னு மறுக்க யாருக்காவது மனசு வருமா அண்ணே? ஒரே பொண்ணு தானாம் நாளைக்கு அந்த மருத்துவமனையே இவனுக்குச் சொந்தமாயிடும்.

அவளைக் கட்டிக்கிட்டா, இவனோட வாழ்க்கை ரொம்பப் பிரகாசமா இருக்கும். அந்தஸ்தும் கௌரவமும் உசந்துடும்.

வீட்டிலேயே கிளினிக் ஆரம்பிச்சோமோ அதுலேயும் நல்ல கூட்டம் வர ஆரம்பிச்சிடுச்சு. கைராசியான டாக்டர்னு நோயாளிகள் தேடி வரத் தொடங்கிட்டாங்க அண்ணே!

'டாக்டர் திவாகர் எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., அப்படின்னு பெயர் எழுதி போர்டை கொண்டு வந்து நீ தானே வாசல்லே மாட்டினே!...

உன் கை ராசியாலே என் பிள்ளைக்கு அமோகமான வாழ்வு கிடைச்சிருக்கு. நான் எதையும் மறக்க மாட்டேன் அண்ணே!

வெண்ணிலாவுக்கு ஏத்த வரனா பார்த்து முடிப்போம். கவலைப்படாதே அண்ணே! அவளோட நிலைமைக்கும் உன்னோட அந்தஸ்துக்கும் தகுந்த வரன் நிச்சயமா அமையும்''

''ஆமா மாமா! அப்படி ஒரு வரன் அமைஞ்சா எனக்கு சொல்லி அனுப்புங்க நகைக்கும், கல்யாணச் செலவுக்கும் வேண்டிய பணத்தைத் தந்து உதவறேன். தாகர் கிட்ட இதை அழுத்தம் திருத்தமா சொல்லிடுங்க...

'ஒரு ஊனமுற்ற பொண்ணைகட்டிக்கிட்டு காலம் முச்சூடும் எப்படி வாழறது?ன்னு யாரும் நினைக்கக் கூடாது பாருங்க, அதான்!

நகை நட்டு, சீர் செனத்தி, வரதட்சணை எல்லாம் தாராளமா செய்வோம்னு நம்பிக்கை வந்தா அதுக்கு ஆசைப்பட்டாவது யாராச்சும் அவளைப் பொண்ணு கேட்டு வருவாங்கல்ல? '' திவாகர் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் சிவகாமியின் இதயத்தைக் குத்திக் கிழித்து அமிலத்தை வார்த்தன.

''அமெரிக்கா போயும் தலைவருடைய லொள்ளு தாங்கலை''

''எப்படி?''

நயாகராவை பாக்கலாமான்னு கேட்டா முதலில் வயாகராவை காமிங்கிறார்''

-செல்வராஜா, சேலம்.



''ரொம்ப ரொம்ப நன்றி தம்பி! உங்க அக்கறைக்கும், கரிசனத்துக்கும் நன்றி தம்பி!

இதுக்கு மேல எங்க வெண்ணிலாவைப் பத்தி நீங்க எதுவும் பேச வேணாம். கல்யாணத்துக்கு முன்னாடியோ, பின்னாடியோ உங்களுக்கு இதே மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தா 'நொண்டி மாப்பிள்ளை'ன்னு நாங்க தூக்கி எறிஞ்சிருப்போமா?

எங்க நெஞ்சுல வேணுங்கிற மட்டும் நெருப்பை அள்ளிக் கொட்டிட்டீங்க வெண்ணிலா எங்க பொண்ணு அவளோட வருங்காலத்தைப் பத்தின கவலை உங்களுக்கு வேணாம்.

உங்க திலகா கரையேறிட்டா... நீங்க பெரிய டாக்டர் ஆயிட்டீங்க... உங்க குடும்பம் இப்போ தலையெடுத்துடுச்சு இல்லியா? ரொம்ப சந்தோஷம் தம்பி!

எங்களுக்கு யாரோட தயவும் உதவியும் தேவையில்லையப்பா பகவான் இருக்காரு. திக்கற்றவங்களுக்கு தெய்வம் உணர்வுகளை அடக்க முடியாமல் படபடவென்று கொட்டித் தீர்த்து விட்டாள் சிவகாமி.

நன்றியை மறந்துவிட்டு விசுவாசமே இல்லாமல் உதறி விட்டுச் செல்ல வந்த உறவுக்காரர்களை ஏறெடுத்துப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. திரும்பி உள்ளே நடந்தாள்.

கதறி அழ வேண்டும் போலிருந்தது. முந்தானையை சுருட்டி வாய்க்குள் திணித்துக் கொண்டு மௌனமாக முதுகு குலுங்கக் கேவிக் கொண்டே உள்ளறைக்குள் புகுந்தாள் சிவகாமி.

''மாமா! என்னோட சந்தர்ப்பம் சூழ்நிலை உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்னு நம்பறேன் மாமா வருத்தப்படாதீங்க. உங்க பொண்ணு கல்யாணத்துக்கு வேண்டிய'' திவாகர் பேசி முடிக்கும் முன் இடை புகுந்தார் சத்தியமூர்த்தி.

''மாப்பிள்... மன்னிக்கணும் தம்பி! பழக்க தோஷத்துல அப்படி கூப்பிட்டுட்டேன் தம்பி மன்னிச்சுடுங்க போதும் தம்பி! நீங்க பேசினதைக் கேட்டு வயிறும் மனசு நிறைஞ்சு போச்சு.

எங்க குடும்பத்தைப் பத்தி கவலைப்பட்டு உங்களோட பொன்னான நேரத்தை வீணடிச்சுக்கிட்டு இருக்கீங்க டாக்டர் தம்பி'' நா தழுதழுக்கப் பேசியபடி கைகளைக் கூப்பினார் சத்தியமூர்த்தி.

தலை குனிந்தபடி சட்டென்று வெளியேறினான் திவாகரும், திலகாவும் சரோஜினியும் சத்தியமூர்த்தியை அலட்சியமாகப் பார்த்துவிட்டு திவாகரைப் பின் தொடர்ந்தனர்.

எதிர் வீட்டு பரந்தாமன் அவ்வப்போது சத்தியமூர்தியைப் பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றுவார்.

அன்றும் அப்படித்தான்! சத்தியமூர்த்தியிடம் நான்கு வார்த்தைகள் ஆறுதலாகப் பேசிவிட்டு வரலாம் என்று வந்த பரந்தாமன் பேச்சு சப்தத்தைக் கேட்டு திண்ணையிலேயே தயங்கி நின்று விட்டார்.

சரோஜினியின் குடும்பத்தைத் தூணாக நின்று தாங்கியவர்



சத்தியமூர்த்தி என்பதை அறிவார் பரந்தாமன்.

இன்று அந்தக் குடும்பமே சத்தியமூர்த்திக்கு இழைத்த துரோகத்தை கண் கூடாகப் பார்த்தவருக்கு மனம் ஆறவே இல்லை.

'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்ற பாடல் வரிதான் ஞாபகத்திற்கு வந்தது.

வீட்டை விட்டு வெளியேறிய சரோஜினி, திவாகர், திலகா ஆகியோரைப் பார்த்து காறி உமிழ வேண்டும் போல் ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது.

இந்த திலகாவின் திருமணத்திற்குத் தான் எத்தனை அலைச்சல்? எத்தனை தியாகங்கள்?

நம்பிக்கை துரோகம் செய்தவர்களை நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல் திட்டித் தீர்க்காமல் எவ்வளவு பெருந்தன்மையாக குரல் அதிராமல் சாந்தமாக பதில் பேசி அனுப்பி விட்டார் சத்தியமூர்த்தி?

திட்டவில்லை... சபிக்கவில்லை... நியாயம் கேட்டு வாதாடவில்லை... தான் செய்த கடமைக்குப் பதிலாக உதவியையும் உபகாரத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சத்தியமூர்த்தி, சிவகாமி, வெண்ணிலா...என்று ஒட்டு மொத்த குடும்பமே தியாகச்சுடரின் பிரதி பிம்பமாய் குணக்குன்றாய் உயர்ந்து நின்றதைக் கண்டு ... பிரமித்து விட்டார் பரந்தாமன். திண்ணையில் கல்லாய் சமைந்து விட்டிருந்தார்.

## 14

அப்பாவின் மூலம் அனைத்து விவரங்களையும் அறிந்து கொண்ட சூரியா துடித்துப் போனான்.

வெண்ணிலாவுக்கும் திவாகருக்கும் நிச்சயதார்த்தம் நடந்ததும்.. சூரியா உள்ளூர தூள் தூளாய் நொறுங்கி விட்டிருந்தான்.

''வெண்ணிலா இனி தனக்கு கிட்டப் போவதில்லை. அவள் எட்டாத உயரத்திற்குச் சென்று விட்டாள். இனி அவள் மாற்றானுக்கு மனைவியாகப் போகின்றவள்.

அவளை நினைப்பது தவறு.'' என்று மனதிற்கு தடை போட்டும் பிரயோஜனம் இல்லை.

தன் மனதில் மொட்டு விட்டு அரும்பிய காதல்... இவ்வளவு சீக்கிரத்தில் வாடிக் கருகி விடும் என்று அவன் கனவில் கூட கருதியதில்லை.

''வெண்ணிலா நிச்சயம் தனக்குக் கிடைத்துவிடுவாள்'' என்று குருட்டு நம்பிக்கையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தவனுக்கு. வாழ்க்கையே இருண்டு விட்டதைப் போன்றிருந்தது.

அவளை சந்திக்கும் சந்தர்ப்பங்களை வலிய உருவாக்கிக்

கொண்டிருந்தவன் தான்!... மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஜன்னல் வழியே கூட... அவளை தரிசிக்காமல் தவிர்த்து வந்தான்.

தன் காதலுக்கு சமாதி கட்டி விட்டோம் என்று அவன் ஓரளவுக்கு தன்னைத் தானே தேற்றிக் கொண்டிருந்த நேரத்தில்... வெண்ணிலா விபத்தில் தன் காலை இழந்து விட்டாள் என்று கேள்விப்பட்டதும் அலவிட்டப் புழுவாய் வேதனையில் துடிதுடித்து விட்டான் சூரியா.

அவனையும் மீறி.. கண்ணீர் சுரப்பிகள் தங்களது அடக்கத்தை கைவிட்டிருந்தன.

தன் வேதனையும் வருத்தமும் முகத்தில் வெளிப்பட்டு விடாமல் இருக்க... அவன் பட்ட பாடு இருக்கிறதே? அப்பப்பா...!

''வெண்ணிலா!... என் ஆசை வெண்ணிலா!... உனக்கா இந்த கதி ஏற்பட வேண்டும்?

ஒரு சிறுவனைக் காப்பாற்றப் போய் நீ விபத்தில் மாட்டிக் கொண்டாயாமே?

மனிதநேயத்திற்கும் உனது கருணைக்கும் கிடைத்தப் பரிசா இது? ஐயோ! கடவுளுக்கு கண்ணே இல்லையே.:. என் அன்பு தேவதையே...!

ஒரு மானைப் போல் துள்ளிக் குதித்து ஓடுவாயே! அழகு ரதம் போல் அசைந்து வருவாயே?

அன்னத்தைப் போல் அழகாய் நடந்து வருவாயே? உன் நடையழகைக் காண இருவிழிகள் போதாதே பெண்ணே?

உனக்கா... உனக்கா இந்த கதி? என்று உள்ளூர உருகி மருகி ஊமையாய் கதறும் போதுதான் அவனுக்கே உறைத்தது.

''காதலுக்கு சமாதி கட்டி விட்டோம்'' என்று அவன் நினைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய மதியீனம்?

அவனது காதலில் துளியளவும் குறையவில்லை. அவனது மனதை வெண்ணிலா இன்னமும் ஆக்கிரமித்துக் கொண்டு தான் இருக்கிறாள் என்பதை... அவள் விபத்தில் சிக்கியபோது தான் சூரியாவே புரிந்து கொண்டான்.

ஆஸ்பத்திரிக்கு பரந்தாமனுடன் சென்று அவளைப் பார்த்து வந்த

'தலைவரே கட்சியில் உங்களுக்கு எதிர்ப்புக் கிளம்பி விட்டது தலைவரே?'

'உடனே அவர்களையெல்லாம் கட்சியை விட்டு நீக்கிடுறேன்.

'அப்புறம் கட்சியில் நீங்க ஒருவர் மட்டும் தான் இருப்பீர்கள் தலைவரே!

-எம்.அசோக்ராஜா, திருச்சி.





போதும் சரி.. வீட்டிற்கு அவளை அழைத்து வந்ததும் நலம் விசாரிக்கச் சென்றபோதும் சரி...!

அவளை.. அந்த கோலத்தில் ... ஒரு ஊனமுற்றப் பெண்ணாகப் பார்க்கும் போது அவனது நெஞ்சம் பதறிக் கதறியது நிஜம்!

இதெல்லாம் போதாதென்று.. திவாகர் வெண்ணிலாவைத் தூக்கி எறிந்து விட்டான் என்று அப்பா வந்து சொன்னதும்... அவனது இதயத்தை யாரோ கொடிய அரக்கன் கசக்கிப் பிழிந்தது போன்று இருந்தது.

'வெண்ணிலா! உன்னை நொண்டி என்றும் ஊனமுற்றவள் என்றும் முகத்திற்கு நேரேயே சொல்லி... உன்னை உதாசீனப் படுத்தினார்களாமே?

அந்த நேரத்தில் அவமானம் தாளாமல்... எப்படியெல்லாம் துடித்திருப்பாய் என் கண்ணே?'

பச்சாதாபத்தில் மனம் பாகாய் கரைந்தது.

ஓடோடிச் சென்று அவளை நெஞ்சோடு அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்று அவனது மனம பரபரத்ததைத் தட்டி அடக்கினான் சூரியா.

''ஊகூம் ! என் வெண்ணிலா இப்படியே முடங்கி விடக் கூடாது. அவள் நிமிர்ந்து நிற்க வேண்டும்.

உதாசீனப் படுத்தியவர்கள் முன்னால் ... உயர்ந்து நின்று காட்ட வேண்டும்.

தாழ்வு மனப்பான்மை வந்து சுய பச்சாதப்பட்டுக் கொண்டு அவள் ஒரு அறைக்குள்ளேயே சுருண்டு விடக்கூடாது.

என் வெண்ணிலா! அவளை அனைவரும் அண்ணார்ந்து பார்த்து அசர வேண்டும்.

என் தேவதை நடமாட வேண்டும். சாதிக்க வேண்டும். சாதிக்க வைத்தால் தான்... நான் அவள் மீது வைத்த உண்மையான காதலுக்கு ஒரு அர்த்தமும் அங்கீகாரமும் கிடைக்கும்.

என் காதல் ஒருதலைக்காதலாகவே முடிந்து போகட்டும். கவலையில்லை.

ஆனா... வெண்ணிலாவை தன்னம்பிக்கை கொண்டவளாக தங்க மங்கையாக மாற்றிக்காட்ட வேண்டும்.

அம்மா! என்னோட இந்த ஆசையை நிறைவேற்றிக் காட்ட வேண்டும். எனக்கு வெற்றி கிடைக்கணும்னு மானசீகமா ஆசீர்வதிங்க அம்மா.

இறந்து போன தன் தாய் பத்மாவதியை மனதில் நிறுத்தி கண்கள் கலங்க வேண்டிக்கொண்டான் சூரியா.

மறுநாள் காலையில் வெண்ணிலாவைப் பார்த்துப் பேசி விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு தூங்கினான்.

ஆனால் காலையில் அவன் எழுந்தபோது மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

## 15

அதீத அதிர்ச்சி, நம்பிக்கை துரோகம் இவையெல்லாம் விட மகள் வெண்ணிலாவின் எதிர்காலம் இருண்டு... கேள்விக்குறியாய், விசுவரூபம் எடுத்து நின்றதை சத்தியமூர்த்தியால் ஜீரணித்துக்கொள்ளவே முடியவில்லை.

அன்றிரவு வேதனையுடன் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தவர்... காலையில் மனைவியின் கையால் ஒரு சொம்பு தண்ணீரை வாங்கிப் பருகி விட்டு.. தடாலென்று சரிந்து விழுந்தவர்தான்!

மீண்டும் எழுந்து கொள்ளவே இல்லை. கவலையே அவரது உயிரைக் குடித்து விட்டிருந்தது.

சிவகாமியும், வெண்ணிலாவும் கதறிய கதறலைக் கேட்டு... பரந்தாமனும் சூரியாவும் பதறியடித்து ஓடினார்கள்.

கல்மனதும் கரையும் வண்ணம் கதறி அழுத வெண்ணிலாவைத் தேற்றும் வழிவகை தெரியாமல் திகைத்து நின்றான் சூரியா.

ஊருக்கே உபகாரம் செய்த உத்தமர் சத்தியமூர்த்தி! 'அரவை மில்' லின் வாடிக்கையாளர்கள், தெரிந்தவர்கள், பழகியவர்கள், உறவினர்கள் என்று ஏகப்பட்ட கூட்டம் துக்கம் விசாரிக்க வந்து கொண்டே இருந்தது.

சரோஜினி குடும்பத்துடன் துக்க வீட்டிற்கு வந்தாலும்... மூன்றாம் மனுஷியைப போல் சற்று எட்டவே இருந்து நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

திவாகருக்கு வெண்ணிலாவையும், சிவகாமியையும் ஏறிட்டுப் பார்க்கவே கூசியது போலும்!

மனசாட்சி ரம்பமாக அறுத்ததால்... அவனால் ஒரு மணி நேரத்திற்கு மேல் அங்கு தாக்குப் பிடிக்கவே முடியவில்லை.

பரந்தாமனும் சூரியாவும் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களைப் போன்று காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்த விதம்... சரோஜினியை தலை குனிய வைத்தது.

''போன் மூலம் தகவல் அறிந்ததும் அலறிப் புடைத்துக் கொண்டு வந்தார் நண்பர் குணசேகரன்.

வானதி தோழியை கட்டியணைத்துக் கொண்டு விம்மினாள்.


''பட்ட காலிலேயே படும்.. கெட்ட குடியே கெடும்னு சொல்வாங்களே நிலா? அடுக்கடுக்காய் உனக்கு மட்டும் எத்தனை இழப்புகள்?'' என்று அவள் கேட்டதும் தேம்பியபடி தோழியின் தோளில் சாய்ந்து கொண்டாள் வெண்ணிலா.

பரந்தாமனின் மூலம் விஷயத்தைத் தெரிந்து கொண்ட குணசேகரன் கொதித்துக் கொந்தளித்து விட்டார்.

''சீசீ! இப்படியும் பச்சைத்துரோகம் செய்வாங்களா? சத்தியமூர்த்தி மட்டும் இல்லேன்னா... அந்தக் குடும்பமே நாதியத்துப் போய் நடுத்தெருவுல நின்னுருக்கும்.

குடும்பத்தைத் தூணா தாங்கி அந்த திவாகர் பயலை டாக்டருக்கு





படிக்க வைக்க லட்ச லட்சமா செலவு பண்ணினாரு சத்தியமூர்த்தி. கடனை சமாளிக்க நிலபுலத்தை வித்து அரவை மில்லுல நாயா உழைச்சு பணத்தை முகம் சுளிக்காம கொண்டு போய் குடுப்பாரு.

திலகா பொண்ணுக்கு எந்த மாதிரியான தியாகம் செஞ்சு கல்யாணத்தை நடத்தினாருன்னு... நமக்கெல்லாம் தெரியும்.

இதை விடக்கூடாது. இது அநியாயம்! அக்கிரமம்! நம்பிக்கை துரோகம்!... வாங்க பரந்தாமன் சார்! ஊர்ல நாலு பெரிய மனுஷங்களையும் சேர்த்துக்கிட்டு... அவங்களைத் தட்டிக் கேட்கணும்.

இந்த அக்கிரமத்துக்கு அவங்க பதில் சொல்லிதான் ஆகணும்''

என்று எழுந்து துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டார் குணசேகரன்.

''திவாகர் ... அவனெல்லாம் படிச்ச மனுஷன் தானா?

பச்சோந்தி பயல்.. எனக்கு ஆரம்பத்துல இருந்தே அந்த ஆளைக் கட்டோடு பிடிக்காது நிலா!

இந்த மனுஷனுக்குப் போய் நிலாவை கட்டித் தரணும்னு பேசிக்கிறாங்களேன்னு மனுசுக்குள்ளே நெருடிக்கிட்டே இருந்துச்சு. அந்த ஆளு உன் கால் தூசுக்குப் பெற மாட்டான் நிலா!

நானும் இவங்களோடு போய் நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு வார்த்தை கேட்டுட்டு வர்றேன். அப்போதான் என் மனசு ஆறும்''

விழிகளில் அனல் தெறிக்கப் பேசிய வானதி... முந்தானையை விரிந்து இடுப்பில் செருகிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

''வே.. வேண்டாம்! யாரும் போய் நியாயம் கேட்க வேண்டாம்.

நீங்க எல்லாரும் பேசப் போனா... அவங்க தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்றதா நினைச்சுக்கிட்டு... மறுபடியும் அவங்க என்னைப் பத்தி தான் பேசுவாங்க.

ஊனம், நொண்டி, முடம்னு ஏசுவாங்க. அவங்க சொல்றதிலே எந்தத் தப்பும் இல்லைன்னு எனக்குப் படுது.

விபத்துல காலை இழந்து நொண்டியாகி கிடக்கிறவளை.. வேற எப்படி பேசுவாங்க? ஒரு நொண்டியை கல்யாணம் செய்துகிட்டு காலம் முழுவதும் அவஸ்தைப்பட அவங்க விரும்பலை.

அவங்க மட்டுமில்லை, யாரும் விரும்ப மாட்டாங்க. விட்டுருங்க..

''போலீஸ்காரர் பையனை டைரக்டராக்கியது தப்பா போச்சு''

''ஏன்''

''முதலில் படத்துக்கே 'மாமூல்'ன்னு பெயர் வைச்சிட்டான்''

-செல்வராஜா, சேலம்.





நீங்க போய் பேசினா, வார்த்தைகள் தடிக்கும். என் மனசு ஏற்கனவே ரணப்பட்டுப் போய் கிடக்கு. வேண்டாம் தாங்கு கட்டைகளை ஊன்றிக் கொண்டு வெண்ணிலா பேசியதைக் கேட்டவர்களுக்கு.. பரிதாபத்தில் நெஞ்சைப் பிசைவதைப் போலிருந்தது.

''உன்னை உதாசீனப் படுத்தினதைப் பத்தி நாங்க கேட்கலை. பச்சை துரோகம் பண்ணினாங்களே? உனக்கு உங்க அம்மா சேர்த்த நகைகளைப் போட்டு... திலகாவுக்கு கல்யாணம் பண்ணிக் குடுத்ததைப் பத்தி நாங்க கேட்க வேணாமா?

திவாகரைப் படிக்க வைக்க ஏற்பட்ட கடனை அடைக்கிறதுக்காக.. உங்க அப்பா அம்மா சீதனமா கொண்டு வந்த வீட்டை வித்தாரே சத்தியமூர்த்தி? அவர் செத்ததுக்கு யார் காரணம்?

அதைப் பத்தி கேட்க வேணாமா? உம்முனு ஒரு வார்த்தை நீ சொல்லு! சத்திய மூர்த்திக்காக ஊரே திரண்டு வந்து நியாயம் கேட்கத் தயாரா இருக்கு.

எங்க பார்த்தாலும் அந்த சரோஜினி குடும்பம் பண்ணின துரோகத்தைப் பத்திதான் பேசிக்கிட்டிருக்காங்க. என்ன வசவு? என்ன திட்டு தெரியுமா? கிழிச்சு கூறு போட்டு பேசிட்டிருக்காங்க... ஊர் வாய்லே விழுந்துட்டாங்கல்ல? அவங்க உருப்படவே மாட்டாங்க. நாசமா போயிடுவாங்க குணசேகரன் வயிறெரிந்து சாபமிட்டார்.

''வே... வேண்டாம். பெரியவங்க நீங்க... உங்க வாயால எதுவும் சொல்லாதீங்க. திவாகர் அத்தான் உதவத் தயாரா இருக்கேன்னு சொன்னப்போ... அப்பா அதை ஏத்துக்கலை.

பிரதி உபகாரத்தை எதிர்பார்க்காம அப்பா அந்தக் குடும்பத்துக்காக நிறையவே தியாகம் செய்திருக்காரு...

அவரோட பெருந்தன்மையையும் தயாள குணத்தையும் பத்தி,... நான் தான்... என்னால... எ...என்னால தான் அவரு இறந்துட்டாரு.

இ.. இப்படி நான் நொண்டியாகி, ஊனமாகி முடமாகிப் போனதை நினைச்சுத்தான்... அவர் தூக்கம் தாங்காம போய் சேர்ந்துட்டாரு... என் கதியைப் பார்த்துட்டு மனசு உடைஞ்சு அப்பா போயிட்டாரு.''

வலது கரத்தால் முகத்தை மூடிக் கொண்டு குமுறி அழுதாள் வெண்ணிலா.

இரு கைகளையும் முகத்தில் ஓங்கி அறைந்து கொண்டு கதற ஆரம்பித்தாள் அம்மா சிவகாமி.

''மை காட்! வெண்ணிலா நீங்க படிச்ச பொண்ணு! நீங்களே இப்படி மனசு உடைஞ்சு விரக்தியா பேசினா... பாவம் அம்மா! அவங்களுக்கு யாரு ஆறுதல் சொல்றதாம்?

விபத்துல காலை இழந்துட்டீங்க... மிகப் பெரிய இழப்புதான்... அதுக்காக... எல்லாமே முடிஞ்சுபோச்சுன்னு அர்த்தமா உங்களைப்பத்தி... உங்க எதிர்காலத்தை பற்றி கவலையிலும் துக்கத்திலும் ஆத்மா சாந்தியடைய வேண்டாமா? உங்களைப் பத்தி... உங்க மாரடைப்பு ஏற்பட்டு இருக்கு இல்லையா?

அவரோட மனக்குறை தீர வேணாமா? அவரோட ஆத்மா சாந்தி அடைஞ்சு குளிர வேணாமா? இதே ரீதியிலே தாழ்வு

மனப்பான்மையோட நீங்க கதறிக்கிட்டிருந்தா... அந்த உத்தமரோட ஆத்மா அலை பாய்ஞ்சுகிட்டே இருக்கும்னு... உங்களுக்குப் புரியலையா?'' என்று சூரியா உரிமையாய் படபடத்ததும்.. குபீரென்று நிமிர்ந்து பார்த்தாள். வெண்ணிலா ''புரியுது சூரியா சார்! எ... என்னால என்ன செய்ய முடியும்? தயக்கமாய் கேட்டாள்.

அவள் கேட்ட கேள்விக்கு.. சூரியா தந்த பதில், அவளது வாழ்க்கைத் தடத்தையே அடியோடு புரட்டிப் போடும் என்று... யாருமே அப்போது நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!

## 16

''உங்களால முடியாதது எதுவுமே இல்ல மிஸ். வெண்ணிலா! உங்களை உதாசீனப் படுத்தினவங்க முன்னாடி... நீங்க ஜெயிச்சு உசந்து நின்னு காட்டுவீங்க...

உங்களுக்கு நேர்ந்த, இழப்பை விட.... நீங்க உதாசீனப்படுத்தப்பட்டு விட்டீங்க அப்பங்கிற வேதனைதான்..., சத்தியமூர்த்தி சாரை ரொம்பவே தாக்கியிருக்கு!

மத்தவங்க உங்களை 'முடம்'னு சொல்லிட்டாங்க... சரி! நான் அப்படித்தான்னு நீங்களும் முடங்கிப் போகப் போறீங்களா?

நீங்க எதையும் சாதிக்க முடியும்! ஊனம்கிற எண்ணத்தை முதல்லே ஊனமாக்குங்க வெண்ணிலா!

தாழ்வு மனப்பான்மையைத் தூக்கி எறிங்க... 'தங்கமங்கை' யா சாதனைப் பெண்மணியா நீங்க வலம் வரணும்.

நான்.. எங்கப்பா, குணசேகரன் சார், உங்க பிரண்ட் வானதி எல்லாருமே உங்களுக்கு பக்க பலமா இருக்கோம்.

உங்களைப் பார்த்து அம்மா ஒருக்காலும் வேதனைப் படவே கூடாது. அப்பாவை இழந்துட்டீங்க...

அம்மாவோட மனசை நீங்க குளிர வைக்கணும். அவங்க உங்களைப் பார்த்து பெருமிதத்துல பூரிச்சுப் போகணும்.

நீங்க... இப்படி தாங்கு கட்டைகளை ஊன்றிக்கிட்டு நடமாடறதை பார்த்தா... எனக்கே... எங்களுக்கே தாங்க முடியலையே? சிவகாமி அம்மா எப்படி தாங்கிப்பாங்க?

என்ன மிஸ் வெண்ணிலா திகைச்சுப் போய் பார்க்கிறீங்க? அதுக்கும் ஒரு தீர்வு இருக்கு.

மதுரையில பிரபல மருத்துவமனையில வேலை பார்க்கிற நண்பனை விசாரிச்சுப் பார்த்தேன். அவனும் ஒரு டாக்டர் தான்!

உங்களுக்கு ரொம்ப சுலபமா செயற்கை கால் பொருத்திடலாம்னு சொல்றான். தாங்கு கட்டைகளை இல்லாம நீங்க அதைப் பொருத்திக்கிட்டு நார்மலா நடக்கலாம்.

அடுத்த வாரமே நாம்ப மதுரைக்குப் போகலாம். சிகாகோவிலிருந்து ஒரு ஸ்பெஷலிஸ்ட் வந்திருக்காராம். அவர்கிட்டே காட்டலாம்...

எல்லாத்துக்கும் மேல... கடவுள் இருக்காரு. உங்க நல்ல மனசுக்கு



எல்லாமே நல்ல படியாத்தான் நடக்கும்'' என்றபடி இதமாகப் புன்னகைத்தான் சூரியா.

''சூரியா தம்பி! முதல்லே செயற்கைக் கால் பொருத்தறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க... உங்களுக்கு கோடி புண்ணியமாகப் போகும்'' சிவகாமி கையெடுத்து கும்பிட்டாள்.

''ஐயோ என்னம்மா இது? பெரியவங்க நீங்க... இப்படி எல்லாம் பேசி என்னை சங்கடப்படுத்தாதீங்க...

இது என்னோட கடமை! சமீப காலமா எங்கப்பா, சத்தியமூர்த்தி சாரோட நெருங்கிப் பழகிட்டாருல்ல? அவரால இந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்புகளை தாங்கிக்கவே முடியலை.

'நிலாவை இந்த நிலைமையில பார்க்கவே முடியலை சூரியா' அப்படின்னு நைட்டெல்லாம் புலம்பறாரு...

நிலாவை நல்லா நடமாட வைச்சு சிகரத்துக்கு உசத்தி காட்டணும். அதான் எங்க ஆசை!'' என்று சூரியா பேசியதும்... சிவகாமியின் கண்கள் பனித்தன.

வெண்ணிலா கலங்கிய விழிகளோடு... கூடத்து சுவரில் மாட்டப்பட்டிருந்த அப்பா சத்தியமூர்த்தியின் படத்தை வெறித்துப் பார்த்தாள்.

அவளது மனத்தராசில் சூரியாவையும் திவாகரையும் எடைப் போட்டுப் பார்த்தாள்.

இருவருக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது போலிருக்கிறதே? எவ்வளவு சுலபமாக என்னை தூக்கி எறிந்திருக்கிறான் திவாகர்?

இப்போது நினைத்தால் கூட.... திடுதிப்பென்று என்னை வேரோடு பிடுங்கி வேகமாக எறிந்து விட்டது போல் அதிர்ச்சியில் உடல் பதறித் துடிக்கின்றதே?

'அரவை மில்'லில் நாள் முழுவதும் மிளகாய், மசாலாப் பொருட்களின் கார நெடியில்... பெரிய மிஷின்கள் உமிழும் உஷ்ணத்தில் அயராது உழைத்தீர்களே அப்பா?

ஆனால் உங்களை அன்று... அந்த திலகா 'கார நெடியுடன் வீட்டுக்குள் நுழையும் மனிதர்' என்று எவ்வளவு இளக்காரமாக பேசினாள்?

இந்தப் பச்சோந்திகளின் முன்பு தலை நிமிர்ந்து வாழ்ந்து காட்டுகிறேன். என்னை ஆசீர்வதிங்கப்பா....

சத்தியமூர்த்தியுடன் மானசீகமாகப் பேசியவளுக்கு... அப்போது தான் பொறி தட்டியது போலும்!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சூரியாவை ஏறிட்டாள். ''மிஸ். வானதி! உங்க பிரண்டை இப்போ பார்த்தால்... ஏதோ நல்ல முடிவெடுத்திருக்கிறதா தோணுது இல்லையா? அவங்க கண்கள்லே ஒரு உத்வேகமும் வெறியும் தெரியுது. குட்! வெரிகுட் வெண்ணிலா... இதை.. இதை...இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்.

'அக்னி குஞ்சொன்று கண்டேன்
அதை ஆங்கோர் காட்டிலே
பொந்திடை வைத்தேன்

வெந்து தணிந்தது காடு''

என்று சூரியா அசரீரி மாதிரி சொல்ல.. தனக்குள் படுவேகமாய் அக்னி பரவுவதை உணர்ந்தாள் வெண்ணிலா.

நெஞ்சிலிருந்த பெரும் பாரம் இறங்கி அதற்கு பதிலாய்.. ஒரு வித வெறியும், உத்வேகமும், வைராக்கியமும் குடி புகுந்தன.

அவளுக்கு சத்தம் போட்டு அதே பாடலை பாட வேண்டும் போலிருந்தது.

உள்ளிருக்கும் நெருப்பைத் தூண்டி விட்ட சூரியாவை நன்றியுடன் பார்த்தாள் வெண்ணிலா. அதற்கு பிறகு...

தன் முடிவை அவள் வெளிப்படுத்திய போது சூரியா உட்பட அனைவருமே சொல்லி வைத்தாற் போல்... சந்தோஷம் செய்து உற்சாகப்படுத்தியதோடு உசுப்பேற்றியும் விட்டார்கள்.

## 17

மேகங்கள் வான் நதியில் ஓடங்களாய் மிதந்து கொண்டு இருந்தன. சித்திரம் தீட்டின மாதிரி இலேசான பழுப்பில் முழுசாய் நிலா நீந்திக் கொண்டிருந்தது. கை கையாய் அள்ளித் தெளித்த மாதிரி நட்சத்திரங்கள்..

சேலையைக் களைந்து விட்டு நைட்டிக்கு மாறிய வெண்ணிலா.. கட்டிலில் அமர்ந்து இடது காலில் பொருத்தப் பட்ட இடத்தில் சற்று வீங்கி சிவந்திருந்ததால்... கட்டிலின் தலை மாட்டிலிருந்த ஆயின்மெண்ட்டை எடுத்து தடவி விட்டாள்.

கட்டிலில் சரிந்து படுக்கப் போனவள்... பக்கத்தில் அம்மா இல்லாததால் மீண்டும் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''அம்மா! அம்மா!''

பதில் இல்லை.

குனிந்து கட்டிலின் அடியில் சாய்த்து வைத்திருந்த தாங்கு கட்டைகளை எடுத்து ஊன்றியபடி அறையை விட்டு வெளிப்பட்டாள்.

கொல்லைப்புறக் கதவு திறந்து கிடந்ததை பார்த்து விட்டு... புருவங்கள் முடிச்சிட 'டக்..டக்' என்று தாங்கு கட்டைகள் ஒலி எழுப்ப நடந்தாள் வெண்ணிலா.

கிணற்று மேடையருகே இருந்த துணி துவைக்கும் கல்லின் அருகே நின்றபடி முதுகு குலுங்க அழுது கொண்டிருந்தாள் சிவகாமி.

''அம்மா! என்னம்மா இது? இந்த நேரத்துல இங்க நின்னு அழுதுகிட்டிருக்கே?'' என்றபடி ஆறுதலாய் புஜத்தில் கை வைத்தாள்.

''மனசு தாங்கலை ராஜாத்தி! குடும்பத்தையே தாங்கின அண்ணன் பொசுக்குனு போயிட்டாரேன்னு கொஞ்சம் கூட விசனப்படாம... அதே தேதியில கல்யாணத்தை நடத்திட்டாளே அந்த சரோஜினி?

நாளைக்கு கார்த்தால கல்யாணம்... இன்னிக்கு வரவேற்பு போலிருக்கு... இன்னிசைக் கச்சேரி பாட்டுச் சத்தம் கேட்குது பாரேன்.



என் காதுல அப்படியே ஈயத்தைக் காய்ச்சி ஊத்தினாப்பல இருக்கு.

என்னால தாங்கவே முடியலை கண்ணம்மா... என் அடி வயிறு எல்லாம் பிசையுது'' துக்கம் தாளாமல் குமுறினாள் சிவகாமி.

அவளைத் தேற்றும் வழி வகை தோன்றாமல்... மௌனமாக ஸ்தம்பித்து நின்றாள் வெண்ணிலா.

அவளையும், தாங்கு கட்டைகளையும் மாறி மாறிப் பார்த்து விட்டு தேம்பியவளைப் பார்த்து கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''எம்மா இப்படி விசனப்படறே? ''ஆர்ட்டிபிஷியல் லெக்'' லெக் மாட்டிக்கிட்டு நான் நடமாடிக்கிட்டிருக்கேன்ல? அதை நினைச்சு திருப்தி படேன். கால்லே மருந்து தடவிட்டேன். திரும்பவும் லெக் எதுக்குன்ன ... தாங்கு கட்டைகளை எடுத்துட்டு வந்தேன்.

பத்து நாளுக்கு முன்னாடி இந்த 'லெக்'கை மாட்டிக்கிட்டு நடக்க முடிஞ்சப்போ... எனக்கு எப்படி இருந்திச்சு தெரியுமா? நொண்டாம... எல்லோரையும் போல என்னாலும் நார்மலா நடக்க முடியுதேன்னு... கடவுளுக்கு நன்றி சொன்னேன் அம்மா!

யாருக்கு கல்யாணம் நடந்தா உனக்கு என்ன? என்னை ஒரு மகனா பாவிச்சுக்கோ அம்மா!

''சத்தியமா அரவை மில்'லை நான் நடத்த ஆரம்பிச்சிருக்கேன். வாடிக்கையாளர்கள் வழக்கம் போல நம்ம மில்லைத்தான் நாடி வர்றாங்க...

சொல்லப் போனா முன்னை விட கூட்டம் அதிகமா வருது. நாள் முழுவதும் உற்சாகமா உழைக்கிறேன். எனக்கு கவலையே இல்லை தெரியுமா?

வெறித்தனமா வெற்றி என்கிற இலக்கை நோக்கி நான் போயிட்டிருக்கேன். உன் மகள் 'சொந்தக்கால்லே' நிக்கறேனே அதை நினைச்சுப் பெருமை படும்மா.. எனக்கு உன்னை விட்டா வேற யாரு இருந்தாங்க?

மனசுல இருக்கிற கவலையை தூக்கி எறிஞ்சுடும்மா... சிரிச்ச முகத்தோட எனக்கு பக்கபலமா ஆறுதலா இரும்மா நான் இன்னும் நிறைய சாதிக்கணும்'' தழுதழுத்த குரலில் மகள் பேசியதும் சிவகாமிக்கு மனம் இளகிப் போனது.

சட்டென்று கண்ணீரைத் துடைத்தபடியே 'எவனுக்கு கல்யாணம்

'ஜெயில் வாழ்க்கை நம்ம தலைவரை எப்படி மாற்றிட்டது பாரு...

'என்னாச்சு?'

'சிக்கன் சாப்பிடும் போது ஜன்னல் கிட்டே போய் நின்னுக்கிட்டார் பாரு!'

-அசோக்ராஜா. திருச்சி.



நடந்தா எனக்கென்ன? ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் நிலா!

அவங்க பண்ணின பாவத்துக்கு பகவான் சரியான கூலி குடுக்காம விட மாட்டாரு. பாரேன்!

இந்த மட்டுமாவது செயற்கைக் கால் பொருத்திக்கிட்டு நீ நடக்கிறீயே.. அது மனசுக்கு கொஞ்சம் ஆறுதலா தான் இருக்கு...

அரவை மில்லை நீ எடுத்து நடத்தப் போறேன்னு சொன்னதும் இது சரிப்பட்டு வருமான்னு எனக்குள்ளே சின்னதா தயக்கம் இருந்துச்சு.

ஆனா.. போன வாரம் அமாவாசை அன்னிக்கு பச்சை வண்ணக்காட்டன் புடவையை கட்டிக்கிட்டு அப்பா படத்தை தொட்டு வணங்கிட்டு என்கிட்ட ஆசிர்வாதம் வாங்கிட்டு கிளம்பினே...

நானும் முதல் நாளாச்சேன்னு கூடவே வந்தேன். அரவை மில்லுக்குப் போனதும்... புடவை மேல மிளகாய் தனியா மாவுத்தூள் படாம இருக்கிறதுக்காக... புடவைக்கு மேல உங்கப்பாவோட சட்டையை மாட்டிக்கிட்டு வேலையைத் தொடங்கினியே நான் அப்படியே அசந்து போயிட்டேன்.

மிஷின்களை இயக்கிய விதம்... வாடிக்கையாளர்கள் கிட்டே நீ பேசின விதம்.. அச்சு அசலா உங்கப்பா மாதிரியே நீ வேலையில காட்டின கவனம், நேர்த்தி... எல்லாமே என்னை திகைக்க வைச்சது.

கண்டிப்பா நீ முன்னுக்கு வருவே ராஜாத்தி... இனிமே உன் மனசு வருத்தப் படும்படியா நான் நடந்துக்க மாட்டேன்.

வாம்மா உள்ளே போகலாம்''

''நீ போம்மா... ஒரு அஞ்சு நிமிஷம் இங்க காத்தாட உட்கார்ந்துகிட்டு இந்த வானத்தை, நிலாவை, நட்சத்திரங்களை வேடிக்கை பார்த்துட்டு வரேன்...'' சொல்லியபடியே துணி துவைக்கும் கல்லின் மீது மெல்ல அமர்ந்து கொண்டாள் வெண்ணிலா.

சிவகாமி கண்கள் மின்ன மகளை ஊன்றிப் பார்த்தாள்.

''நிலா! பெரிய பெரிய இழப்புகளை சந்திச்சு உன் மனசு துக்கத்தால இறுகிப் போயிடுச்சோன்னு நினைச்சேன்.

ஆனா... நீ இன்னமும் உன்னோட கலாரசனையை இழக்காம மென்மையான உணர்வுகளோட தான் இருக்கேன்னு... இப்போ புரிஞ்சுகிட்டேன்.

நீ என்னிக்கும் இப்படியே இருக்கணும். அப்போ தான் எனக்கு சந்தோஷமா இருக்கும். ரொம்ப நேரயா இங்கேயே உட்கார்ந்துட்டு இருக்காதே... வாடைக்காத்து உடம்புக்கு ஒத்துக்காம போயிடும் சரியா?''. வெண்ணிலாவின் கலைந்த கூந்தலைக் கோதி வருடி விட்டு, தளர்வாய் உள்ளே நடந்தாள் சிவகாமி.

அம்மாவுக்கு ஆறுதல் கூறி அனுப்பி விட்ட வெண்ணிலா வானத்தை வெறித்தாள்.

வேப்பமரம் கிளைகளை பலமாக அசைத்து சில்லென்ற காற்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தது.

அன்று... திவாகரும், சரோஜினியும் வீட்டிற்கு வந்து பேசியவற்றைப் புரட்டிப் பார்க்க... உள்ளே எரிமலையின் வெப்பக்குமுறல்!



மிளகாயை விழுதாக அரைத்து உடம்பு முழுவதும் பூசி விட்டாற் போன்று... அவமான உணர்வில் தலை முதல்...பாதம் வரை திகுதிகுவென்று எரிந்தது.

தீபாவளி, பொங்கல், சித்திரை போன்ற விசேஷங்களில்... சரோஜினி குடும்பத்துடன் இங்கு வந்து விடுவாள்.

அந்த மாதிரி சமயங்களில் எல்லாம்... வெண்ணிலாவுடன் தனிமையில் பேசுவதற்கு தவம் கிடந்தானே திவாகர்?

அப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படுவதை... வெண்ணிலா என்றுமே விரும்பியதில்லை. தற்செயலாக அப்படி சந்தர்ப்பம் அமைந்து விட்டாலும்... நாசூக்காக நழுவி விடுவாள் அல்லது வேண்டுமென்றே தவிர்த்து விடுவாள்.

''நிலா! மாமாவையும் அத்தையையும் பஸ் ஸ்டாண்டுலே வச்சுப் பார்த்தேன். உசிலம்பட்டிக்குப் போறாங்களாம்... குணசேகரனுக்கு வயித்து வலி வந்து ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்களாமே? நீ போகலையா?... நீ தனியா இருக்கிறேன்னு தெரிஞ்சதும்... ஆசையா நாலு வார்த்தை பேசலாமேன்னு... நேரா இங்க வந்துட்டேன்.

நிலா...வெண்ணிலா! நீ எவ்வளவு அழகு தெரியுமா? திலகாவும் இருக்காளே? தண்டம்! ஒரு ரசம் கூட உருப்படியா வைக்க மாட்டா...

ஆனா நீ சமையல்லே எக்ஸ்பர்ட்! போன வாரம் பண்டிகையில நீ சமைச்ச அத்தனை அயிட்டங்களையும் ஒரு பிடி பிடிச்சேன். பார்த்தியா? உண்மையிலேயே நான் ரொம்ப ரொம்ப கொடுத்து வச்சவன் நிலா! உன்னை உயிருக்கும் மேலா நேசிக்கிறேன்.

எஸ்! ரியலி... அயாம் லக்கி! நீ எனக்கு மனைவியாகப் போறே... எவ்வளவு அதிர்ஷ்டம் பண்ணினவன் நான் தெரியுமா? என்று பேசியபடியே அவளது கரத்தைப் பிடிக்க எத்தனித்தான் திவாகர்.

சரலென்று நான்கடி பின்னுக்கு நகர்ந்து கொண்டு, ''என்ன அத்தான் இது? வீட்டுலே யாருமில்லைன்னு தெரிஞ்சுகிட்டு வந்து நிக்கறீங்க? நாளைக்கு எனக்கு எக்ஸாம் இருக்கு.

என்னோட கிளாஸ்மேட்ஸ் நாலைஞ்சு பேர் வீட்டுக்கு 'கம்பைன் ஸ்டடி'' பண்றதுக்கு.. இப்போ வரப் போறாங்க.

நீ என்னோட அத்தான் தான்! முறைப் பொண்ணு கிட்ட உரிமையா ஆசையா பேசத்தான் வந்தீங்க..தப்பில்லை... ஆனா என்னோட பிரண்ட்ஸ் நம்ம ரெண்டு பேத்தையும் தனியா பார்த்தாங்கன்னா... கிண்டல் பண்ணியே என்னை ஒரு வழி பண்ணிடுவாங்க...

பிளீஸ் அத்தான்! கோவிச்சுக்காதீங்க... கொஞ்சம் சீக்கிரம் கிளம்பறீங்களா? அவங்க வந்துடப் போறாங்க'' என்று சமயோசிதமாக பொய் மூட்டையை அவிழ்த்து விட்டு.. திவாகரை விரட்டி விடுவாள் வெண்ணிலா.

'எப்படியெல்லாம் உருக உருகப் பேசிவிட்டு... இப்படி தலை கீழாக மாறி விட்டானே திவாகர்?

நல்ல காலம்! அவனுக்கும் எனக்கும் பெரியவர்கள் முடிச்சுப் போட்டு பேசினாலும்.. என் மனதை சிதறாமல் பார்த்துக் கொண்டேனே?

அது வரை தப்பித்தேன். என் வாழ்நாளில் அவன் முகத்தில் நான் விழிக்கவே கூடாது. ஆனால்... விதி! அவர்கள் இருவரையும் மீண்டும் சந்திக்கவே வைத்தது.

18

“அடடே! வாம்மா வெண்ணிலா! உள்ளே வந்து உட்கார். ஒரு குரல் குடுத்திருந்தா நானே வந்திருப்பேனே? உட்காரும்மா'' வரவேற்று உபசரித்தார் பரந்தாமன்.

தயக்கமாய் சோபாவின் நுனியில் மெல்ல அமர்ந்தாள் வெண்ணிலா.

''சூரியா சூரி! யாரு வந்திருக்காங்கன்னு பாரேன்.'' அப்பா பரந்தாமன் உற்சாகமாய் குரல் கொடுத்ததும்... பாத்ரூமில் குளித்து விட்டு தலையைத் துவட்டிக் கொண்டே ஹாலுக்கு வந்தான் சூரியா.

வெண்ணிலா வந்து அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவனது முகத்தில் ஆச்சரியக் கீற்று!

குமிழ் சிரிப்புடன் ''வாங்க மிஸ். வெண்ணிலா! குட்மார்னிங் என்றவனுக்கு தான் வெற்று மார்புடன் நின்று கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பு வந்ததும் சங்கோஜத்துடன் சட்டென்று தனது அறைக்குள் புகுந்து கொண்டான்.

வார்ட்ரோபில் வரிசையாய் தொங்கிய சட்டைகளில் அவனது பார்வை தத்தித் தடவின.

சந்தனக் கலர் சட்டையும் கறுப்பு நிறத்தில் பேண்ட்டும் அணிந்து கொண்டு வெளிப்பட்டான்.

அதுவரை அவனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த பரந்தாமனின் முகத்தில் குட்டி முறுவல் பூத்தது.

வெண்ணிலா, சந்தனக் கலரில் கறுப்புக் கரை ஜரிகை பார்டர் போட்ட காட்டன் புடவையைக் கட்டி பொருத்தமாக கறுப்பு வண்ண ரவிக்கையை அணிந்திருந்தாள்.

பரந்தாமன் தன் மனக் கண்ணில் இருவரையும் ஜோடியாக நிற்க வைத்துப் பார்த்தார்.

சூரியாவுக்காகவே பிறந்து வளர்ந்தவள் போன்று வெண்ணிலா பொருத்தமாக, பாந்தமாக இருந்தாள்.

சமீப காலமாக... மகன் சூரியாவின் உள்ளக் கிடக்கை அவர் நன்கு அறிந்து கொண்டுதான் இருந்தார்.

வெண்ணிலா விபத்தில் சிக்கி காலை இழந்த சேதியைக் கேட்டதும் சூரியா துடித்த துடிப்பையும், தவித்த தவிப்பையும் நேரில் பார்த்து உண்மையை விளங்கிக் கொண்டார் பரந்தாமன்.

''சொல்லுங்க மிஸ். வெண்ணிலா! நான் என்ன செய்யணும்?'' என்று சூரியா பனிச்சென்று கேட்டதும் வெண்ணிலாவின் தயக்கம் சட்டென்று காணாமல் போனது.

தன் பெயர்.. அவனுடைய உச்சரிப்பில் வீணைத் தந்திகளின் இனிய நாதமாய் ஒலிப்பதை உணர்ந்து திகைத்த வெண்ணிலா.,. சகஜமாய் பேசத்



தொடங்கினாள்.

''கடந்த மூணு மாசத்துல 'சத்தியா அரவை மில்'லுக்கு நிறைய கஸ்டமர்ஸ் வர ஆரம்பிச்சுட்டாங்க... நல்ல லாபமும் வந்துட்டு இருக்கு... அதுக்கு நீங்க குடுத்த ஐடியாதான் காரணம் சூரியா சார்! 'சத்தியா அரவை மில்'லை இன்னும் நல்ல விஸ்தரிப்பு செய்து பெரிய லெவலுக்குக் கொண்டு வரணும்னு ஆசைப் படறேன். இது விஷயமா உங்க யோசனையை கேட்கலாம்னு தான் வந்தேன்.''

உயர்ந்து உச்சத்தைத் தொட வேண்டும் என்ற வெறி... அவளது குரலில் தொனித்தது.

''ஐடியா குடுத்தது என்னமோ... நானாக இருக்கலாம். ஆனா.. இந்த அளவுக்கு உத்வேகமா அசுரத் தனமா உழைச்சு நீங்க செயல்படுவீங்கன்னு... நான் சத்தியமா எதிர்பார்க்கலை.

ஏன்னா ஆரம்பத்துல அந்த அளவுக்கு 'வெக்ஸ்' ஆகியிருந்தீங்க. உங்க உழைப்பும் வேகமும் தான் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கு... உங்க திறமைக்கு கிடைச்ச அங்கீகாரம் இது!

ஸ்கூட்டர் ஓட்டக் கத்துக்கோங்க பிஸினஸ்லே முன்னேறணும்னா நாலு எடத்துக்குப் போய் அறிமுகப்படுத்திக்கிட்டு ஆர்டர்ஸ் பிடிக்க வசதியா இருக்கும்'னு சொன்னேன்.

உங்களுக்கு ஏற்கனவே சைக்கிளிங் தெரிஞ்சதாலே... ஒரே வாரத்துல சிரத்தையா ஓட்டக் கத்துக்கிட்டீங்க. பெரிய பெரிய ஹோட்டல் உரிமையாளர்களை நேர்லே போய் சந்திச்சீங்க...

ஹோட்டல்ஸ்லே மூட்டைக் கணக்கா மிளகாய் தூள், தனியா தூள், கோதுமை மாவு, மஞ்சள் தூள், கரம் மசாலா தூள் வகையறாக்களை... அரைச்சு வச்சிருப்பாங்க... அதற்குரிய ஆர்டர்ஸ் எல்லாம் 'சத்தியா அரவை மில்'லுக்காக நீங்க கேட்டு வாங்கினீங்க பாருங்க!...

அரவை மில்லுல இடைவிடாத வேலை! மூணு நாலு பெண்களுக்கு அதுவும் கணவரால கைவிடப் பட்டவங்களுக்கு, விதவைக்கு.. இப்படி கவனமா பார்த்து தேர்ந்தெடுத்து வேலைக்கு வச்சிருக்கீங்க

நான் சின்னதா ஒரு கோடு போட்டு காட்டினேன். நீங்க பெரிய

''தலைவர் கூட இப்ப சூழ்நிலைக்கு தகுந்தபடி பேச கத்துகிட்டாருன்னு எதை வச்சு சொல்கிறே?''

''கல்யாண வீட்டில் மணமக்களை வாழ்த்தும் போது 'தமிழகமும் மின்வெட்டும் போல இணை பிரியாமல் வாழ்க'ன்னு வாழ்த்தினாரே!''

-ஜி. சுந்தராஜன், விருதுநகர் மாவட்டம்.



ரோடே போட்டு அசத்திட்டீங்க வெண்ணிலா!

சொல்லுங்க... எனி ஹெல்ப்?''

''நீங்க பெரிய கம்ப்யூட்டர் என்ஜினீயர் மட்டுமல்ல. பெரிய ஜீனியஸ்! உங்க ப்ராஜெக்ட்டுக்கு வெளிநாடுகள்லே அமோக வரவேற்பு இருக்கே... மூணு மாசத்துக்கு ஒருவாட்டி பாரினுக்கு பறந்துட்டிருக்கீங்க.

என்னைப் போய் இப்படி புகழ்றீங்க? நான் ரொம்ப சின்ன மனுஷி! ஒரு திட்டம் வச்சிருக்கேன். அது சரியா வருமான்னு நீங்க சொல்லணும். உங்க கணிப்பு எப்பவும் ரொம்ப கரெக்டா இருக்கும். அதான்!''

''சரி! உங்க பிளான் என்னன்னு சொல்லுங்க வெண்ணிலா''.

''அரவை மில்லுலே இன்னும் நிறைய மிஷின்களைப் போடலாம்னு வீட்டுப் பத்திரத்தையும் எடுத்துட்டுப் போயிருந்தேன்.

டாக்குமெண்ட்ஸ் எல்லாத்தையும் அவரு பார்த்தாரு. அவருக்கு திருப்திதான். லோன் சாங்ஷன் பண்றேன்னு சொல்லிட்டாரு. பணம் வந்ததும் தரமான மிஷின்களை சென்னைக்குப் போய் வாங்கனும்.

நம்ம அரவை மில்லுலே நிறைய இடமிருக்கே! நேத்தைக்கு ஏழெட்டு டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் ஓனர்ஸை நேர்லே போய் பார்த்தேன்.

அவங்களும் ஹோல்சேல்லே மிளகாய், தனியா, மஞ்சள்தூள், கோதுமை மாவு, அரிசி மாவு வகையறாக்களை அரைக்கிறதுக்குரிய ஆர்டர்ஸை நமக்கே தரேன்னு சொல்லிட்டாங்க...

அந்த ஆர்டர்ஸை எடுத்துக்கிட்டோம்னா இன்னும் நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு தரலாம். நம்ம மில்லுல பெண்களுக்கு மட்டும் தான் வேலை... அது கூட.. என்னை மாதிரியான பெண்களுக்கு... ஐ மீன்... ஊனமுற்றப் பெண்களுக்கு முதலிடம் தரலாம்னு இருக்கேன். அது விஷயமா...''

''ஒரு விபத்துல உங்க காலை இழந்துட்டீங்க.. அவ்வளவுதான்! ஊனமுற்றப் பொண்ணுன்னு சொல்லாதீங்க.. உங்க திறமையில... எண்ணத்துல.. மனித நேயத்துல... செயல்பாடுகள்லே எதுலேயும் ஊனமே இல்லை.

சொல்லப்போனா அந்த விபத்துக்கு அப்புறமா சில இழப்புகளை சந்திச்சாலும் 'சாதனைப் பெண்மணி'யா எல்லாரும் பார்த்து ஆச்சரியப்படும்படியா வளர்ந்திருக்கீங்களே வெண்ணிலா?

ஊனத்தை ஊனமாக்கிய பெண் நீங்க இனிமே அந்த மாதிரி பேசாதீங்க. பிளீஸ்''

''ஸாரி! சூரியா சார் இனிமே அப்படி பேசலை''

''சார், மோரெல்லாம் வேண்டாமே வெண்ணிலா''

''நான் இந்தளவுக்கு நடமாடறதுக்கு காரணகர்த்தாவே நீங்கதான்! உங்களைப் போய் வெறுமனே பேர் சொல்லி எப்படி கூப்பிடறதாம்? கொஞ்சம் கஷ்டம்தான். ட்ரை பண்றேன் முறுவலித்தாள்.

''குணசேகரன் சார்கிட்டேயும் வானதிகிட்டேயும் சொல்லி வச்சிருந்தேன். உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, மாவூத்து பக்கமிருக்கிற கிராமங்கள்லே இருந்து அஞ்சாறு பெண்கள் ஐ மீன் விபத்துல உறுப்பை இழந்தவங்க. பிறவி ஊனமானவங்ககிட்டே இவங்க



சொல்லியிருப்பாங்க போல

வேலைக்கு வரத் தயாரா இருக்காங்க. இங்கேயே தங்கி வேலை பார்க்கிறோம்னு சொல்றாங்களாம் அப்புறம் ஒரு விஷயம்! ஹோட்டல்ஸ் மற்றும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்லே ஆர்டர்ஸ் கேட்க நேர்லே போனப்போ ஒரு விஷயத்தை கவனிச்சேன்.

மிளகாய்த் தூள், தனியா தூள், சாம்பார் பொடி, இட்லிப் பொடி, புளியோதரைப் பொடி, எள்ளுப் பொடி, பருப்புப் பொடி, கறிவேப்பிலைப் பொடி போன்ற வீட்டுத் தயாரிப்பு பொடி வகைகளுக்க நல்ல மவுசு இருக்கு.

'சத்தியா புட் ப்ராடெக்ஸ்' அப்படின்னு புதுசா ஆரம்பிச்சு... சுவையான, தரமான முறையில... சகாய விலையில பொடி வகைகளை நாமளே சப்ளை பண்ணினா இன்னும் அமோக லாபம் கிடைக்கும். நிறைய பெண்களுக்கு வேலை வாய்ப்பு தரலாம்.

நம்ம வீட்டு மாடியில பெரிய கூரை போட்டு லேடீஸ் தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிடலாமா?ன்னு ஒரு யோசனை உதிச்சது. அதான் உங்ககிட்டே இதுபத்தி கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''அருமையான யோசனை! கண்டிப்பா கிளிக் ஆகும். அந்த வீட்டு மாடி மட்டுமில்ல தேவைப்பட்டா இந்த வீட்டு மாடியையும் யூஸ் பண்ணுங்க... ஆபீசுக்கு லீவு போட்டுட்டு சென்னைக்குப் போய் மிஷின்களை வாங்கி அதை பிட் பண்ணி கொடுக்கிறதுக்கு நானாச்சு!

சத்யா புட் ப்ரொடெக்ட்ஸ"க்கு நம்ம ஸ்டேட்டுல மட்டுமில்ல வெளிநாடுகள்லே கூட மார்க்கெட்டிங் பண்றதுக்கு நான் ஏற்பாடு பண்றேன். துணிஞ்சு காரியத்துல இறங்குங்க...

இதே உத்வேகத்தோட ஆர்வம் குறையாம செயல்பட்டா கூடிய விரைவில் பெரிய பிஸினஸ் மேக்னட்டா ஆயிடுவீங்க வெண்ணிலா! வெல்டன் வெண்ணிலா'' கட்டை விரலை தூக்கிக் காண்பித்தான் சூரியா.

ஆனந்த மிகுதியில் வெண்ணிலாவின் விழிகள் நீரில் பளபளத்தன.''

''அவன் வாக்கு பலிக்கப் போகுது! நீ அமோகமா வருவேம்மா'' என்று பரந்தாமன் கூறியதும் சட்டென்று அவரது கால்களில் பணிந்தாள் வெண்ணிலா. விரைவில் திவாகர் 'மூளைச்சலவை' செய்து அவளை திசை திருப்புவான் திசை திருப்புவான் என்று சூர்யா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

## 19

மூன்று வருடங்கள் உருண்டோடின. மூன்றே வருடங்களில் ஏகத்திற்கும் தளர்ந்து விட்டிருந்தாள் சரோஜினி.

இரட்டை நாடி சரீரம் ஏகத்திற்கும் இளைத்து தலைமுடி முழுவதும் பொல்லென்று வெளுத்து விட்டிருந்தது.

திலகாவை, மணியக்காரரின் மருமகளாக்கி விட்டோம் என்றும் திவாகருக்கு பெரிய இடத்துப் பெண்ணை கட்டி வைத்து விட்டோம்

என்றும் இறுமாப்பில் கர்வம் தெறிக்க அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தாள் சரோஜினி.

வினை விதைத்தால் வினையைத் தானே அறுக்க வேண்டும்? சத்தியமூர்த்தியின் குடும்பத்திற்கு அவள் செய்த துரோகத்திற்கான பலனை.. கடவுள் அவளுக்கு வட்டியும் முதலுமாக வாரிக் கொடுத்து விட்டிருந்தார்

திலகா விரும்பிக் கைப்பிடித்த மதியரசன் மெல்ல மெல்லத் தன் சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கினான்.

'சீட்டாட்டத்திற்கு' அடிமையானவன் என்பது தெரிய வந்தபோது திலகா ஆடிப் போனாள். சொந்த வீட்டிலேயே பணத்தைக் களவாடிச் சென்றதுடன் நாளடைவில் திலகாவின் நகைகளிலும் கையை வைத்தும் விட்டான்.

''ஏங்க... இது உங்களுக்கே நியாயமா? கட்டின மனைவிக்கே இப்படி துரோகம் பண்றீங்களே? என் நகையை என்கிட்ட கேட்காம எடுத்துட்டுப் போயிட்டீங்களே நியாயமா?'' என்று திலகா வாதாடியபோது... அவன் பதில் பேசாமல் 'பளார்' 'பளா'ரென்று அறைந்து விட்டு இளக்காரமாகப் பார்த்தான்.

''ஏண்டி? துரோகத்தைப் பத்தி நீ பேசறியா? உங்க குடும்பத்தைத் தூணா நின்னு தாங்கின சத்தியமூர்த்திக்கு நீங்க வைச்சீங்களே ஆப்பு? அந்தக் குடும்பத்தை அட்டையா ஒட்டி ஒட்டு மொத்தமா கறந்துட்டு கடைசியா நட்டாத்துல தவிக்க விட்டுட்டுப் போனவங்க தானே நீங்க?

ஊரே உங்க குடும்பத்தைப் பத்திப் பேசி காறித் துப்புது! எந்த முகத்தை வச்சுக்கிட்டு நியாயம் கேட்கிறே? நான் அப்படித்தான் போ... போய் உங்கம்மா உங்கண்ணன் கிட்ட சொல்லு.

இஷ்டமா இருந்தா இரு. இல்லே வாழா வெட்டியா போயிடு.'' கர்ஜித்து விட்டு மீண்டும் ஒரு அறை விட்டான்.

சரோஜினி இருதலைக் கொள்ளி எறும்பாகி விட்டிருந்தாள். அருமை மகளை அழைத்து வந்து தன்னுடன் வைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

இரட்டை பெண் குழந்தைகளுக்கு தாயானவளை அழைத்து வந்து வாழாவெட்டியாக... எத்தனைக் காலம் வைத்துக் கொள்வதாம்?

பாசத்தைக் கொட்டி வளர்த்த திவாகரோ அடியோடு மாறிப் போய்விட்டிருந்தான். பெரிய புளியங்கொம்பை வளைத்துப் பிடித்து விட்டவனுக்கு.. அம்மாவையும், தங்கையையும் நினைத்துப் பார்க்க நேரம் இருக்கவில்லை.

அவனது சந்தோஷமும் அற்பாயுசில் முடிந்து விட்டிருந்தது. மாமனார் வீட்டோடு தங்கிவிட்டவனுக்கு... மதிப்பு நாளுக்கு நாள் தேய்பிறை நிலவாக தேய்ந்து கொண்டே வந்தது.

ஏகப்பட்ட வியாதிகளைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்த சரோஜினிக்கு ஏற்கனவே உடம்பு வளையாது...

ஒண்டி மனுஷிக்கு தனியாக சமைத்து சாப்பிட்டு குனிந்து நிமிர்ந்து பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி... வீட்டைப் பெருக்குவதற்குள் அவளுக்கு விழி பிதுங்கியது.



தனிமையும், கவலையும், வியாதிகளும் அவளைப் படாதபாடு படுத்தி வதைத்தன.

'அண்ணன் மகள் வெண்ணிலாவை மருமகளாக்கியிருந்தால்... இந்த கதி எனக்கு ஏற்பட்டிருக்குமா?' மனசாட்சி அவளை ரம்பமாய் அறுக்க ஆரம்பித்தது.

எப்போதாவது வீட்டுக்கு வந்து அவளை எட்டிப் பார்க்கும் திவாகர் கண் கலங்கிவிட்டு ''மாமனார் மதிக்காட்டி கூடப் பரவாயில்லைம்மா... என் மனைவி என்னைப் புழுவை விடக் கேவலமா நினைக்கிறா

ஒரு குழந்தைக்கு தாயாகிட்டாளே தவிர குழந்தை மேல கிஞ்சித்தும் பாசமில்லை சதா காரை எடுத்துக்கிட்டு ஊர் சுத்தப் போயிடறா தட்டிக் கேட்க முடியலை.. தன் மானத்தை இழந்துட்டு நடைப் பிணமா நடமாடிட்டு இருக்கேன் அம்மா'' என்று புலம்பினான்.

மகள் திலகாவை விரும்பியவனுக்கே கட்டிக் கொடுத்தும்... அவளது வாழ்க்கை சரியா அமையவில்லை. 'ராஜ வாழ்க்கை வாழப் போகிறான் திவாகர்' என்று அவள் கட்டிய மணக்கோட்டை பொலபொலவென்று சரிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது.

ஊருக்குள் சதா 'சத்தியா அரவை மில்'லின் அபார வளர்ச்சியைப் பற்றியும் 'சத்தியா புட் ப்ராடெக்ட்ஸ்' நிறுவனத்தின் அசுர வேக முன்னேற்றத்தைப் பற்றியுமே... ஒரே பேச்சாக இருந்தது.

சத்தியா புட் புரொடெக்ட்ஸுக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததால்... வெண்ணிலாவின் முயற்சி வெற்றியடைந்து சிகரத்தைத் தொட வேண்டும் என்ற இலட்சிய வெறியோடு சூரியா களத்தில் இறங்கி விட்டான்.

அன்று அவன் வாக்கு கொடுத்தது போலவே... மாநிலத்தின் பல பகுதிகளில் மட்டுமின்றி.. மெல்ல மெல்ல பிற மாநிலங்களிலும் வெறிநாடுகளிலும் மார்க்கெட்டிங் செய்வதற்கு ஏற்பாடு செய்தான்.

சுவை, மணம், தரம், சகாய விலையுடன் இருந்ததால் சத்தியா புட் ப்ரொடெக்ட்ஸுக்கு மார்க்கெட் சூடு பிடித்து விட்டது.

வெண்ணிலாவுக்கு நிற்க நேரமில்லை. பேப்பரில் விளம்பரம் செய்து நிறைய ஊனமுற்றப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருந்தாள். நைட் ஷிப்ட், பகல் ஷிப்ட் என்று அயராது உழைக்க ஆரம்பித்தது வின்

''உன் தாத்தாவுக்கு அறுபதாம் கல்யாணம் செய்து வைத்தது தப்பா போச்சுனு எப்படி சொல்ற?''

''பாட்டியை கூட்டிட்டு ஊட்டிக்கு தேனிலவு போவேன்னு அடம்பிடிக்கறாரே''

-க.வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி.



போகவில்லை.

சத்தியா அரவை மில்லுக்குப் பக்கத்திலிருந்த பழைய கட்டிடத்தை விலைக்கு வாங்கினாள் வெண்ணிலா.

அந்த கட்டிடத்தை இடித்துவிட்டு சில மாதங்களில் சத்தியா புட் ப்ராடெக்ட்ஸுக்காக பிரமாண்ட கம்பெனியைக் கட்டிமுடித்து திறப்பு விழாவும் நடத்தினாள்.

அம்மா சிவகாமி, சாதனைப் பெண்ணாக வலம் வந்த மகள் வெண்ணிலாவைக் கண்டு மனம் குளிர்ந்து போனாள்.

அதுவரை கனன்று கொண்டு இருந்த மனதில் சில்லென்ற பாலை வார்த்தாற் போலிருந்தது.

ஒரே ஊரில் இருப்பதால் வெண்ணிலாவின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியும், உடனடியாக சரோஜினியின் செவிகளுக்கு எட்டிவிடும். சரோஜினி, திலகா, திவாகர் என்று மூவருக்குமே மனசாட்சி அறுத்தாலும் உள்ளூர கபகபவென்று வயிறு எரியத்தான் செய்தது. பக்கத்துத் தெருவில் விலைக்கு வந்த பெரிய குடோனை விலைக்கு வாங்கி செப்பனிட நவீன வசதிகளுடன் கூடிய ஹாஸ்டலைக் கட்டி தொழிலாளர்கள் தங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து விட்டிருந்தாள் வெண்ணிலா. தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளம், போனஸ், இதர சலுகைகள் கிடைத்ததால் அவர்களும் 'சத்தியா புட் புரொடெக்ட்ஸ்' நிறுவனத்தை தங்களது சொந்தக் கம்பெனியாக பாவித்து... அதீத ஆர்வத்துடனும் அக்கறையுடனும் உழைத்தார்கள்.

வெளியில் போக வர காரை வாங்கி விட்டாலும் வெண்ணிலா எளிமை விரும்பியாகவே இருந்தாள். அந்தக் கால வீட்டை இடித்து புது மாடலில் கட்டிக் கொள்ள வசதியிருந்ததும் அவள் தனது அப்பா நடமாடிய பரம்பரை வீட்டை இம்மியளவு மாற்றியமைக்கக் கூட சிறிதும் விரும்பவில்லை.

சூரியா கடந்த மூன்று வருடங்களில் மிக உயர்ந்த பதவியை அடைந்ததோடு தனிப்பட்ட முறையில் ஒரு சாப்ட்வேர் கம்பெனியையும் தனது தாயார் பத்மாவதியின் பெயரில் தொடங்கியிருந்தான்.

தோழி வானதிக்கு திருமணமாகி விட்டிருந்தது. அவளது கணவனுக்கு சொந்த ஊர் 'பெரியகுளமாக' அமைந்து விட்டதில் அவளுக்கு ஏகக் குஷிதான்!

உள்ளூரில் தோழி வெண்ணிலாவை நினைத்த மாத்திரத்தில் வந்து பார்த்து அளவளாவிக் கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை..! தோழியைப் பார்க்க வந்து விட்டிருந்தாள் வானதி.

சிவகாமியிடம் நலம் விசாரித்துவிட்டு உள்ளறைக்குச் செல்ல யத்தனிக்கும் தருணத்தில் ஆட்டோ தடதடத்து வாசலில் வந்து நின்றது. சரோஜினியும் திவாகரும் இறங்கி, தயங்கியபடி வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டு பகீரென்ற உணர்வில் ஆடிப் போய் விட்டாள் சிவகாமி. ஒன்றரை வயது பெண் குழந்தையைத் தூக்கியபடி வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டு பகீரென்ற உணர்வில் ஆடிப் போய் விட்டாள் சிவகாமி. ஒன்றரை வயது பெண் குழந்தையைத்



தூக்கியபடி வந்தான் திவாகர்.

தீயை மிதித்து விட்டாற்போல் பதைபதைத்து திகிலுடன் வானதியை நோக்கி விட்டு உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தாள் சிவகாமி.

"வெ... வெண்ணிலா! நிலா... யாரு வந்திருக்காங்கன்னு வந்து பாரேன்"

"என்னத்துக்கு அம்மா இப்படி பதட்டப் படறீங்க?" நிதானமாகக் கேட்டபடி மெல்ல நடந்து வந்தாள் வெண்ணிலா.

திவாகரையும் சரோஜினியையும் பார்த்ததும்... உடம்பெல்லாம் ஆணி பட்டாற்போன்று திகுதிகுவென்றிருந்தது. கீழுதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டு பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள்.

கூடத்துச் சுவரில் இருந்த சத்தியமூர்த்தியின் ஆளுயரப் புகைப் படத்திற்கு சந்தன மாலை சாத்தப் பட்டிருந்தது. அப்பாவின் புன்னகை ததும்பிய முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு ஒரு கணம் விழிகளை மூடி நீண்ட பெருமூச்சு விட்டாள் வெண்ணிலா.

"வா வாங்க அத்தே! வாங்க.. திவாகர் அத்தான் நல்லா இருக்கீங்களா? அடடே... இது உங்க குழந்தையா? அசப்புல உங்களையே உரிச்சுட்டு இருக்காளே குட்டிப்பாப்பா" மென்மையாக முறுவலித்தாள்.

'இவளுக்கு என்ன புத்தி கித்தி பேதலித்து விட்டதா?' என்பது போல் மகளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு.. பற்களைக் கடித்தபடி அடுக்களைக்குள் சென்று விட்டாள் சிவகாமி.

குழப்பம் படர்ந்த முகத்துடன் தோழியையே பார்த்துக் கொண்டிருந்தாள் வானதி. அவளுக்கு உள்ளூர எரிச்சலும் கோபமும் முண்டிக் கொண்டு வந்தது.

"நி... நிலா! அயாம் ஸாரி! உன்னை 'அவாய்ட்' பண்ணின பாவத்துக்கு நான் நிறைய அனுபவிச்சுட்டேன். நரக வேதனையை அனுபவிச்சுட்டு நடைப் பிணமா திரியறேன்.

என் வொய்ப் என்னை விட்டுட்டு தன்னோட பழைய காதலன் கூட ஓடிப் போயிட்டா.. இந்தப் பிஞ்சுக் குழந்தையைக் கூட அவ நினைச்சுப் பார்க்கலை.. கடந்த மூணு வருஷமா ஒவ்வொரு நிமிஷமும் நான் உனக்குப் பண்ணின துரோகத்தை நினைச்சு வேதனைப் பட்டுட்டுத்தான் இருக்கேன்.

வெரி வெரி ஸாரி! கடவுள் எனக்கு மிகப் பெரிய தண்டனையைக் குடுத்துட்டாரு நிலா புத்தி கெட்டுப் போய் தப்பு பண்ணிட்டேனே தவிர நான் இன்னமும் உன்னை மறக்கலை.

நீறு பூத்த நெருப்பா என் நெஞ்சுல இந்த நிலாவோட நினைப்பு இருந்துட்டு தானிருக்கு. எஸ்... வெட்கத்தை விட்டுச் சொல்றேன்.. இன்னமும் நான்.. நான்.. புரிஞ்சுக்கோ நிலா! ஐ லவ்யூ... இந்த பிஞ்சு முகத்தைப் பாரேன். அம்மாவோட ஏக்கத்துல வாடித் துவண்டு கிடக்கு பாரேன்!

தாய்ப்பாசத்துக்கும் தாயோட அரவணைப்புக்கும் ஏங்கித் தவிக்குது. என்னையும் என் குழந்தையையும் ஏத்துப்பியா நிலா? ப்ளீஸ்" தழுதழுத்த குரலில் வேண்டினான் திவாகர்.

"அம்மாடி நிலா! வயசுல சின்னவளா போயிட்டே? இல்லேன்னா..

நாங்க பண்ணின தப்புக்கு உன் கால்லே கூட நான் விழுந்திடுவேன். நடந்தது நடந்து போச்சு.. உன்னை நிராகரிச்ச பாவத்துக்கு நான் மட்டுமில்லை.. திலகாவும் நிறைய அனுபவிச்சுட்டா..

நீர் இடிச்சு நீர் விலகுமாடி ராஜாத்தி? எல்லாத்தையும் மறந்துடுவோம். அண்ணிக்கு இன்னமும் எங்க மேல இருக்கிற கோபம் தீரலை.. எல்லாம் காலப் போக்குல சரியாயிடும்!

அதோ பாரு! எங்கண்ணன் உத்தமன்.. இளகின மனசுக்காரன்.. நான் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டா.. தாங்க மாட்டான். அவன் உயிரோட இருந்திருந்தா.. எதையும் மனசுல வச்சுக்க மாட்டான்.

'அம்மாடி சரோஜினி! ஒண்ணுக்குள்ளே ஒண்ணு.. விட்டுக் கொடுத்திடுவோமா? என் பொண்ணை கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டுப் போ.. அவ உங்க எல்லாத்தையும் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பா என்று கேட்டிருப்பார் தெரியுமா?'' வெண்ணிலாவின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். சரோஜினி.

''எங்கப்பாவுக்கு யாராச்சும் அழுதா அதுவும் வீட்டுல வந்து அழறதை தாங்கவே மாட்டாரு. கண்ணீரைத் துடையுங்க. நான் அவரோட மகள். விட்டுத் தள்ளுங்க.. நான் எதையும் மனசுல வச்சுக்கலை. வருகிற ஞாயிற்றுக்கிழமை.. இதே வீட்டுல அப்பா படத்துக்கு முன்னாடி நிச்சயதார்த்தம்! சந்தோஷம் தானே அத்தே?

அம்மாவை நான் சமாதானப் படுத்திக்கிறேன். இன்னும் ஒருநாள் தானே பாக்கி இருக்கு? சொந்தக்காரங்க. பழகினவங்க. தெரிஞ்சவங்கன்னு யாரையும் விட்டுடாதீங்க எல்லோருக்கும் சொல்லிடுங்க பெரியவங்களோட ஆசீர்வாதம் கண்டிப்பா தேவையில்லையா? ஏற்பாடு பண்ணுங்க''.

திவாகரையும் சரோஜினியையும் மாறி மாறிப் பார்த்து கைகளைக் கூப்பினாள் வெண்ணிலா.'' அத்தே! உங்க வழியிலேயே வந்து உங்களுக்கு புத்தி புகட்டப் போறேன்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

என் வயித்துல பாலை வார்த்துட்டே ராஜாத்தி! உனக்கு 'வெண்ணிலா' அப்படிங்கிற பேரை விட.. 'மகாலட்சுமி'ன்னு பேர் வச்சிருக்கலாம். முகத்துல லட்சுமி கடாட்சம் தாண்டவமாடுது.

''காக்கா... 'கா...கா' ன்னு ஏன் கரையுதுன்னு தெரியுமா?''
''தெரியலியே!''
''தன்னோட பேரு மறந்திடக் கூடாதுன்னு தான்!''

-ச.ஆ.கேசவன், இளாம் மணியாச்சி.





எங்கண்ணன் மாதிரியே உனக்கும் எதையும் மனசுல வச்சுக்காம.. மன்னிக்கிற குணம்!

தடபுடலா ஏற்பாடு பண்ணிட்டு ஞாயிற்றுக்கிழமை வந்துடறோம். அண்ணிகிட்டே எடுத்துச் சொல்லுடி தங்கம். வரட்டுமா? வாடா.. திவாகர்! நமக்கு விடிவு காலம் பிறந்துடுச்சுடா..'' என்றபடியே வெளியேறினாள் சரோஜினி.

## 20

''ஏண்டி நிலா! உனக்கு என்னடி ஆச்சு? உன்னை உதாசீனம்படுத்தினவங்களை.. நியாயமா உள்ளேயே நீ நுழைய விட்டிருக்கக் கூடாது.

நீ என்னடான்னா.. வாய் நிறைய வரவேற்று அன்பா பேசினது போதாதுன்னு.. அந்த பச்சோந்தி திவாகரை கட்டிக்க சம்மதிச்சுட்டியே? உனக்கு மரை எதுவும் கழண்டு போச்சாடி? அம்மா கிட்ட ஒரு வார்த்தைகூட கலந்துக்காம நிச்சயத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டு நிக்கிற?''

நிலாவின் புஜத்தைப் பற்றி உலுக்கினாள் வானதி.

''அவங்க என்னோட அத்தை.. திவாகர் என்னோட அத்தான். அந்த வீட்டுக்கு நான் வாழப் போகணும்னு ரொம்பவே துடிச்சாரு எங்கப்பா..

நான் பிறந்த உடனேயே முடிவு பண்ணிட்டாராம் தெரியுமா? அந்த ஆசை நிறைவேறாத துக்கத்துல தானே அப்பா நம்மை விட்டுப் போயிட்டாரு அதான்!''

''என்னடி பேசறே நிலா? உங்கத்தான் மேலே உனக்கு காதலா?ன்னு நான் ஏற்கனவே உன்கிட்டே கேட்டிருக்கேன். பெரியவங்க முடிவு பண்ணின விஷயம் அத்தான் மேலே எனக்கு அன்பு, அக்கறை, பாசம் பரிவு இதெல்லாம் இருக்குன்னு நீ சொன்னே உன் மனசுல காதல் என்கிற உணர்வு இல்லைன்னு அடிச்சுப் பேசினியே?''.

''வானதி! நான் வாக்கு கொடுத்துட்டேன். ஞாயிற்றுக்கிழமை நிச்சயதார்த்தம். மாலதி அக்காவுக்கும் போன்லே சொல்லி வரச் சொல்லுவேன். இப்போ எதைப் பத்தியும் விதண்டாவாதம் பண்ண விரும்பலை. நான் மென்மையான உணர்வுகள் கொண்ட பொண்ணுன்னு உனக்குத் தெரியாதா? வீடு தேடி வர்றங்வங்களை வாசப்படியைக் கூட மிதிக்க விடாம.. நாயை விரட்டறாப்பல விரட்டி அனுப்பற அளவுக்கு... நான் கடுமையான மனுஷி இல்லையே? பேசியபடி தோட்டத்தை நோக்கி நடந்த வெண்ணிலாவை... முகத்தில் கேள்விக் குறியுடன் பின் தொடர்ந்தாள் வானதி.

வெண்ணிலாவின் அக்கறையான பராமரிப்பில் தோட்டத்து ரோஜாச் செடிகள் செழுமையுடன் வளர்ந்து கண்களை நிறைத்தன.

பூத்து மலர்ந்திருந்த வெள்ளை ரோஜாவை இலையுடன் சேர்த்துப்

பறித்தாள் வெண்ணிலா.

''அப்பா படத்துக்கு இனமும் ஒரு ரோசைப் பறிச்சு வச்சுடுவேன்.''

பூவுடன் நகரப் போனவளின் கையைப் பிடித்து நிறுத்தினாள் வானதி.

''நிலா! உனக்கு ஞாபகமிருக்கா? கல்யாண மண்டபத்துல தாம்பாளத்துல இருக்கிற உதிரிப் பூக்களை எல்லாம்... தடுக்கி விழப் பாத்து.. சூரியா தலை மேல கொட்டினியே? அன்னிக்கே.. உனக்கு சரியான ஜோடி சூரியா தான்னு மனசுல பட்டுச்சு.

மாந்தோப்புல அடுத்த முறை அவரை சந்திச்சப்போ காரணமே இல்லாம எரிஞ்சு விழுந்தே உன் மனசுல சூரியா வந்துட்டாரு ஆனா உனக்கு நீயே ஒரு வட்டம் போட்டுக்கிட்டு வெளியே வர மறுக்கிறயோன்னு... என் மனசுக்கு பட்டது.

ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் நிலா! அவர் உன்னை மனப்பூர்வமா நேசிக்கிறாரு... உனக்கு கஷ்டம் வந்தா துடிதுடிச்சுப் போயிடறாரு.. அதை நான் கண்கூடா நல்லா கவனிச்சுட்டுத் தான் சொல்றேன்.

உன்னோட லைப் மேட்டர் இது! எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிவு எடுக்காம.. நிதானமா யோசி! அம்மா கிட்டே நல்லது கெட்டதை கலந்து ஆலோசிச்சு முடிவு பண்ணு! நான் கிளம்பறேன்'' அவளது தாடையைத் தொட்டுத் தடவி விட்டு விருட்டென்று அங்கிருந்து அகன்றாள் வானதி.

வெள்ளை ரோஜாவை அப்பாவின் புகைப் படத்தில் செருகிவிட்டு.. நேராக பரந்தாமனின் வீட்டுக்குச் சென்றாள் வெண்ணிலா.

''வணக்கம்! உங்க கிட்ட முக்கியமான உதவி நாடி வந்திருக்கேன் அப்பா! சூரியா சார் இருக்கிறாரா?''

''முதல்லே உட்காரும்மா! சூரியா கம்ப்யூட்டர்லே ஏதோ ஒர்க் பண்ணிட்டிருக்கான். கூப்பிடறேன்!'' சாத்தியிருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்தார் பரந்தாமன். மறு கணமே வெளிப்பட்டான் சூரியா.

''வாங்க மிஸ். வெண்ணிலா! பெரிய பிஸினஸ் மேக்னட் வீடு தேடி வந்திருக்கீங்களே? என்ன விஷயம்?'' கேலியாகப் பேசியபடி

**உனக்கு எந்த மாதிரியான வாசனை பிடிக்கும்?**

**எனக்கு ''சீனி'' ''வாசனை'' பிடிக்கும்.**

**-சிவ.இராமலிங்கம்,**
**ஆத்தூர்.**





அமர்ந்தான். இருவரையும் தயக்கமாகப் பார்த்துவிட்டு சரோஜினியும், திவாகரும் வந்து பேசிவிட்டுப் போன விவரத்தை ஒன்று விடாமல் தெரிவித்தாள்.

''வர்ற ஞாயித்துக் கிழமை நிச்சயதார்த்தம்! அப்பாவோட ஸ்தானத்துல இருந்து நீங்கதான் எல்லா ஏற்பாட்டையும் கவனிச்சுக்கணும்.. குணசேகரன் அங்கிளுக்கும் போன் பண்ணப் போறேன். சந்துரு தம்பிகிட்ட சொல்லிடுங்கப்பா!

சூரியா சார்! நீங்க என்னோட வெல் விஷ்ஷர்! நிச்சயதார்த்தத்தை நல்லபடியா நடத்திக் கொடுத்து உதவணும். எங்களுக்கு உங்களை விட்டா.. வேற யாரு இருக்காங்க?''

பரந்தாமனுக்கு அதிர்ச்சியில் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. திகைத்து விழித்தபடி ஏதோ சொல்ல வாயெடுத்தவரை இடை மறித்தான் சூரியா.

''மிஸ். வெண்ணிலா! எல்லாத்தையும் நான் கவனிச்சுக்கிறேன். எனக்கு உங்க சந்தோஷம் தான் முக்கியம்! நான் ஆசைப்பட்டது படியே நீங்களும் உத்வேகமா உழைச்சு உசந்து காட்டிட்டீங்க...

நிச்சயமா சத்தியமூர்த்தி சாரோட ஆத்மா குளிர்ந்து போயிருக்கும். அடுத்த கட்டமா உங்க வாழ்க்கை!.... அதுவும் உங்க மனசுக்குப் பிடிச்சாப்பல அமையறதுலே... எனக்கு ரொம்பவே சந்தோஷம் வெண்ணிலா!'' முகபாவனையை சகஜமாக வைத்துக் கொள்வதற்குள் திணறிப் போய் விட்டான் சூரியா.

உள்ளூர மனசு நொறுங்கித் தூள் தூளாகிக் கொண்டிருந்தது. தனது வேதனையும், ஏமாற்றமும் ஒரு துளியளவு கூட குரலில் தொனிக்காமல் இருப்பதற்கு... அவன் பிரம பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது.

அவள் வெளியேறியதும்... கட்டிலில் பொத்தென்று குப்புற விழுந்து தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான் சூரியா.

அவனது தலைமாட்டில் வந்தமர்ந்த பரந்தாமன் மெல்ல அவனது தலைமுடியைக் கோதி விட்டார்.

''சூரி! எனக்கு எல்லாம் தெரியும்பா! தப்பு பண்ணிட்டியே? இத்தனை நாளா.. உன் மனசுல இருக்கிறதை வெளிப்படுத்தாம... மூடி மறைச்சது தப்பா போயிடுச்சே?

இப்பக் கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை சூரியா! வெண்ணிலாகிட்டே நான் பேசிப் பார்க்கட்டுமா?''

''ப்ச்! வேண்டாம் அப்பா! திவாகர் மேல அவளுக்குப் பிரியம் இருக்கிறதால தானே இதுக்கு சம்மதிச்சிருக்கா.. நீங்க எதையும் பேசி காரியத்தைக் கெடுத்துட வேண்டாம்.

நான் ஒரு 'வெல் விஷரா... நல்ல நண்பனாவே இருந்துட்டுப் போறேன். ஆனா ஒண்ணு! அவ குடியிருந்த இந்த இதயத்துல.. வேற யாருக்குமே இனி இடமில்லைப்பா.. அவளோட நினைவுகளோடவே

நான் வாழ்ந்துட்டுப் போறேன். எனக்கு குடுத்து வைக்கலைப்பா'' என்றபடியே தலையணையில் மீண்டும் முகம் புதைத்துக் கொண்டான் சூரியா.

'வேதனையில் விக்கித்து நின்றார் பரந்தாமன்'

## 21

ஞாயிற்றுக்கிழமை! சத்தியா புட் புரொடெக்ட்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்த பெண் தொழிலாளர்கள் அனைவரும் திரண்டு வந்திருந்தனர். திலகா, திவாகரோடு ஜம்பமாய் காரில் வந்து இறங்கினாள் சரோஜினி. வந்த உறவினர்களையும் நண்பர்களையும் வரவேற்று உபசரித்தனர் பரந்தாமனும், குணசேகரனும்...

விருந்துக்கான ஏற்பாடுகளை இழுத்துப் போட்டு மேற்பார்வை செய்து கொண்டிருந்தான் சூரியா.

''அண்ணி! சபை நிறைஞ்சிருக்கு. நல்ல நேரம் முடியறதுக்குள்ளே தாம்பூலத் தட்டை மாத்திக்கலாமா?'' வாயெல்லாம் பல்லாக கேட்டாள் சரோஜினி.

சிந்தூர வண்ணத்தில் ஊதா பட்டுக்கரை கொண்ட புடவையை அணிந்திருந்த வெண்ணிலா.. கூட்டத்தில் பார்வையால் துழாவினாள்.

நெற்றியில் பூத்திருந்த வியர்வையை கர்ச்சிப்பால் ஏற்றிக்கொண்டு கூடத்துத் தூணோரம் வந்து நின்ற சூரியாவின் மீது அவளது பார்வை பதித்தது.

தாம்பூலத் தட்டை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றாள் திலகா.

''சபையில நிறைஞ்சிருக்கிற பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணிக்கிறேன். தாம்பூலத் தட்டை மாத்தறதுக்கு முன்னே.. சரோஜினி அத்தைகிட்டேயும் திவாகர் அத்தான் கிட்டேயும் என்னோட சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக்க ஆசைப்படறேன்'' என்று கூறி விட்டு திவாகரை ஏறிட்டாள் வெண்ணிலா.

'சிறையில் உள்ள கைதிகளுக்கு, நானே தயாரித்த ஸ்வீட்டைத் தரப் போகிறேங்க...

'ஏண்டி... அவங்க அங்கே படுகிற தண்டனை போதாதா?'

-எம்.அசோக்ராஜா,
திருச்சி.





''உங்களை டாக்டராக்கணும்னு உங்கம்மா ஆசைப்பட்டாங்க. அந்த ஆசையை நிறைவேத்த எத்தனை தியாகங்கள் எங்கப்பா செஞ்சாரு தெரியுமா? சரி சொந்த தாய்மாமா செய்யக்கூடிய கடமை தானேன்னு எடுத்துக்கிட்டாலும் உங்க படிப்புச் செலவுக்கு ஏற்பட்ட கடனை அடைக்க எங்கம்மா தன்னோட சொத்தை வித்துத் தந்தாங்க..

இதோ திலகா அண்ணிக்காக... மாந்தோப்பையும் சிறுகச் சிறுக சேமிச்ச நகைகளையும் தாரை வார்த்தாரே எங்கப்பா? எல்லாத்தையும் மறந்துட்டு நீங்க பண்ணினீங்களே துரோகம்? அது எங்கப்பாவை மரணத்துல கொண்டு தள்ளிடுச்சே?

என்ன கேட்டீங்க? ஒரு நொண்டிப் பொண்ணைக் கட்டிக்கிட்டு காலம் முச்சூடும் எப்படி அழமுடியும்னு கேட்டீங்களே? ஞாபகம் இருக்கா?

ஒரு ஊனமுற்றப் பொண்ணை கட்டி வைச்சா.. என் மகனோட வாழ்க்கையே இருண்டு போயிடுமேன்னு பேசினீங்களே அத்தை? இப்ப அதே பொண்ணை நிச்சயம் பண்ண வந்துட்டீங்களே?

கொடுத்த வாக்கை மறந்துடறது பச்சோந்தி மாதிரி அப்பப்போ குணம் மாறிக்கிடறது இதெல்லாம் எனக்கும் எங்கப்பாவுக்கும் பிடிக்காத விஷயங்கள் ஞாயிற்றுக்கிழமை நிச்சயம் பண்ணிக்கலாம்னு சொல்லிட்டு நான் வாக்கு மாறிட்டேன்னு பார்க்கிறீங்களா? இப்போ இங்கே நிச்சயதார்த்தம் நடக்கத்தான் போகுது. என்ன கேட்டீங்க? உன் பொண்ணு நொண்டியாயிட்டா அவ தகுதிக்கேத்த வரனா பாரு அண்ணேன்னு எங்கப்பா மனசை உடைச்சீங்களே?

அந்த துக்கத்துல தானே அவரு போயிட்டாரு.. என் மனசுல நெருப்பைப் பத்த வச்சீங்களே? உத்வேகமா என்னை உந்தித் தள்ளி இந்தளவுக்கு அது உன்னை உசத்தி இருக்கு.. உங்களுக்கு நன்றி!

துக்கத்துல முடங்கி மூலையில சுருண்டு போகாம.. தாங்கி கட்டைகளை உதறிட்டு... தன்னம்பிக்கையையும், வைராக்கியத்தையும் ஊன்றுகோல்களாக்கி இன்னிக்கும் எல்லாரும் ஆச்சரியமா பார்க்கும்படி வலம் வர்ரேனே? அதுக்குக் காரணம் யாரு தெரியுமா? மிஸ்டர் சூரியா! இதோ.. சுட்டு விரலை நீட்டிக் காட்டினாள் வெண்ணிலா.

சத்தியமூர்த்தியின் படத்தைத் தொட்டு வணங்கிவிட்டு... திக் பிரமை பிடித்து நின்றிருந்த பரந்தாமனின் அருகே வந்தாள் வெண்ணிலா.

''அப்பா! எ... என்னை உங்க மருமகளா ஏத்துப்பீங்களா அப்பா?'' தயக்கமாய் ஏறிட்டாள்.

''அம்மாடி! உன்னையும் சூரியாவையும் ஜோடியா நிக்க வைச்சுப் பார்க்க மாட்டோமான்னு... ரொம்ப நாளா ஏங்கிட்டிருக்கேன் ராஜாத்தி!'' என்றதும் சட்டென்று கண்ணீர் மல்க அவரது கால்களில் பணிந்தாள் வெண்ணிலா. சரோஜினி குடும்பத்தினர் அவமானம் தாளாமல் விருட்டென்று வெளியேறினர்.

சூரியாவுக்கு... இழந்த சொர்க்கம் மீண்டும் கிடைத்தது போலிருந்தது. மட்டற்ற மகிழ்ச்சியில் ஜிவ்வென்று அந்தரத்தில் பறப்பது போலிருந்தது. சிவகாமிக்கு ஆனந்தத்தில் கண்ணீர் ஊற்றெடுத்தது. வானதி மகிழ்ச்சி தாளாமல் தோழியை அணைத்து கன்னத்தில்

முத்தமிட்டாள்.

''சூரியா! உங்க கிட்டே நான் தனியா அஞ்சுநிமிஷம் பேசணும்'' இருவரும் தோட்டத்தில்... மகிழ மரத்தின் அடியில் வந்து நின்றார்கள்.

''இப்படி ஒரு இனிய அதிர்ச்சி தருவேன்னு.. நான் கொஞ்சங்கூட எதிர் பார்க்கலை வெண்ணிலா! உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே நான் என் மனசைப் பறி கொடுத்துட்டேன் தெரியுமா? ஆனா.. ஆரம்பத்துல நீதான் என்னைப் பார்த்தாலே.. எரிச்சலா விலகிப் போனா''

''அதுக்குக் காரணம் பயம்! மொட்டா இருந்த மனசு உங்களைக் கண்டதும் மலர்ந்து மணம் வீசுச்சு.. பெரியவங்க திவாகருக்கு என்னைப் பேசி முடிவு பண்ணியிருக்காங்க... இந்தக் காதல் நடைமுறைக்கு சாத்தியப் படாதுன்னு.. எனக்கு.. என் மனசுக்கு கடிவாளம் போட்டு வச்சிருந்தேன். நான் காலை இழந்த ஊனமானப்போ..'' என்று அவள் பேசி முடிக்கும் முன் தன் வலதுகரத்தால் அவளது இதழ்களைப் பொத்தினான் சூரியா.

''ஊனத்தை ஊனமாக்கின பொண்ணு நீ! திவாகரும் சரோஜினியும் தான் மனசளவில ஊனமானவங்க... இனிமே அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதே வெண்ணிலா'' என்று உரிமையாய் அதட்டினான் சூரியா.'' ஸாரி சூரியா... சரி... இனிமே சொல்லலை. நான் விபத்துல சிக்கினதும் நீங்க துடிச்சதுடிப்பையும் தவிச்சதவிப்பையும் பார்த்தேனே? அப்பவே நான் புரிஞ்சுகிட்டேன்.

மூணு மாசத்துக்கு முன்னாடி நீங்க பாரினுக்குப் போனப்போ.. உங்கப்பாவுக்கு உடம்புக்கு முடியலை. வீட்டுல வேலைக்காரியும் வரலைன்னு சந்துரு தம்பி சொன்னதும்.. பத்தியச் சாப்பாடு செய்துட்டு அப்படியே அலங்கோலமா கிடந்த வீட்டை சுத்தப்படுத்தினேன்.

புத்தகங்களை அடுக்கி அலமாரியில வச்சப்போ.. ஒரு பழைய டைரியில இருந்து ஒரு போட்டோ கீழே விழுந்துச்சு. பார்த்ததும் அசந்துட்டேன். மாந்தோப்புல நான் கிளிக் குஞ்சை கூட்டில சேர்க்கிற மாதிரி தத்ரூபமா எடுத்திருந்தீங்க.. அப்பவே தெள்ளத் தெளிவா உங்க மனசைப் பத்திப் புரிஞ்சுகிட்டேன்.

என்னை உசத்திப் பார்க்கணும்னு ஆசைப்பட்டவர் நீங்க! எனக்குத் தூண்டுகோலா இருந்து உயர்த்தினீங்க.. பல 'ஹேண்டிகேப்டு'


நல்லபாம்பு (சாரைப்பாம்பிடம்) சட்டையை உரிக்கப்போகிறேன் கண்ணை மூடிக்கோ

-சிவ.இராமலிங்கம், ஆத்தூர்.






பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்த ஆத்ம திருப்தி எனக்கு கிடைச்சிருக்கே.. நன்றி சூரியா!

அலமாரியில இன்னொரு ஆல்பத்தையும் பார்த்தேன். பசுமையான மலைக்குப் பின்னாடி மாலை மாதிரி தெரியற வானவில்... பூக்களோட பிம்பம்... அப்பப்பா! என்ன அழகு? நேர்த்தி? உங்களுக்குள்ளே சிறந்த புகைப்படக் கலைஞன் இருக்கிறார்னு தெரிஞ்சுகிட்டேன்.

ஒளிஞ்சிருக்கிற திறமை வெளிப்படணும். வெளி உலகத்திற்குத் தெரிஞ்சு எல்லோராலும் நீங்க பாராட்டப்படணும். அதான் என் ஆசை!''




உடல் பலம் பெற, இழந்த சக்தியை மீண்டும் அடைய, களைப்பை அகற்ற அகத்திக்கீரை பயன்படும்.

-கே.ராகவி, வந்தவாசி.


''சொல்லிட்டீல்ல? அந்த ஆசையை நிறைவேத்திடலாம். என் வெண்ணிலா எனக்கு கிடைச்சுட்டா.. இனி என்னால எதையும் சாதிக்க முடியும்'' சிரித்தான்.

''நம்ம காதல் ஆத்மார்த்தமானது! புனிதமானது! அதான்.. உள்ளுக்குள்ளே காதலைப் புதைச்சுட்டிருந்தாலும் துளி கூட வெளிக்காட்டிக்காம... தூண்டுகோலா உறுதுணையா இருந்து ஒருத்தருக்கொருத்தரை உசத்திக் காட்டியிருக்கு... எனக்கு வேலையில.. பதவி உயர்வும் நல்ல அங்கீகாரமும் கிடைச்சிருக்கே.. அதுக்குக்காரணம் நீ தான்! நீ என் அழகு தேவதை.. என் இதயத்துல குடியிருந்து மௌனமா என்னை உந்தித் தள்ளினே... சின்னப் பையனை காப்பாத்தறதுக்காக உன் காலையே இழந்தியே?

நம்ம காதல் கை கூடாட்டியும் உன் நினைவுகளோடவே நான் வாழ்ந்து முடிச்சிருப்பேன். உன்னோட அழகு, நிதானம், கருணை, மனித நேயம் தன்னம்பிக்கை, வைராக்கியம், இரக்க சுபாவம், தியாக மனப்பான்மை.. என்னை அடிமையாக்கிடுச்சு வெண்ணிலா! ஐ லவ் யூ ஸோ மச்'' அவளது புறங்கையில் மென்மையாக முத்தமிட்டான்.

''நீங்க மட்டும் என்னவாம்? உங்க கண்ணியம், நேர்மை, திறமை, நிதானம், உயர்ந்த உள்ளம், தயாள குணம், பெருந்தன்மை.. எல்லாமே சேர்ந்து உங்களுக்கு என்னை அடிமையாக்கிடுச்சே? சூரியா! ஐ டூ லவ் யூ ஸோ மச்'' முகம் குங்குமாய் சிவக்க அவனது பரந்த மார்பில் தலையை சாய்த்தக் கொண்டாள் வெண்ணிலா. இந்த வெண்ணிலா.. வண்ணப் பூச்சூடிக் கொள்ளப் போகிறாள்..

சந்தோஷமாய் கிளைகளை அசைத்து மகிழம் பூக்களை அட்சதையாய் தூவி வாழ்த்தியது அந்தத் தோட்டத்து மகிழ மரம்!

★★முற்றும்★★